Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை காணப்படுவதற்கான சாத்தியம் அதிகம்
33°C 27°C

பக்கம் 46 | சுடர்: 28 | கதிர்: 153 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 15, ஞாயிறு 28.04.2013

**உள்ளூர்**

பக். 06
40 வருடங்கள் கவனிக்கப்படாத வீதி

**விளையாட்டு**

பக். 11
வலய மட்ட கபடிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியா சம்பியன்.

**கருத்து**

பக். 07
தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும்.

**சூரியகாந்தி**
ஞாயிறு சிறப்பிதழ்.

**அரசியல்**

பக். 01
கை கொடுத்த தமிழர்கள்

**கட்டுரை**

பக். 02
மின்கட்டண உயர்வு அரசுக்கு ஆபத்து

**வாழ்க்கை**

பக். 13
வெற்றி பெறலாம் வாங்க... வாழ்க்கையை மாற்றும் தொடர்

# கூட்டமைப்பு மீது மஹிந்த சாடல்

## பேச்சு நின்று போனதற்கு அரசு காரணமில்லை. அதற்கான கதவு எப்போதும் திறந்தே இருக்கிறது என்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 28



இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுக்கள் நின்றுபோயிருப்பதற்கான முழுப்பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்க வேண்டும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சகோதரப் பத்திரிகையான சுடர் ஒளிக்குத் தொலைபேசி மூலம் சிறிய செவ்வி ஒன்றை வழங்கினார்.

''பேச்சுக்களுக்கான கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன. ஆனால் அதனை கவனத்தில் கொள்ளாமல் வீணாக அரசைக் குற்றஞ் சாட்டுவது அர்த்தமற்றது'' என்றார் மஹிந்த.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவு தின நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தன், தீர்வுப்பேச்சு நின்றுபோனமைக்கு இலங்கை அரசே முழுப் பொறுப்பு என்று கூறியிருந்தார்.



> அரசு-கூட்டமைப்புக்கு இடையே பேச்சுகளில் ஏற்பட்ட உடன்பாடுகளில் இருந்து நாம் ஒருபோதும் விலகவுமில்லை, விலகவும் மாட்டோம். பேச்சு நின்று போனதற்கு அரசே முழுப் பொறுப்பு.

### இழுத்தடிப்பு

''பேச்சு நின்றுபோனதற்கு அரசை குற்றம் சாட்டுவது நீதியானதல்ல. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வராமல் இழுத்தடிப்புச் செய்து கொண்டு சம்பந்தன் இப்படிப் பொது இடங்களில் குற்றம்சாட்டுவதும் நியாயமானதல்ல. நாடாளுமன்றக் கட்டமைப்பு என்பது எல்லோரினதும் நம்பிக்கைக்கு உரியது என்பதனை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பது மஹிந்த ராஜபக்ஷவின் சொத்தல்ல. அது குறித்து அவர்கள் பயப்படவேண்டிய அவசியம் இல்லை,'' என்றார் மஹிந்த.

பேச்சுக்கான கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதன் மூலமே நின்றுபோன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். அப்படி முன்வராமல் வீணே அரசை குற்றம் சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தெரிவுக்குழுவுக்கு வராமல் பேச்சுக்கள் நின்று போனதற்கு அரசைக் குற்றம்சாட்டுவது முன்னுக்குப் பின் முரணானது,'' என்றும் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

### நாளையே தயார்

''கூட்டமைப்பின் தலைவர் இந்த யதார்த்தத்தைச் சிந்திக்க வேண்டும். கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வந்தால் நாளைக்கே பேச்சை ஆரம்பிக்கலாம். அதில் நான் உறுதியாக உள்ளேன்,'' என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

(உ-சி) K

## புலிகளுக்கு புதிய 'தலை'



கொழும்பு, ஏப். 28

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தலைவர் பிரபாகரனின் பின்னர் புதிய தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் 'திணமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவரைக் கைது செய்ய சர்வதேச பொலிஸாருடன் இணைந்து இலங்கைப் புலனாய்வுப் பிரிவு இந்தோனேஷியாவில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது என்றும் கூறுகின்றது.

மேலும் : பக். 02

## கேப்பாபுலவிலும் 526 ஏக்கர் பறிப்பு

முல்லைத்தீவு,ஏப். 28


முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில்,கேப்பாபுலவு கிராமத்தில் 526 ஏக்கர் காணி படையினருக்குச் சுவீகரிக்கப்படுவதாக அறி விக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல்கள் அந்தப் பிரதேசத்தில் ஒட்டப்பட்டுள்ளன.

### சொந்த ஊரில் அகதி

ஏற்கனவே கோம்பாவில் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக 250 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்த இடத்திலேயே அகதி முகாம் அமைத்து குடியமர்த்தப்பட்டுள்ளன.

இதில் 136 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எவையும் இன்றி நிர்க்கதி நிலையில் உள்ளன.

மேலும் : பக். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ ஆட்சியை விரைவில் கலைப்போம்

## சாவகச்சேரியில் ரணில்

தென்மராட்சி,ஏப்.28

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ராஜபக்ஷ ஆட்சியை துரத்தும் காலம் நெருங்கி வருகிறது. இவ்வேளை நாட்டில் உள்ள அனைத்து எதிரணியினரும் ஒன்றுபட்டு ஓரணியில் நின்று மஹிந்த ஆட்சியைத் துரத்த வேண்டும். போர் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னமும் நாட்டில் ஜனநாயகம் மலரவில்லை. ஜனநாயகச் செயற்பாடுகள் மலர்ந்தாலே அரசியல் தீர்வு நம் அனைவருக்கும் கிடைக்கும். இவ்வாறு நேற்று சாவகச்சேரி நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கு எதிராக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஜூன் மாதம் போராட்டங்களை நடத்தவுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் எமது கட்சிக்கு ஆதரவு நீண்டகாலமாக இருந்து வருகிறது. சாவகச்சேரிப் பகுதியில் எனது நண்பரும் கட்சி ஆதரவாளருமான முத்தையா என்பவர் தேர்தல் காலத்தில் தனது வீட்டையே கட்சி அலுவலகமாகப் பயன்படுத்தத் தருவார்.

பயங்கரவாத நடவடிக்கைகளால் எமது கட்சியின் செயற்பாடுகள் வெகுவாகக் குறைந்துள்ளன. இதனைத் தற்போது அதிகரிக்கும் செயற்றிட்டங்கள் எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை, நகர சபை போன்ற இடங்களில் வாழும் கீழ் மட்ட மக்கள் மத்தியிலிருந்து கட்சியின் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்கா, ரவி கருணாநாயக்கா, சுவாமிநாதன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.



சாவகச்சேரி பிரதேச சபை ஐ.தே.க. உறுப்பினர் குமார் சர்வானந்தா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சாவகச்சேரி தொகுதிக்கான கட்சிச் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் குமார் சர்வானந்தா கட்சியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டார். அத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பத்துப் பேர் பிரதேச செயற்குழு உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சிக்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசாவைச் சந்தித்தும் பேசினார். (த-9-6)

## 30 இந்திய மீனவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார்,ஏப்.28

இந்திய மீனவர்கள் 30 பேரையும் தொடர்ந்து மே மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் 30 இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் அவர்கள் மீண்டும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த 30 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை யூட்சன் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த 30 மீனவர்களில் சுமார் 7 பேர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தினுள் உண்ணாவிரதமிருக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

தம்மை விடுதலை செய்யும்படி அவர்கள் கோரி உண்ணாவிரதமிருந்தனர்.

குறித்த 30 பேருக்கும் வழங்கப்பட்ட மதிய உணவை அவர்கள் உண்ண மறுத்தனர். இந்த நிலையில் அங்கு வந்திருந்த இந்திய தூதரக அதிகாரிகள், மன்னார் பிரஜைகள் குழுவின் முக்கியஸ்தர்கள் குறித்த மீனவர்களுடன் பேச்சில் ஈடுபட்டு அவர்களின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். (த-12)



முஸ்லிம்களின் மீள் குடியமர்வு, விடுதலைப் புலிச் சந்தேக நபர்களின் விடுதலை, காணாமற் போனோரின் விவகாரம், வடக்கு மாகாண சபைத் தேர்தல், இணக்க அரசியலில் முஸ்லிம்கள் பெற்றுக்கொண்டவை என்பன குறித்து நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வி நாளைய உதயனில் வெளியாகும்.



நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுக் காலை யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு சென்று மேல் நீதிமன்ற நீதிபதிகள், யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (த)

## ரணில் இன்று மன்னாருக்கு

மன்னார்,ஏப்.28

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இன்று (ஞாயிறு) மன்னாருக்கு வருகை தரவுள்ளனர்.

மன்னாருக்கு வரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மன்னார் நகர சபை மண்டபத்தில் மக்களுடன் பொது சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர். இதன்போது மீனவ சங்கப் பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்கள், பொது மக்கள், வர்த்தகர்கள் ஆகியோருடன் சந்திப்பை மேற்கொள்ளும் அவர்கள் தொடர்ந்து மன்னார் மூர் வீதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் முஸ்லிம் மத பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளனர். (ஓ-12)

## விபத்தில் சிறுமி சாவு

வவுனியா, ஏப்.28

எரிபொருள் ஏற்றிவந்த வாகனம் வீதியின் அருகே நின்ற சிறுமியை மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே சிறுமி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை வவுனியா, பண்டாரிக்குளம் சந்தியில் இடம் பெற்றது. இதன்போது சிவனேஸ்வரன் - கஜினா(வயது-9) என்ற சிறுமி உடல் சிதறி உயிரிழந்தார்.

பாட்டியாருடன் கடைக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வவுனியாவில் இருந்து வந்த வாகனம் இவரை மோதியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-435-ரி)

## வடக்குத் தேர்தலுக்கு அரச தரப்பினர் தயார்

### வேட்பாளர் தெரிவு விரைவில்

கொழும்பு,ஏப்.28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சிசார்பாகப் போட்டியிடப் பொருத்தமானவர்களிடமிருந்து வேட்பாளர் விண்ணப்பங்களை விரைவில் கோரவுள்ளதாகச் சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

**38 உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமையும் வடக்கு மாகாண சபைக்கு இரு 'போனஸ்' ஆசனங்கள் ஒதுக்கப்படும்.**

இந்தத் தேர்தலில் யாழ்.மாவட்டத்துக்கென 19 பேரும், மன்னார் மாவட்டத்துக்கென 8 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கென 8 பேரும், வவுனியா மாவட்டத்துக்கென 9 பேரும், கிளிநொச்சி மாவட்டத்துக்கென 7 பேரும் சுதந்திரக் கட்சி சார்பான வேட்பாளர்களாக நிறுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமது கட்சி சார்பாகப் போட்டியிட விரும்புவோர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான பத்திரிகை விளம்பரம் ஒன்று மிக விரைவில் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

38 உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமையும் வடக்கு மாகாணசபைக்கு இரு 'போனஸ்' ஆசனங்கள் ஒதுக்கப்படும். யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 16 உறுப்பினர்களும், மன்னாரிலிருந்து 5 உறுப்பினர்களும், வவுனியாவிருந்து 6 உறுப்பினர்களும், முல்லைத்தீவிலிருந்து 5 உறுப்பினர்களும், கிளிநொச்சியிலிருந்து 4 உறுப்பினர்களும் என ஒதுக்கப்பட்ட போதிலும் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடு அடிப்படையில் ஆசன ஒதுக்கீடு தீர்மானிக்கப்படும். (த)

## கேப்பாபிலவிலும் 526 ஏக்கர் பறிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை வசதிகள் இல்லை, உட்கட்டுமானவசதிகள் இல்லை, சமுர்த்தி நிவாரணம் இல்லை, தொண்டு நிறுவனங்களது உதவிகளோ, தற்காலிக வீடுகளோ இதுவரை கிடைக்கவில்லை. ஒருவேளை உணவுக்கே திண்டாடுகிறோம் -என்கின்றனர் அந்த மக்கள். இந்த குடிசைகளைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவிக்கையில்;

''போரால் அதிகளவு பாதிக்கப்பட்டவர்களே இங்கு இருக்கின்றனர். பெண் தலைமை குடும்பங்கள், ஊனமுற்ற குடும்பங்கள், முன்னாள் போராளிகளாக இருந்த குடும்பங்கள் என்று வாழ்வாதார நிலையில் பெரும் நெருக்கடிகளே அதிகம்.

குளிப்பதற்கோ, குடிப்பதற்கோ தண்ணீர் இல்லை. இதற்காக நாங்கள் தினமும் 300 மீற்றர் வரை அலைய வேண்டும். மருத்துவ, கல்வி சேவைகளுக்கு அதைவிட நெருக்கடி நிலையே எதிர்கொண்டுள்ளோம். முன்பள்ளி பருவத்தில் 15 வரையான குழந்தைகள் உள்ளனர். இவர்கள் இன்று வரை மர நிழலிலேயே கற்று வருகின்றனர். மலசலம் கழிப்பதற்கு கூட இரவு வரும்வரை காத்திருக்கிறோம்- என்கிறார் அந்தப்பெண்.

இதே கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

''நான் ஓர் அங்கத்தவர். எனக்கு அரச, அரச சார்பற்ற எந்த உதவிகளும் இல்லை. காரணம் ஓர் அங்கத்தவர் என்பதே. எனக்கு எந்த அரச உதவிகளையும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் உயர்பாதுகாப்பு வலயத்தில் எனக்கு 5 ஏக்கர் காணியுள்ளது. அதை என்னிடம் ஒப்படைத்தாலே போதும்'' - என்றார்.

சொந்த இடத்தில் நாங்கள் அகதிகளாக இருக்கிறோம். எங்களை ஏன் என்றும் கேளாது அரச தனது பாட்டுக்கு காணிகளை அபகரிக்கிறது. ஏன் இந்த அநியாயம் என்று கேள்வி எழுப்புகிறார் அந்தப்பகுதியில் முடியாதிருக்கும் வயதான பெண் ஒருவர்.

தனக்கு துணைக்கு யாரும் இல்லை என்று குறிப்பிடும் அந்த மூதாட்டி படுத்துறங்குவதற்கு ஒரு குடிசையை அமைப்பதற்கு கூட எனக்கு உதவ யாரும் வரவில்லை என்று கவலை கொள்கிறார்.

எது எப்படியோ காணி எடுத்தல் அலுவலகம் சார்பாக முல்லைத்தீவு கேப்பாபுலவில் 526 ஏக்கர் காணி பறிக்கப்படுகிறது. இவற்றில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளும் உள்ளடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம், ஏப்.28

நவ மகாஜன சிற்பி தெ.து. ஜயரத்தினத்தின் நூறாவது பிறந்தநாள் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-13)

## புலிகளுக்கு புதிய 'தலை'

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீலன் என அடையாளப்படுத்தப்படும் இந்தப் புதிய தலைவர், கேபி என்ற குமரன் பத்மநாதனுக்கு அடுத்த நிலையில் ஆயுதக் கடத்தலுக்குப் பொறுப்பாக இருந்தார் என்றும் இவரே இப்போது புலிகள் அமைப்பை வழிநடத்துகிறார் என்றும் அந்தச் செய்தி கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கடல் வற்றும் என்று காத்திருந்த கொக்கின் நிலை வேண்டாமே...!

தமிழ் மக்கள் தங்கள் அவலங்களை அனைத்துலக மயப்படுத்துவதால் மட்டும் சாதகமான பயன்களை பெறுவது சாத்தியமாகாது. சம காலத்தில் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்–

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் , தமிழர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க புத்திஜீவிகளில் ஒருவருமான சி.வி.விக்னேஸ்வரன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையினால் நடத்தப்பட்ட தந்தை செல்வாவின் நினைவு தின விழாவில் தாம் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் போதே , அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பேரழிவுகளுக்குப் பின்னர் எஞ்சி உள்ளதை மீட்டுப் பாதுகாப்பதிலேயே அவர்களின் எதிர்காலம் தங்கி உள்ளது. தனிநபர்கள் என்ற வகையிலும் சரி.அரசியல் கட்சிகள் என்ற வகையிலும் சரி கூட்டு அணுகு முறை ஒன்றை வகுக்க வேண்டியது மிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் நீதியரசர் எடுத்துக்கூறிய பின்வரும் கருத்துக்கள் கூர்ந்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியன.

♦போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் வடக்கு மாகாணத்தின்( எல்லா இடங்களிலும்] இராணுவப் பிரசன்னம் குறைந்த பாடாக இல்லை.

♦அங்கு பணியாற்றும் ஆளுநர் முன்னாள் இராணுவ அதிகாரி.

♦மத்திய அரசிடம் உள்ள பெருவாரியான அதன் அதிகாரங்களுக்குப் பாதிப்பு உண்டாகும் என்பதனால், ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்படும் நிர்வாகம் பதவிக்கு வருவதனை ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் சீரணிக்கத் தயங்குகிறார்கள்.

♦மக்களால் தெரிவு செய்யப்படும் மாகாண சபை , ஆளுநர் பதவியிலிருந்து இராணுவ அதிகாரிகளை நீக்கக் கோரலாம். அதே போன்று இராணுவத்தினரை முகாம்களில் மட்டும் வைத்திருக்க வேண்டும் என்று கோரலாம்.

♦மத்திய அரசாங்கத்தின் ஒடுக்குமுறைத்திட்டங்களுக்கு குந்தகமான சூழ்நிலை ஏற்படுவதை அரசாங்கம் ஒரு போதும் விரும்பமாட்டாது.

♦தமிழர்களுக்குச் சேர வேண்டிய நியாயபூர்வமான உரிமைகளை வழங்கினால் அது பிரிவினைக்கான படிக்கல் ஆகிவிடும் என்று சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் அஞ்சுகிறது. இதனை நியாயபூர்வமாகச் சிந்திக்கின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

♦பிரிவினையில் நாட்டம் காட்டுவோரை அதிலிருந்து தடுப்பதற்கென கைக்கொள்ளப்படும் அடக்குமுறைகள்–

பாதிக்கப்படும் மக்களுக்கு பிரிவினை மாத்திரமே ஒரு தீர்வாக இருக்க முடியும் என்று அனைத்துலகத்தை நம்பச் செய்யும் சாத்தியம் உண்டு.

மேற்கூறப்பட்ட இப்போதைய அரசியல் க்ளநிலையை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றி, தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்க்கை நிலையை மாற்றுவதற்கான பல வழிகளை– மாற்றுச் சாத்தியங்களை– ஒரு வகையில் சில தந்திரோபாய உத்திகளை– முன்வைத்த முன்னாள் நீதியரசரின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

உள்ளக சுய நிர்ணய உரிமையை விட, வெளியக சுயநிர்ணய உரிமையே பொருத்தமான தீர்வு என்று, பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை கொள்ளும் வாய்ப்பு உண்டு என்பதனையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி –

தமிழ் மக்கள், முஸ்லிம் மக்களோடு இணைந்து அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தேவையையும் அழுத்திக் கூறியுள்ளார்.

மொத்தத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லிம் மக்களும், கிறிஸ்தவ மக்களும், இந்து மக்களும், ஏன் பௌத்த மத தமிழ் பேசும் மக்களும் ஒன்று சேர்ந்து கரம் கோர்த்து முன்னோக்கிப் பயணிக்கும் ஒரு வழியைக் கண்டறிய வேண்டும் என்ற அவரது கருத்து ஊன்றிக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

எனினும்–

ராஜீவ்–ஜே.ஆர் ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்ட வடக்கு–கிழக்கை நீதிமன்றத்தின் ஊடாகப் பிரித்த இலங்கை அரசுக்கு முன்னாள் நீதியரசரின் யோசனைகள் காதில் ஏறுமா? அதனூடாக மூளையைத் தொடுமா? என்பது மிகப் பென்னம் பெரிய வினாவே.

ஆனாலும், உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை தொடர்வதில் இருந்து பின்னோக்கி செல்லக்கூடாது என்பதனை மனதில் கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத தேவை தற்போது எழுந்துள்ளமை யதார்த்தமான உண்மை.

கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்த கொக்கு, உடல் வற்றி செத்ததாம் என்ற முதுமொழியை, இந்த வேளை மனதில் இருத்தி செயற்பட வேண்டிய தவிர்க்கமுடியாத வேளை நெருங்குகிறது என்பது தப்பன்று.

# மாதகல் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள்; நடவடிக்கை எடுக்க கோரும் தொழிலாளர்

வலி. வடக்கு, ஏப். 28

மாதகல் கடற்பரப்பில் சிறிய படகுகளில் இந்திய மீனவர்கள் வந்து தொழில் செய்வதால் மாதகல் கடற்றொழிலாளர்கள் பாதிப்படைகின்றனர் என்று மாதகல் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இது வரைகாலமும் றோலர்களில் வந்து மாதகல் கரையில் இருந்து சுமார் இரண்டு மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் தற்போது வத்தைகள் மற்றும் சிறிய படகுகளில் மாலை வேளைகளில் வந்து தொழில் செய்கின்றனர்.

அத்துடன் தமது வலைகளையும் சேதப்படுத்திச் செல்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இலங்கை கடற்றொழில் திணைக்களத்தால் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்துவதுடன் தொழிலுக்கு இடையூறாகவும் நடந்து கொள்கின்றனர் என்றும் கூறுகின்றனர்.

மாதகல் கடற் பிராந்தியத்துக்கு பொறுப்பாக இருக்கும் கடற்படைத் தளபதியிடம் இந்த விடயம் குறித்து முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ம-86)

# காற்றோட்ட வசதியின்றிக் கடைகள் உரிமையாளர் தீர்வுதரக் கோரிக்கை

## யாழ்.நவீன சந்தை வியாபாரிகள் கடையடைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.நவீன சந்தைப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் ஒரு பகுதியினர் தமது கடைகளில் போதிய காற்றோட்ட வசதிகள் இல்லாத நிலையையும் தொழில் நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்படுவதையும் காரணம் காட்டி நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை கடை அடைப்புச் செய்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.



யாழ்.நவீன சந்தைப் பகுதியில் 2 மாதங்களுக்கு முன்னர் கடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அவற்றில் பாதிக்கப்பட்ட கடைத்தொகுதி உரிமையாளர்கள் தமக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து தருமாறு கடைகளை அடைத்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குறித்த கடைத் தொகுதிகளுக்கு முன்பாக 27 கடைத் தொகுதிகள் உள்ளன. குறித்த கடைத் தொகுதிகள் மூடி அடைக்கப்பட்டதால் நுகர்வோர் அந்தக் கடைகளை நாடுவதில்லை. இதனால் வருடக் கணக்கில் தொழில் புரிந்து வரும் பழக் கடை, வெற்றிலைக் கடை, பனம் பொருள் விற்பனை நிலையங்கள், மரக்கறிக் கடைகள் ஆகியன வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போதிய காற்றோட்ட வசதிகள் இல்லாமையால் மிகவும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கடைத் தொகுதிகளைக் காற்றோட்டமாகவும், சாதாரண தொழில் நடவடிக்கைக்கு ஏற்ற வகையிலும் மாற்றி அமைத்துத் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-13)

# ‘ரெலிகொம்’ சலுகை

வடமராட்சி, ஏப்.28

புத்தாண்டை ஒட்டி பழைய தொலைபேசி இணைப்புக்களைப் புதுப்பித்துக்கொள்ள விசேட சலுகையை ரெலிகொம் நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

ரெலிக்கொம் நிறுவனத்திடம் இருந்து மெகாலைன் மற்றும் சிட்டிலிங்க் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்புக்களைப் பெற்று அவற்றை செயற்படுத்தாது கைவிட்ட பாவனையாளர்கள் இவற்றை மீளப் புதுப்பிக்கவே விசேட சலுகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

செயற்படுத்தப்படாது உள்ள குறிப்பிட்ட தொலைபேசி இணைப்புக்களைக் கொண்டிருப்போரின் நிலுவைத் தொகைக்கு விசேட கழிவு வழங்கவும் துண்டிக்கப்பட்ட தொலைபேசிகளுக்கு கட்டணமின்றி மீள இணைப்பைப் பெற்றுக் கொள்ளவும் இன்ரநெற் வசதியற்ற மெகாலைன் தொலைபேசிகளுக்கு அதிவேக இன்ரநெற் வசதியை ஆரம்பக் கட்டணமின்றிப் பெற்றுக் கொள்ளவும் இந்த விசேட சலுகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட மேம்படுத்தல் திட்டம் நாளை மறுதினம் 30 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.28

மாருதப்புரவீகவல்லியால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ஏழு விநாயகர் கோவில்கள் மீது பொ.கனகரத்தினத்தால் பாடப்பெற்ற ஆயிரம் பாடல்கள் கொண்ட விநாயகர் பாமாலை எனும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அழகொல்லை பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கி, காங்கேசன்துறை கிளை முகாமையாளர் தி.செந்திநாதன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்த்துவார். (ம)

# பொதுக் கூட்டம்

வலி. வடக்கு, ஏப். 28

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணபிள்ளை கமலராணி தலைமையில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் எதிர்கால அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் சம்பந்தமாக இதில் கலந்துரையாடப்படவுள்ளது.

(ம-86)

# குறிகாட்டுவான் சென்ற பஸ் இடைநடுவில் பழுதானது

## கொடும் வெயிலில் தவித்தனர் பயணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு குறிகாட்டுவான் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் பெருங்காட்டுச் சந்திக்கு சிறிது தூரத்தில் சுடலைமடத்தடிக்கு சமீபமாக பழுதடைந்தது.

இதனால் நெடுந்தீவுக்குச் செல்வதற்காக பயணித்த பிரயாணிகள் சுமார் 35 பேர் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு செல்ல முடியாத நிலையில் தமது பொருள்களையும் இறக்கி வைத்தபடி நடு வீதியில் அந்தரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இவர்கள் தமது பயணத்தை தொடர வேறு வாகனங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் இனி இப்போதைக்கு பஸ்கள் வராது. எப்படியாவது போங்கள் என்று இ.போ.ச.பஸ் ஊழியர்கள் தெரிவித்ததாக பொது மக்கள் தெரிவித்தனர்.

பஸ் பழுதடைந்த இடத்தில் இருந்து குறிகாட்டுவான் துறைமுகம் சுமார் மூன்று மைல்கள் தூரம் இருந்த நிலையில் இவ்வாறு கூறியது வேதனை அளிப்பதாக மக்கள் கூறினர்.

கடும் வெய்யிலில் துறைமுகத்துக்குச் செல்ல முடியாது மக்கள் திண்டாடினர். குறித்த நேரத்துக்கு சென்றால்தான் நெடுந்தீவுப் படகைப் பிடிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வழமையாகப் பழுதடைந்த பஸ்களையே குறிகாட்டுவானுக்குத் தொடர்ந்தும் சேவைக்கு அனுப்புவதாகவும் அடிக்கடி இதுபோன்ற பிரச்சினைகள் இடம்பெறுவதாகவும் மக்கள் கூறினர். இந்தச் சேவையில் இயந்திரக் கோளாறுகள் அற்றதான நல்ல நிலையில் உள்ள பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பஸ்கள் இடைநடுவில் பழுதடையும் பட்சத்தில் நெடுந்தீவு மக்கள் படகை தவறவிட்டு மறுநாள் வரை துறைமுகப் பகுதியில் தரித்து நிற்கவேண்டி ஏற்படும் என்றும் கவலை தெரிவிக்கின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய திருப்பணி வேலைக்கு ஒப்பந்தகாரர் தேவை

வரணி வடக்கு, கும்பிட்டான் புலம் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் களஞ்சிய அறை, பாகசாலை (மடப்பள்ளி அறை), கருமபீடம், குருக்கள் அறை, உள் வீதிக் கொட்டகைத் தூண்கள், சுற்றுமதில், மணிக் கூட்டுக் கோபுரம், வெளிமண்டபம் போன்ற திருப்பணி வேலைகளைச் செய்வதற்கு பொருத்தமான ஆலய திருப்பணி வேலைகளை செய்யும் ஒப்பந்தகாரர்களிடம் விண்ணப்பம் கோரப்படுகின்றது. ஆலயத்துக்கு நேரில் வந்து பரிபாலன சபையினருடன் தொடர்பு கொண்டு வேலைத்திட்டங்களைப் பார்வையிட்டு கூலித் தொகைக் கணக்கைத் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம். கட்டடத்திற்கான பொருள்கள் வழங்கப்படும்.

பரிபாலன சபை
கும்பிட்டான் புலம் கற்பகப் பிள்ளையார் ஆலயம்,
வரணி வடக்கு, வரணி. (36457)(6.7.11)

---

முன்அனுபவம் சான்றிதழ் அவசியமில்லை!!!

## அவசர UAE அபுதாபி தேவை

இயற்கை வனப்பு மற்றும் தோட்ட வேலை செய்ய 100 ஊழியர்கள்
**மாத அடிப்படைச் சம்பளம் 900திர்ஹம்**
9மணி நேர வேலை(1மணி ஓய்வுடன்) ரூ.32,500
மேலதிக நேரத்தில் சுதந்திரமாக வேலை செய்யலாம்

**தகுதிகள்:** வயது 21 முதல் 35 வரை, ஆஜானபாகுவான உடல்.

**நலன்கள்:** வாரத்திற்கு 6 நாள்கள், தங்குமிடம் போக்குவரத்து,
மருதுத்துவ வசதி-விடுமுறை ஏனையவை UAE ஊழியர் சட்டப் பிரகாரம், 2ஆண்டு களின் பின் தாயகம் திரும்ப விமானப் பயணச் சீட்டு.

*தயவுசெய்து உங்கள் பாஸ்போர்ட், 6 புகைப்படப் பிரதிகள்,ஒரு முழு உருவப் படத்துடன் நேரில் எங்கள் அலுவலகம் வந்து உடனடிப் பயணத்துக்கு தயாராகுங்கள்.* (சி/9249)(5.6)

**SKY KING TRAVEL**
முதல் மாடி, 17, மாளிகாகந்தை ரோடு, மருதானை, கொழும்பு-10.
Phone : 011 269 0197
mobiles: 072972 9438/077 048 6848 /077305 8849
SLBFE Approval No. 1454/01/13 Government Approved Charges 50,652/=

---

## துயர் பகிர்கின்றோம்



மக்கள் வங்கி பிராந்திய
தலைமைக் காரியாலய
உத்தியோகத்தர்
ந.தனேஸ் அவர்களின்
அன்புத் தந்தை
**சதாசிவம் நரேந்திரன்**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்
தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் சங்கம், மக்கள் வங்கி,
பிராந்திய தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாணம். (C/8437)(6.11)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**நல்லையா லட்சுமி**
(ஆனையிறவு உப்பளம்)
மலர்வு:- 10*05*1929
உதிர்வு:- 30*03*2013

கடந்த 30.03.2013அன்று இறைவனடி சேர்ந்த எமது குலவிளக்கின் மறைவினால் துயருற்ற போது எம் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (29.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

163 ஆம் கட்டை.
உமையாள்புரம்.

குடும்பத்தினர்.
(யோகம்)

---

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கில் மருதடித்துறை வீதியில் (பிரதேச சபைக்கு அருகில்) 4 பரப்புக் காணியுடன் 3 அறை வீடு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 077 952 7569, 077 832 7219.
(தரகர் தேவையில்லை விலை பேசித் தீர்மானிக்கலாம்) (36393) (45.6.7)

## TUITION

By an experienced Graduate English Teacher. Home Visiting Preferable.
(238461) (45.6) Contact: 077 381 5579

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு கற்பக பிள்ளையார் கோவில் வீதியில் (500 m தொலைவில்) அமைந்துள்ள காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 075 613 9733 (36393) (45.6.7)

## Toyota Allion Brand New - 2013



G Plus Package - `O` Milage Pearl white Belge Indian for Electric Sheet Multi function With special Features 2013 வைத்தியரின் சொந்தப் பாவனைக்கு இறக்குமதி செய்யப்பட்டது.
விலை 64.75 LKS (சி/0253) (45.6)
கொழும்பு -Tel- 071 440 6103

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் மகாஜனக் கல்லூரி வீதியில் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம்.
தொலைபேசியில் தொடர்புகொண்டு April 28, 29,30 May 1, 2 திகதிகளில் நேரில் வரவும்.
தொடர்பு: 077 690 3287 (சி/0254) (45.6)


---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையில் பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வுபெற்று 26.04.2013 இல் இறைபதமடைந்தவருமாகிய
**சதாசிவம் நரேந்திரன்**
அவர்களின் பிரிவால் துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையினர். (36470)(6.7.11)

---



## டபிள் நந்தி கூரை ஓடுகள்

- உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
- ஒரு கூரை ஓட்டின் நிறை2.7 கிலோ கிராம்
- நவீன தொழிநுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
- கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
- 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
- வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்
- இலங்கை முழுவதும் முகவர்கள் உள்ளனர்

**கஸ்தூரி கூரை ஓடு தொழிற்சாலை**
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி:
0770257800 / 031 2258174 / 031 2259669

---

# இலங்கையின் முதன்மையான வர்த்தகப் பெயர்

### தேடுவது நீங்களாக இருக்கலாம்

நாட்டின் வலிமை மிக்க வர்த்தகப் பெயர் என்ற வகையில் இலட்சக்கணக்கான இலங்கை மக்களின் இதயங்களில் அழியாத இடத்தைப் பிடித்துள்ள சிங்கர் ஸ்ரீலங்கா, பல கோடி பெறுமதியுள்ள சம்சுங், ஹித்தாச்சி, பிலிப்ஸ், வேர்ல்பூல் மற்றும் கென்வூட் உள்ளிட்ட உலகப் புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களிலான தரமுயர்ந்த வீட்டுப் பாவனைச் சாதனங்களை வழங்குகின்றது. 1851இல் முதலாவது தையல் மெஷின் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமான எமது நம்பிக்கையான தரச்சிறப்பு எமது அதிநவீன உற்பத்தி வசதிகளின் துணையுடன் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. எமது உப நிறுவனங்களில் ஒன்றான சிங்கர் ஃபினான்ஸ், சகல மட்டங்களையும் சேர்ந்த இலங்கை மக்களுக்குப் புதுமையான நிதிச் சேவைகளை வழங்குவதன் மூலம் நுகர்வுச் சந்தையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சிங்கர் 160 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இணையற்ற வரலாற்றுடன் உலகளாவிய சந்தையில் முன்னணி வகிக்கிறது.

சிங்கர் தரச்சிறப்பின் அடுத்த தலைமுறையில் இணைந்துகொள்பவர் நீங்களா?

## கிளைத் தலைவர்

**யாழ்ப்பாணம்**

சிங்கர் நிறுவனத்தில் இப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட விரும்புபவர்கள், சம்பந்தப்பட்ட தொழிலில் (குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு) ஐந்து வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் முகாமைத்துவத் தரத்திலானதாக இருக்க வேண்டும். அவர் சகல மட்டங்களிலும் வியாபாரச் சமூகத்தினருடன் நன்கு உறவாடக்கூடியவராகவும் சுய ஊக்கத்தின் பேரில் செயற்படுபவராகவும் தனது ஊழியர்களை வழிநடத்த உதவும் சிறந்த தலைமைத்துவப் பண்பைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும். வைப்புக்களைத் திரட்டுவதில் அனுபவம் மேலதிக அனுகூலமாகும். யாழ்ப்பாணத்திலுள்ள பதவிக்கு, சமீபத்தில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி அதிகாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

## சந்தைப்படுத்தல் அலுவலர்கள்

**யாழ்ப்பாணம்**

தொழில் முன்னேற்றத்திற்கு நிறைய வாய்ப்புக்களை வழங்குவதுடன் துரிதமாக வளர்ச்சி அடைந்துவரும் நிதி நிறுவனமொன்றில் இணைந்து பணியாற்ற விரும்பும் 30 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாகும். விண்ணப்பதாரர்கள் க.பொ.த. உயர்தரத் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றுடன் நிதி நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிச் சேவைகள் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவத்தையும் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இப் பதவிக்கு சிங்கர் ஃபினான்ஸ் நிர்ணயித்துள்ள மேலதிக அனுகூலங்கள் உள்ளிட்ட கவர்ச்சியான சம்பளப் பொதி வழங்கப்படும்.

தயவுசெய்து உங்கள் சுயவிபரக்கோவை மற்றும் உறவினரல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களை உள்ளடக்கிய உங்கள் விண்ணப்பத்தை அடுத்த 10 நாட்களுக்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

*சிங்கர் ஃபினான்ஸ் பி.எல்.சி.*
80, நவம் மாவத்தை,
கொழும்பு 02.
மின்னஞ்சல்: htsfl@singersl.com

SINGER FINANCE | SINGER Trusted Excellence

O&E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவிர்கள். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**இடபர்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மிதுனர்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிடைக்கும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**கடகர்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களை தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மீகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்..

**சிங்கர்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள்.

**கன்னி:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**நாளை**

*சித்திரை-16 திங்கட்கிழமை 29.04.2013*
*திதி: சதுர்த்தி மா. 05.17 வரை*
*நட்சத்திரம்: கேட்டை மு.ப. 11.44 வரை*
*சுபநேரம்: 11.58- 01.28 வரை*
*இராகுகாலம்: 07.28- 08.58 வரை*

**துலாபர்:** அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள். மற்றவர்களுக்கு நியாயம் பேசப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். பண விடயத்தில் ,கண்டிப்பாக இருங்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம்.

**விருச்சிகர்:** திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**தனுசு:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மகரர்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**கும்பர்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பகர்களின் வருகையுண்டு.

**மீனர்:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். யாரும் உங்களை புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | | 9 | | | | |
| | 2 | | | | 1 | | | 4 |
| 7 | | 1 | | | 6 | 3 | | 8 |
| | 5 | 9 | | 8 | 4 | | | |
| 2 | 6 | | | | | | 9 | 3 |
| | | | 9 | 6 | | 1 | 8 | |
| 9 | | 2 | 6 | | | 7 | | 1 |
| 3 | | | 7 | | | | 4 | |
| | | | | 4 | | 6 | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 4 | 1 | 5 | 7 | 9 | 3 | 8 |
| 3 | 7 | 1 | 9 | 2 | 8 | 4 | 5 | 6 |
| 8 | 9 | 5 | 3 | 6 | 4 | 2 | 1 | 7 |
| 2 | 1 | 3 | 5 | 7 | 6 | 8 | 4 | 9 |
| 9 | 5 | 6 | 8 | 4 | 3 | 1 | 7 | 2 |
| 7 | 4 | 8 | 2 | 9 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 3 | 9 | 6 | 1 | 2 | 7 | 8 | 4 |
| 1 | 8 | 7 | 4 | 3 | 9 | 6 | 2 | 5 |
| 4 | 6 | 2 | 7 | 8 | 5 | 3 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பும் முறையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக செயலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

கணபதி துணை

# கும்பிட்டான்புலம் கற்பகப்பிள்ளையார் ஆலயம்

Rg: HA/5/JA/290





*விநாயகர் அடியார்களே!*

ஈழத்தின் வடபால் மண்வளம் பொருந்திய சைவமும் தமிழும் தழைத்தோங்கி விளங்கும் தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி வடக்கில் அடியார் களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கும்பிட்டான்புலம் கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் பலநூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சுண்ணாம்புக் கட்டடங்களான களஞ்சியஅறை, பாகசாலை(மடப்பள்ளி அறை), சுற்றுமதில், மணிக்கூட்டுக் கோபுரம், வெளிமண்டபம் போன்றன பாவனைக்கு உகந்ததில்லாமல் இடிந்து விழும் நிலையில் உள்ளன. ஆகவே இவற்றை மீள் புனரமைப்புச் செய்வதற்கு பலகோடிக் கணக்கான நிதி திரட்டவேண்டியுள்ளது. எதிர்வரும் வைகாசி மாத மகோற்சவத்தின் பின் திருப்பணி வேலைகளை ஆரம்பிப்பதற்கு விநாயகர் அருள்பாலித்துள்ளார். மேலும் இவ் வேலைத் திட்டங்களைப் பகுதி பகுதியாகவேனும் நிர்மாணித்து, 2014ஆம் ஆண்டு பன்னிரண்டு வருடங்களின் பின் நடைபெற இருக்கும் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுவதற்கு நல்ல உள்ளம் படைத்த உள்ளூர், வெளியூர், அன்பர்களின் உதவியை நாடி நிற்கின்றோம். திருப்பணி நிதியினை பொருளாளரிடம் நேரடியாகக் கொடுத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது கீழே குறிப்பிடப்படும் இலங்கை வங்கிக் கிளையிலும் பணத்தினை வைப்புச் செய்யலாம். தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து விநாயகப் பெருமானின் பேரருளைப் பெற்று பேரானந்தப் பெருவாழ்வடைவீர்களாக.

பணவைப்புச் செய்யவிருக்கும் இலங்கை வங்கிக்கிளை:
கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் ஆலயம்
S/A இல.73205260 இலங்கை வங்கி, கொடிகாமம்.

பரிபாலன சபை,
கும்பிட்டான்புலம் கற்பகப்பிள்ளையார் ஆலயம்
வரணி வடக்கு,வரணி.

(36466)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

துணுக்காய், ஏப்.28

மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பிரதான வீதி கடந்த 40 வருட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த பிரதான வீதியூடாக விநாயகபுரம், நட்டாங்கண்டல், பனங்காமம் ஊடாக வவுனியாவை இலகுவாகச் சென்றடையக் கூடியதாக உள்ளது.

ஆனால் சுமார் 45 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி கடந்த 40 வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கின்றது.

இதனால் விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் மல்லாவி நகருக்கு வருவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-415)



## மீண்டும் அமைக்கப்பட்டன கிராம அமைப்புக்கள்

புதுக்குடியிருப்பு,ஏப்.28

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் ஏற்கனவே இயங்கி வந்த இந்த அமைப்புக்கள் கடந்த அனர்த்தங்களின் போது செயலிழந்து போயின. இதனால் மீளக்குடியமர்ந்த மக்களின் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டு வந்தன.

இதனை அடுத்தே இந்தப் பகுதியின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்த அமைப்புக்கள் மீள அமைக்கப்பட்டுள்ளன.

**"இதனை அடுத்தே இந்தப் பகுதியின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்த அமைப்புக்கள் மீள அமைக்கப் பட்டுள்ளன.**

மன்னாகண்டல் கிராம சேவையாளர் செ.தயசீலன் தலைமையில் இடம்பெற்ற இவற்றின் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவின் போது முல்லை மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஐ.சிவசண்முகலிங்கம், உப தலைவராக பொ.விநாயகமூர்த்தி, செயலாளராக அ.நாகன் ஆகியோரும், உபசெயலாளராக வாகீசனும், பொருளாளராக கு.அமல்ராஜும் தெரிவுசெய்யப்பட்டனர். ரி.விஜிதரன், ம.விவேகானந்தன், வே.புஸ்பராசா, வா.கந்தசாமி, ர.அம்பிகைதேவன், செ.தியாகராசா, சி.இதயராசா மற்றும் சொ.பரராசசிங்கம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவராக திருமதி இ.பாக்கியமும், உபதலைவராக திருமதி ரி.சாந்தகுமாரியும் செயலாளராக திருமதி சி.ரிஷாந்தியும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் உப செயலாளராக திருமதி ச.சுபாசினியும் பொருளாளராக செல்வி செ.கௌசல்யாவும், நிர்வாக சபை உறுப்பினர்களாக ச.அமிர்தா, சி.மாலினி, இ.புஸ்பலதா, ந.சகுந்தலா, பு.புஸ்பமாலா, யோ.மாலதி, அ.இந்திராணி மற்றும் வி.பர்ணா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-400)

## விழிப்புணர்வு கருத்தூட்டல்

சிறுவர்கள் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பவற்றுக்கெதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் எற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன், புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸார் மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கம் , கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குவாங்கள். (ஐ-400)

## இடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள்

வவுனியா,ஏப்.27

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் தற்செயல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 11 பேருக்கு சுமார் 93 ஆயிரம் ரூபா இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

இதில் மூவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் 7 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

தாலிக்குளம் பூவரசங்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தமிழ்ச்செல்வன், ஆசிகுளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை புலேந்திரராசா, வேப்பங்குளம் 4 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த பதுார்தீன் சியாமளா ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும்,

தவசியாகுளம், சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த கண்ணப்பன் செல்லம்மா, பாலமோட்டையைச் சேர்ந்த இராசேந்திரம் கேதீஸ்வரன், மணிப்புரம் வீட்டத் திட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரெங்கசாமி, சமயபுரத்தைச் சேர்ந்த பொறைக்கிழான் சேவகன், தேக்கம் தோட்டத்தைச் சேர்ந்த மாஜப்பன் வீரையா மற்றும் கந்தன் குளத்தைச் சேர்ந்த இரத்தினகுமார் அமராவதி ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும்,

இல 73 மணிபுரம் வீட்டுத் திட்டத்தை சேர்ந்த இராமன் உதயகுமாருக்கு 8 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் வவுனியா பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (க-400)

## முதலுதவி பயிற்சி நெறி ஆரம்பம்

கிளிநொச்சி,ஏப்.28

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை அடிப்படை முதலுதவிப் பயிற்சிநெறியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் கரைச்சிப் பிரிவின் அனுசரணையுடன் கனேடியன் செஞ்சிலுவைச் சங்க நிதியுதவியுடன் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு காலை 9.30 மணிக்கு லீட்ஸ் நிறுவன மாவட்ட அலுவலகக் கேட்போர் கூடத்தில் கிளையின் நிறைவேற்று அலுவலர் ரீ.இராஜசிறீகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சங்கத்தின் கரைச்சி பிரிவுத் தலைவர் தி.சிவரூபன் கரைச்சிப் பிரிவின் செயலாளர் த.சேதுபதி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நான்கு நாள்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறியில் வளவாளராக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தலைமை அலுவலகத்தின் முதலுதவிப் பயிற்சி இணைப்பாளர் தே. றோகினி செயற்பட்டு வருகின்றார்.

இந்தப் பயிற்சி நெறியின் இணைப்பாளராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் முதலுதவிப் பயிற்சி இணைப்பாளர் ச.விமல்ராஜ் செயற்படுகின்றார்.

மேலும் இந்தப் பயிற்சி நெறியில் கிளிநொச்சிக் கிளையின் தொண்டர்கள், அலகுகளின் அங்கத்தவர்கள் என இருபத்தைந்து பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். (க-405)


### ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த

## பெண் சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது

மாங்குளம்,ஏப்.28

ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த இரு பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அண்மையில் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற ஜனாதிபதி விருதுக்கான தெரிவில் பெண் சாரணர் பிரிவில் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த செல்விநிலாந்தி சிவஞான சுந்தரம் 5 ஆவது நிலையையும், செல்வி நிலானி இராசலிங்கம் 6 ஆவது நிலையையும் பெற்றுக்கொண்டனர்.



மேலும் தமிழ்ப் பிரிவில் இவர்கள் இருவரும் முதலாவது, இரண்டாவது நிலைகளையும் பெற்றுள்ளனர்.

ஏற்கனவே நான்கு ஆண் சாரணர்கள் இந்த விருதினைப் பெற்று ஓமந்தை மத்திய கல்லூரிக்கு பெருமை சேர்த்தமை குறிப்பிடத்தக்கது. (க-422)

## சிறுபோக நெற்செய்கையின் போது அதிகளவு காணியில் செய்கையில் ஈடுபடுவோருக்கு நடவடிக்கை

கிளிநொச்சி,ஏப்.28

சிறுபோக நெற்செய்கைக்கென ஒதுக்கப்பட்ட அளவை விட அதிகளவு காணியில் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிய வந்துள்ளது.



தற்போது சிறுபோக நெற்செய்கைக்கென கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களிலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலும் பயிர்ச் செய்கைக்கான காணிகளும் அளந்து வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் ஒதுக்கப்பட்ட அளவைவிட கூடுதலான நிலத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கென செயலணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது தற்போது செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட அளவிலும் பார்க்க அதிகளவு நிலத்தில் சிறுபோக பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றின.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு நட்டத்தையும் எதிர்கொண்டனர்.

இந்த நிலையைத் தவிர்க்கும் பொருட்டே விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டு கண்காணிப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

பெரிய குளங்களான இரணைமடுக்குளம், அக்கராயன் குளம் உட்பட கிளிநொச்சியிலுள்ள குளங்களிலிருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் சிறுபோக பயிர்ச் செய்கைக்கான வேலைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் சிறுபோக நெற்செய்கை பெரு வெற்றியை அளிக்குமென விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் தொடர்ந்து போராட வேண்டும்

இலங்கைத் தமிழர்கள் தற்போதைய சூழ்நிலையை உகந்த முறையில் மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை கொண்ட தீர்க்கமானதும் நெருக்கடியானதுமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பேரழிவுகளுக்குப் பின்னர் எஞ்சியதாக விடப்பட்டிருப்பவற்றை மீட்டுப் பாதுகாப்பதில் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

தனி நபர்கள் என்ற வகையிலும் சரி அரசியல் கட்சிகள் என்ற வகையிலும் சரி கூட்டு அணுகு முறையொன்றை வகுக்கவேண்டியிருக்கிறது.

இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது என்ன என்பதை சர்வதேச சமூகம் விளங்கிக் கொண்டிருப்பது போன்று தோன்றுகின்ற நிலவரம் எங்களுக்கு அனுகூலமான ஒன்று.

இந்த நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் வஞ்சகத்தனமான செயற்பாடுகளை சர்வதேச சமூகம் விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால், எமது அவலங்களை சர்வதேச மயப்படுத்துவதனால் மாத்திரம் சாதகமான விளைபயன்களைக் கண்டுவிடுவது சாத்தியமாகாது.

ஏக காலத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே பாரபட்சத்துக்கும் - ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பதம் பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னதாகவே - அந்த இயக்கத்தின் தலைவர் பிறப்பதற்கு முன்னரே தமிழர்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்கள் சகலரையும் விடுதலைப் புலிகள் அல்லது விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் என்று நாமம் சூட்டும் காரியங்களுக்கு இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தவர்கள் இரையாகிப் போய்விடக்கூடாது.

பலர் தங்களது அப்பட்டமான ஆக்கிரமிப்பையும், சர்வாதிகார நடத்தையையும் மூடிமறைப்பதற்கு ஒரு பூச்சாண்டியாக விடுதலைப் புலிகள் என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதை - அவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்கப்படும் ஒரு சதித்தனமான தந்திரோபாயமே இதுவாகும்.

நீதித்துறையின் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுப்பவர்களின் செயற்பாடுகளைக் கூட 'ஈழத்துக்கான செயற்திட்டம்' என்று வர்ணிப்பவர்களும் உள்ளனர். நீதித்துறையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுபவர்களே விடுதலைப் புலிகளின் கையாள்கள் என்று வர்ணிக்கப்படுகின்றார்கள் என்றால், தமிழ்ச் சமூகத்தின் கதி என்னவாக இருக்கும்? விடுதலைப் புலிகள் என்று நாமம் சூட்டப்படாமல் தமிழர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கக் கூடியது சாத்தியமா?

**தந்தை செல்வாவின் 36 ஆவது நினைவு தினத்தில் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், 'இலங்கைத் தமிழர்கள் எங்கே செல்வது?' என்ற தலைப்பில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய நினைவுப்பேருரையின் முழுவடிவம்**

தந்தை செல்வா 1974 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற 20 ஆவது பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட தூதுக் குழுக்களிடம் சமர்ப்பித்த மனு ஒன்றில் கூறியிருந்ததை மீண்டுமொரு பொதுநலவாய மாநாடு இலங்கையில் 40 வருடங்களுக்குப் பிறகு நடைபெறவிருக்கும் நிலையில் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

''இரு தேசியங்கள், இரு மொழிகள், பல மதங்கள் கொண்ட இலங்கையை (சிங்களத்தை மாத்திரம் கொண்ட) ஒரே மொழியுடைய, பௌத்த மதத்தை மாத்திரம் கொண்ட ஒரே தேசிய அரசாக மாற்றும் ஒரே இலக்கையே சிங்களத் தலைவர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

முன்னர் தனிமைப்படுத்தப்பட்ட பல இந்தியத் தமிழர்கள் இப்போது சிங்களத்தைப் படிக்க ஆரம்பித்துள்ளனர். அத்துடன் தங்கள் பெயரையும் சிங்களப் பெயராக மாற்றிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். பௌத்த மதத்தைத் தழுவியும் வருகின்றனர். இது சமூக ஒருங்கிணைப்பின் ஓர் அங்கமாகும் என்று தற்போதைய அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார்.

அதன் மூலம் சிங்களத் தலைவர்களின் அந்த ஒரே இலக்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது'' என்று தந்தை செல்வா அன்று அந்த மனுவில் கூறியிருந்தார்.

அன்றைய அமைச்சர் சொன்னதைப் போன்று இன்றைய அமைச்சர்கள் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் அதே செயற்பாடுகள் இன்று முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன.

போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும், வட மாகாணம் எங்கும் இராணுவப் பிரசன்னம் குறைந்தபாடாக இல்லை. முன்னாள் இராணுவ அதிகாரியே ஆளுநராக இருக்கிறார்.

வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென்று உறுதிமொழிகள் அளிக்கப்பட்ட போதிலும் அது நடந்தபாடாக இல்லை. மத்திய அரசிடம் இருக்கும் பெருவாரியான அதிகாரங்களுக்குப் பாதிப்பாக அமையக் கூடும் என்பதில் ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நிர்வாகம் வட மாகாணத்தில் பதவிக்கு வருவதை அனுமதிப்பதற்கு ஆட்சியதிகாரம் உள்ளவர்கள் தயங்குகிறார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்படக் கூடிய மாகாண சபை ஒன்று ஆளுநர் பதவியில் இருந்து இராணுவக்காரரை நீக்குமாறு கோரக்கூடும். வட பகுதியில் மக்களின் அன்றாட வாழ்வில் தலையீடு செய்யும் இராணுவத்தை முகாம்களில் வைத்திருக்குமாறு கோரிக்கை விடக்கூடும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு இருக்கக் கூடிய அதிகாரங்கள் எத்தகையதாகவும் இருக்கலாம். ஆனால், மத்திய அரசின் ஒடுக்குமுறைத் திட்டத்துக்குக் குந்தகமான சூழ்நிலை ஏற்படுவதை அரசு விரும்பப் போவதில்லை.

வட மாகாணத்தில் பாரம்பரியமாக வாழும் மக்களுக்கு நியாய பூர்வமான அரசியல் மற்றும் குடியியல் உரிமைகளை வழங்குவதில் இருந்து அரசை எது தடுக்கிறது? நியாயபூர்வமாகச் சிந்திக்கும் சிங்களவர்கள் பலரிடம் இது தொடர்பில் கருத்தைக் கேட்டால், அவர்கள் தமிழர்களுக்கு நியாய பூர்வமான உரிமைகளை வழங்கினால், அது பிரிவினைக்கான படிக்கல் ஆகிவிடும் என்று சிங்களப் பெரும்பான்மை யரசு அஞ்சுகிறது என்று பதில் கூறினார்கள்.

மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்தென்றாலும் தமிழர்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதே அரசின் நோக்கமாகும்.

இலங்கைத் தீவில் வாழும் சகல சமூகங்களுக்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இசைவான முறையில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை வழங்குவது அரசின் நலன்களுக்கே உகந்ததாகும். பிரிவினையில் நாட்டம் காட்டுவதைத் தடுப்பதற்காகக் கடைப்பிடிக்கப்படும் அதே அடக்குமுறைகள்.

பாதிக்கப்படும் மக்களுக்குப் பிரிவினை மாத்திரமே ஒரே தீர்வாக இருக்க முடியும் என்று சர்வதேச சமூகத்தை நம்பச் செய்துவிடக் கூடிய சாத்தியம் இருக்கிறது.


தங்களால் உள்நாட்டில் காணக்கூடியதாக இருக்கும் நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தினர் (பாதிக்கப்பட்ட சமூகங்கள்) உள்ளக சுயநிர்ணய உரிமையைவிட வெளியக சுயநிர்ணய உரிமையே பொருத்தமான தீர்வு என்று நம்பிக்கை கொள்ளக் கூடிய சூழ்நிலை தோன்றிவிடும்.

அதேநேரம் தமிழ் பேசும் முஸ்லிம் சகோதரர்களையும் நாங்கள் ஒன்று சேர்த்தே கைக்கோத்து முன்னோக்கி நகரவேண்டும். அன்று யாரோ சிலர் செய்த குற்றங்களுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம், தமிழ் மக்களையும் வடக்கில் இருந்து விரட்டியது மனிதாபிமானச் செயல் என்று எவ்விதத்திலும் சொல்ல முடியாது. அதற்கு நாங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

இனியும் அந்தப் போராட்ட காரியங்களில் நாங்கள் ஈடுபடாது பார்த்துக்கொள்ள வேண்டும். இனியாவது தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் முஸ்லிம் மக்களும், கிறிஸ்தவ மக்களும், இந்து மக்களும் ஏன் பௌத்த மதத் தமிழ்பேசும் மக்களும் ஒன்றுசேர்ந்து கரங்கோத்து முன்னோக்கிப் பயணிக்கும் ஒரு வழியை நாங்கள் காணவேண்டும்.

இன்று முஸ்லிம் மக்களுக்கு நடப்பது அன்று தமிழ் மக்களுக்கு நடந்தேறிய அநியாயச் செயலே. இன்று நாங்கள் முஸ்லிம் மக்களுடன் சேர்ந்திருந்து அவர்களுக்காகக் குரல்கொடுப்பது எங்கள் கடமை. நாங்கள் முன்னர் முஸ்லிம் மக்களுக்கு இழைத்த கொடுமைக்கு பிராயச்சித்தமாக வேனும் எமது தோழமையையும் சகோதரத் துவத்தையும் இந்தக் கால கட்டத்தில் வெளிக்காட்ட வேண்டும். ★

“ நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் வஞ்சகத்தனமான செயற்பாடுகளை சர்வதேசம் விளங்கிக் கொண்டுள்ளது. இந்த நிலையில், எமது அவலங்களை சர்வதேச மயப்படுத்துவதோடு நின்றுவிடாது, ஏக காலத்தில் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். ”



## வடக்கில் மக்களின் நிர்வாகத்தை அனுமதிக்க ஆட்சியாளர் தயக்கம்

*- முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 93ஆவது ஆண்டு விழா 28.04.2013

இலங்கை பிரித்தானிய அரசின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்த வேளையில் அன்று வாழ்ந்த தமிழ்ப் பற்றாளர்கள் எமதுமக்களின் கல்வியைவளர்க்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு 1919சித்தார்த்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் இரண்டாம் நாள் சனிக்கிழமை பிற்பகல் ஆயிலிய சுபவேளையில் ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம் தமிழர் தம் வாழ்வியலோடும், கல்வியங்காட்டு மக்களின் வளர்ச்சிப் பாதையிலும் ஏற்பட்ட அத்தனை இன்ப துன்பங்களில் எல்லாம் பங்கெடுத்து எமது சமூகத்தின் ஓர் உன்னதமான உந்து சக்தியாக வானளாவ வளர்ந்து புலம்பெயர் நாடுகளிலும் கிளை பரப்பி கம்பீரமாக நிமிர்ந்து எங்கள் அனைவருக்கும் ஓர் அற்புதகலங்கரை விளக்காக வழிகாட்டி நிற்கின்றது.

எமது சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா 1920ஆம் ஆண்டு முத்தமிழ் வித்தகர். சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் ஆசியுரையுடன் நடைபெற்றது. இந்த நிகழ்வு எமது சங்கத்தின் அத்தனை வளர்ச்சிக்கும் மிகப்பெரிய ஆசியாக அமைந்ததினால் இன்று எமது சங்கம் விழுதுகள் பல ஊன்றிவிருட்சமாக விளங்குகின்றது.

ஒரு இனத்தின் வெற்றிகாமான முன்னேற்றம் என்பது அந்த இனம் கொண்டிருக்கும் சமூக, சமய, பொருளாதார, அரசியல் காரணிகளின் அளவு கோல்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அவ்வகையில் நோக்கும்போது எமது சங்கம் இன்று எமது மக்களுக்கு கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக ஆற்றிவரும் சேவை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

எமது சங்கம் எத்தனையோ இளம் துடிப்புள்ள இளைய சமூகத்திற்கு பல்வேறு பேச்சுப் போட்டிகள், இல்லமெய்வல்லுனர் போட்டிகள், நாயன்மார் குருபூசைகள் மற்றும் பௌர்ணமி நிலா முற்றம் போன்ற நிகழ்வுகளை நடத்தி அறிவாற்றல் மிகுந்த பலரை உருவாக்கித் தந்துள்ளது.

ஞானபாஸ்கரோதய சங்கமானது ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், ஞானபாஸ்கரோதய இளைஞர்சங்கம், ஞானபாஸ்கரோதய மங்கயர்கழகம் என்னும் துணைச் சங்கங்களை உள்ளடக்கியது. இந்த துணைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தத்தம் துறைகளில் ஆற்றிவரும் சேவையானது மக்களின் வாழ்க்கைமுன்னேற்றத்திற்குபெரும் பங்கெடுத்துவருகின்றது.

ஆரம்ப காலத்தில் எமது சங்கம் சிறுகொட்டிலாகவேஆரம்பிக்கப்பட்டது. அன்றைய நாள்களில் புராணபடலம் ஓதுதல் மற்றும் இறைநாம சங்கீர்த்தன பஜனைகள் நடத்துதல் வெள்ளிக்கிழமைகள் தோறும் நற்பிரசங்க மாற்றுதல் என ஆரம்பகாலச் சேவைகள் அமைந்தன. இன்று தனது 93ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் எமது சங்கம் இத்தனை வருடங்களும் பல பெரியோர்களின் இடைவிடா முயற்சியினால் எத்தனையோ நெருக்கடிகள், நெருடலகள் மத்தியிலும் இந்தச் சங்கம் சாதித்து நிற்கும் சாதனைகள் பல. இத்தனை ஆண்டுகளும் ஞானபாஸ்கரனின் கொடிபட்டொளிவீசி பறக்கின்றதென்றால் அத் தன்னலமற்ற பெரியோர்களின் பங்களிப்பேயாகும். அவர்களுக்கு நாம் மட்டுமல்ல நமது நாடே நன்றி சொல்லி நிற்கின்றது.

எமது இளைஞர், யுவதிகளை நல்லதேக ஆரோக்கியம் மிக்கவர்களாகவும், சமூகப் பண்புள்ளவர்களாகவும் வளர்த்தெடுப்பதில் எமது சங்கமும், சங்கத்தின் விளையாட்டு மைதானமும் ஓர் அற்புதத் தாயாக அரவணைத்து அன்பு கூறிகரம் பிடித்து வழி நடத்துகின்றன.

இந்தச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் அமரத்துவமடைந்த திரு.வே. சிதம்பரப்பிள்ளை, ச.கந்தையா, சி.செல்லையா, க.சின்னையா, வ.மருதவானர், க.வீ.சின்னத்துரை, ச பிள்ளை, நா.கந்தையா, கா.இரசையா, வ.செல்லத்துரை ஆகியவர்களோடு இ து செயலாற்றிய சங்க உறுப்பினர்கள் ஆகியோரது தன்னலம் கருதாதசேவையே ச சங்கம் ஆல் போல் தழைக்கவும், அறுகுபோல் பெருகவும் ஏதுவாக அமை ன. அன்றைய ஆரம்ப காலத்தில் விவசாயிகள் ஓய்வு நேரங்களில் தமிழர்களின் மரபுவழி செஸ் விளையாட்டான பசுவும் புலியும் விளையாட்டுக்களில் ஈடுபடுவர். அதுமட்டுமல்ல விவசாயத்தின் துல்லியமான நுணுக்கமான விடயங்களை எல்லாம் கூடி ஆராய்ந்ததுடன் துறைசார் நிபுணர்களின் கருத்தரங்குகளையும் ஒழுங்குபடுத்தினார்கள்.

இந்தக் கிராமம் சங்கிலிய மன்னனின் இராசதானிக்கு அண்மையில் இருந்தமையாலும், சிறந்த விவசாய நிலமாக விளங்கியமையினாலும் சித்தவைத்திய மூலிகைகள் அதிகம் காணப்பட்டபடியால் அரசவைத்தியர்கள் பலர் பரம்பரை பரம்பரையாக சித்த வைத்தியத்துறையில் சிறந்துவிளங்குகின்றனர்.

தேன் சிந்திடும் கவிபுனை அரசவைக் கவிஞரசுகளும் இங்கு வாழ்ந்துள்ளனர். அதற்கு ஆதாரமாக புலவனார் வீதி இன்றும் காணப்படுகின்றது. எமது சங்கவாசலில் 1400 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாறையால் செதுக்கப்பட்ட மாடு ரஞ்சிக் கல், சுமை தாங்கி மற்றும் வயலில் மேய்ந்து பிற்பகல் வரும் பசுக்கள் நீர் அருந்துவதற்கு தண்ணீர்த் தொட்டி என்பன காணப்பட்டன. யுத்தகாலத்தில் தண்ணீர் தொட்டியும் சுமை தாங்கியும் காணாமல் போய்விட்டன. மாடுரஞ்சிக் கல் மட்டும் இன்றும் காணப்படுகின்றது. அதுவும் வீதி அகலிப்பின்போது சிறுசேதத்திற்குஉட்பட்டுவிட்டது. சங்க இளைய உறுப்பினர்கள் விரைந்து செயற்பட்டதன் காரணமாகமீள்நடுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

1930ஆம் ஆண்டு காலப் பகுதியில் எமது சங்கத்தினால் வருடந்தோறும் வள்ளுவப் பெருந்தகைக்கும் விழா எடுக்கப்பட்டு வந்துள்ளது.

எமது சங்கம் இன்று பலபுலம்பெயர் நாடுகளிலும் கிளைபரப்ப, புதுவேகம் பெற்று வருகின்றது. கல்விகற்கும் மாணவர்களுக்கு பொருளாதார ரீதியாக எமது சங்கத்தினூடாக வெளிநாட்டுக் கிளைகளில் இருந்து தாராள உதவிகளையும் செய்து வருகின்றது.

பண்ணும் பரதமும், சைவமும், தமிழும் என அத்தனையும் உத்வேகத்துடன் எமது மண்ணில் உலாவர எமது சங்கம் ஆற்றிவரும் சேவைகள் எத்தனையோ. பிறசங்கங்களிற்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.

மதிப்பிற்குரிய பேராசிரியர் கைலாசபதி போன்ற அறிஞர்கள் தலைமையில் பல தசாப்தங்களாக இச்சங்கத்தின் அரங்கில் நிகழ்ந்தேறிவரும் பட்டிமன்றங்களைக் காண்பதற்கு அயலூரில் இருந்தெல்லாம் அறிஞர்களும், ஆர்வலர்களும் வந்து இன்புற்றுச் செல்வார்கள்.

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்னும் இலக்கணத்திற்கு ஒரு வழிகாட்டியாய் திகழ்ந்து எம்மையெல்லாம் தன் கருணைக் கடல் மூலம் அரவணைத்து தன் எத்தனையோ புதல்வர்களை கவிஞர்களாக, வைத்தியர்களாக,பொறியியலாளராக, சமூக நன்மரிக்கங்களாக, ஆற்றல்மிக்க அறிஞர்களாக உருவாக்கிய நம் தாயைச் சிறப்பிக்க 93ஆவது ஆண்டுவிழாவை முன்னெடுப்பதில் மிக்கமகிழ்ச்சியும், பேரானந்தமும் கொள்வதுடன் மேன்மேலும் வளர இறைஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

**சு.சுரேஸ்குமார்**
(ஞானபாஸ்கரோதயசங்கத் தலைவர்)

### யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயசங்கத்தின் 93ஆவது ஆண்டு விழா இன்று 28.04.2013 நடைபெறுவதையிட்டு முதற்கண் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் அக்கிராமமக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பல தடைகளைத் தாண்டி இங்கே இருக்கும் அரசமரம் போன்றும் ஆலமரம் போன்றும் இன்னும் அது தழைத்தோங்கி இருப்பதையிட்டு நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக விவசாயிகள் சங்கம், விளையாட்டுக் கழகம் மங்கையர்க் கழகம் எனப் பலதுறைகளில் பலசாதனைகள் புரிந்துமக்களின் முன்னேற்றத்திற்கு இச்சங்கம் செய்துவரும் சாதனையையிட்டு நான் உளமார மகிழ்வடைகின்றேன்.

கற்றவர்கள் பலகொண்ட விவசாயக் கிராமமான கல்வியங்காட்டில் மிக நீண்டகாலமாக மக்களுக்குப் பல்வேறுபட்ட சேவைகளைச் செய்துவருகின்ற ஞானபாஸ்கரோதய சங்கம் இன்னும் நீண்டநெடுநாள்கள் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன். இச்சங்கத்தின் 93ஆவது ஆண்டு விழாவிற்கு ஒரு வாழ்த்துச் செய்திகொடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு நான் மனமகிழ்வடைவதுடன் மீண்டும் ஒருமுறை சங்கத்திற்கும் சங்க உறுப்பினர்களுக்கும் எனதுமனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச்சந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



ஞானபாஸ்கரோதய சங்கம் தனது 93ஆவது ஆண்டு நிறைவு விழா வைக் கொண்டாடுவதானது எனக்குமிகுந்த மனமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருகின்றது. இலங்கையில் ஏற்பட்ட குறிப்பாக வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட பெரியயுத்தங்கள் அழிவுகளுக்கு மத்தியிலும் எங்களுக்குக் கல்வியிலும் அறிவிலும் பண்பாடு கலாசாரங்களிலும் எம்மை வளர்த்தெடுத்த ஞானபாஸ்கரோதயசங்கம் தனது 93ஆவது அகவையை எட்டுவதானது மிகுந்த மனப்பூரிப்பை உருவாக்குகின்றது. இது வெறும் வாசிகசாலையாக, சங்கமாக இருந்தது மாத்திரமல்லாமல், இதன் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் இங்கு ஒரு சுமைதாங்கிக்கல், ஒரு மாடுரைஞ்சிக்கல் மற்றும் கால்நடைகள் குடிப்பதற்கான கல்லினால் பொழியப்பட்ட ஒருநீர்த்தொட்டி போன்றவை இச்சங்கத்திற்கு அண்மையில் இருந்ததை நான் எனது இளவயதில் பார்த்திருப்பதை இப்பொழுது நினைவு கூருகின்றேன். இது இச்சங்கமானது முன்னைய காலத்தில் கால்நடைகள் உட்பட பொது மக்களுக்கு எவ்வளவு உதவிகளைச் செய்தது என்பதற்கு ஓர் அடையாளமாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இன்று ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகம், ஞானபாஸ்கரோதய மங்கையர் கழகம், ஞானபாஸ்கரோதய விவ்சாயிகள் சங்கம் என்று விழுதுகள் பலபரப்பி தனது சேவை களைத் தொடர்ந்து செய்வதையிட்டு நான் உள்ளூர மிகவும் பெருமைப்படுகின்றேன். எனது கிராமத்தில் எனது மண்ணில் எமதுமக்களை வழிநடத்திய, அவர்களைப் பண்பாளர்களாக வாழவைத்த ஞானபாஸ்கரோதயசங்கம் இன்னும் பல நூறு ஆண்டுகள் வாழவேண்டும் எனவாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி

ஞானபாஸ்கரோதய சங்கம் 1919 ஆம் ஆண்டு முதல் பல நோக்கங்களை முன்வைத்து அவைகளை நிறைவேற்றவும், புதிய சூழ்நிலைகளுக்கேற்ப சில முன்னேற்ற நடவடிக்கை களை எடுப்பதிலும் பின் நிற்பதில்லை.

சென்ற 93 ஆண்டுகளாக, சமூக அரசியல் மாற்றங்கள் பல வந்து போயின, இவை எவற் றிற்கும் பக்கம் சாயாது நடுநிலையோடு நின்று சங்க நோக்கத்துக்கமையவே எமது சங்க நடவடிக்கைகள் இருக்கின்றன. எம் முன்னோர் காட்டிய வழியாகிய இதனையே தற்பொழுதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையிலேயே சங்கத்தின் அத்திபாரம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால்தான் 93 ஆண்டுகள் கழிந்து 100 ஆவது ஆண்டுவிழா கொண்டாட இன்றும் தழைத்து நிற்கின்றது. இச் சங்கத்தின் வழிகாட்டலில் வளர்ந்த அங்கத்தவர்கள் கனடாவிலும் கிளைச் சங்கங்களை அமைத்து பல சமூகப்பணிகளையும் செய்து வருகின்றார்கள்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்பதிற்கிணங்கவும் எந்த ஊர் போனாலும் எமது சொந்த ஊர் போலாகுமா? என்ற பாடல் வரிகளுக்கேற்பவும் கனடா வாழ் கல்வியங்காட்டு மக்கள் அவ்வப்போது தாய்ச் சங்கமாகிய ஞா.பா. சங்கத்துக்கு கைகொடுத்து அதன் வளர்ச்சிக்கு உதவிவருகின்றது. ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாக இருந்தால் அங்கு சமூகப்பற்றும், தன்னலமற்ற சேவையும், ஒற்றுமையும் இருக்க வேண்டும். இவ்வனைத்தும் எம் கிராம மக்களிடையே இருக்கும் என்று நம்புகின்றோம். அரசியல் சூழ் நிலை காரணமாக சிறிது காலம் தாய்ச் சங்கம் செயற்திறன் குறைந்ததாக இருந்ததை நாம் அறிவோம். ஆனால் தற்பொழுது பெரியோர்களின் ஊக்கத்தாலும் இளையோர்களின் துடிப்பு மிக்க செயற்பாட்டிலும் சங்கம் புத்தெளிற்சியுடன் செயற் படுவதையிட்டு ஞானபாஸ்கரோதய கலாசார ஒன்றியம் மகிழ்ச்சி அடைகிறது. 93 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வீரபத்திர பெருமான் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கொண்டு எமது வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கி நிற்கின்றோம்.

**ஞானபாஸ்கரோதய கலாசார ஒன்றியம் - கனடா**

### ஆசியுரை

''பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்தன் பயன்'' என்பார்கள். அந்த வகையில் ஞா.பா.சங்கம் கல்வியங்காடு கிராமத்தில் தலை நிமிர்ந்து வானளாவி வளர்ந்து நிற்கின்றது இங்குவாழ்ந்த இளம் சந்ததியினர் உலகெங்கும் பரவி வாழ்ந்து வருகின்றார்கள்.

ஒரு கிராமத்தில் உள்ளவர்களுக்கு கல்வி அறிவு மிகமிக முக்கியம் அந்தவகையில் இந்த ஞா.பா.சங்கம் எமது இளம் சமுதாயத்தினரை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், கவிதைப்போட்டிகள், திருக்குறள் மனனப்போட்டிகள் போன்ற பல விடயங்களை புகுத்தி ஊக்கப்படுத்தி பரிசில் களையும் வழங்குகின்றார்கள். சேவை சேவை சேவையைத் தவிர தனது தேவை என்றே ஒன்றை அறியாத மானிடர்கள் இந்த சங்கத்தில் இருந்திருக்கிறார்கள். தங்களது இரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைத்த பெரியவர்கள் இந்த சங்கத்தின் பெயரை நிலை நாட்டினார்கள்.

விஞ்ஞானத்தின் நாகரிக வசதிகள் எதையும் பயன்படுத்தாமல் மண்ணெண்ணெய் விளக்கும் கை விசிறியுமாய் வாழ்ந்து படித்து பெரியவர்கள் ஆனவர்கள் இந்த சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள். இந்த வகையில் இன்று ஞா.பா.சங்கம் 93 ஆவது அகவை நிறைவு பெற்று 94 ஆவது அகவையில் கால்பதிக்கின்றான். இவனுடைய சேவை எங்கள் கிராமத்து மக்களுக்குத் தேவை. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் எம்மிரு கண்கள் போன்றவை. எமது கிராமத்துக்கு கறைநேர்ந்தால் எங்கள் ஒவ்வொரு வருக்கும் நேர்தது போல. எனவே அப்படியான நிலைமை வராமல்காப்பான் எங்கள் குலப்பெருமான் வீரபத்திரன். அவன்தாள் சரணம் சரணம் என்று கூறி எனது ஆசியுரையை முடித்து வைக்கின்றேன்.

''ஆசிகள் பலப்பல, வாழ்க பல்லாண்டு''

''என்றும் இறைசேவையில்''
பொன். வரதராஜக்குருக்கள்,
வீரபத்திரர் தேவஸ்தானம், கல்வியங்காடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், கோவில் வீதியில் ICRC சந்தியில், சகல வசதிகளுடன் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 3596571

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில், Sampath Bank அருகில், பிரதான வீதியிலேயே அமைந்த 1400 சதுரஅடி விஸ்தீரணமுள்ள, சகல வசதிகளுடனும் கூடிய, வாகனத்தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குண்டு. அலுவலகப் பாவனைக்கு மிகவும் உகந்தது.

தொடர்பு: 0776086209 (36475)(6.2)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியிலிருந்து இருபாலை வீதியில் 100 மீற்றர் தூரத்தில் உள்ள வன்னிய வீதியில் 2 பரப்பு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு காணி 14 பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779007481 (சி/9261)(6.2)

## Room/ Annex வாடகைக்கு

* நல்லூர் குறுக்கு வீதியில் ஆடவர் தங்கக் கூடிய Parking வசதி உட்பட அனைத்து வசதிகளுடனான அறைகள் மாதாந்த வாடகைக்கு உண்டு.
* Chundikuli விதானை யார் ஒழுங்கையில் Annex வாடகைக்கு உண்டு. இரு யுவதிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0773626230 (36469)(6.2)

## VACANCIES வேலைவாய்ப்பு

* **Ground Handling Agent** பயணிகள் கையாளும் முகவர்
  கணினி அறிவுடன் ஆங்கிலம் எழுத, பேசக்கூடியதாக, இருத்தல் வரவேற்கத்தக்கது.
* **Hotel Asst Manager** உதவி முகாமையாளர்
  தங்குமிட விடுதி சார்ந்த துறையில் ஆகக்குறைந்த ஒரு வருட அனுபவமும் கணக்கியலுடன் கணினி அறிவும் உடைய ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
* **Hotel Steward cum Room Boy** விடுதி பராமரிப்பாளர்
  தங்குமிட விடுதி சார்ந்த துறையில் ஆகக்குறைந்த ஒரு வருட அனுபவம் வரவேற்கத்தக்கது.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

EXPOAIR
DIRECTOR, Sales & Marketing- Passenger
EXPO AVIATION (PVT) LTD.
No40, Kandy Road, Chundikuli, Jaffna.

## உடன் தேவை

உங்களுக்கு விருப்பமா, நீங்கள் செய்யும் தொழிலுடன் பகுதிநேரமாகப் பணம் சம்பாதிக்கச் சிறிய ரக வாகனங்களை விற்பனை செய்யும் நிறுவனத்துக்கு வடபிராந்தியம் முழுவதும் விற்பனைத் தரகர்கள் தேவை.

(கொமிசன் 10,000/= இற்கு மேல்)

உடன் தொடர்புகொள்ள:

071 4565252 (26296)(6.2)

## விற்பனைக்கு

* வெஸ்பா ஸ்கூட்டர் மணிக்கூடு
* T/Z/12 yamaha Japan
* 2 Sri மொறிஸ் மைனர்
* சனல் ஜமுனாபாரி ஆடுகள்

தொடர்பு: 0779181018 (36438)(6.2)

## பணிப்பெண் தேவை

வீட்டு சமையல் வேலைக்கு உடன் பணிப்பெண் தேவை.

தொடர்பு: 075 988 0000 (36467)(6.2)

**V.T.S.Construction**

வி. ரி. எஸ். கொன்ஸ்ரக்சன்
கல்வயல், சாவகச்சேரி
B/RC No:-TN/DS/UC/0169




**கட்டட நிர்மாண மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு**
உங்களுடன் இணைய எந்நேரமும் தயாராக இருக்கிறார்கள்

கையில் உள்ள திட்டத்தை நடைமுறைப்படுத்த நம்பகமான யாரை அணுகுவது என்பது தான் உங்கள் முன் உள்ள சவாலா? கவலையை விடுங்கள் !

நீங்கள் அழைக்க வேண்டிய தொலை பேசி இலக்கம் 071 238 6580

அனைத்து விதமான கட்டடப் பணிகளிலும் ஆரம்பம் முதல் நிறைவு வரை உங்களுக்கு கை கொடுக்கிறார்கள் V.T.S.Construction

## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் சின்னாச்சிப்பிள்ளை (சின்னம்மாக்கா)



சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் சின்னாச்சிப்பிள்ளை நேற்று (27.04.2013) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-லெட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், சுப்பிரமணியம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், ரெங்கநாயகி, மேனகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், வேதநாயகம், இலங்கேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சுகந்தன், ராசா, சங்கர் (சுவிஸ்), மதுனா (சுவிஸ்), உதயன் (லண்டன்), சோபனா (லண்டன்), ஜெயதீபன் (லண்டன்), நிசாந்தினி (லண்டன்), ஜங்கரன் (சுவிஸ்), செல்வரூபன் (கனடா), கல்பனா (கனடா), கீர்த்திகா (கனடா), அனுரிகா (கனடா), அகிலன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெலக்ஸன், ஜெசிபன், அஸ்வினி (கனடா), வினுசன் (கனடா), அகரன் (லண்டன்) ஆகியோரின் பாச மிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல், சாவகச்சேரி.
0773614590 (35001)(10.6)

தகவல்
குடும்பத்தினர்.

**THE ASSOCIATED NEWSPAPERS OF CEYLON LIMITED**

ANCL
We pioneered print media in Sri Lanka
Now - 100 years later - we are still No. 1

## கேள்வி அறிவித்தல்

கேள்வி இல. C1/2013/04

### ஹைடில்பர்க் ஒப்செட் இரண்டு வர்ண அச்சு இயந்திரமொன்றை விற்பனை செய்தல்

ஹைடில்பர்க் ஒப்செட் இரண்டு வர்ண அச்சு இயந்திரத்தை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

தொழில்நுட்ப விவரங்கள்

1. 03 பேஸ் ஒட்டோ
2. தொடர் இலக்கம் 512821
3. அளவு - 64 X 91.5Cm
4. உற்பத்தி ஆண்டு - 1978
5. நாடு - மேற்கு ஜெர்மனி
6. டிரை டைப் எயார் கம்பரஷர்
7. நீரை தேக்கி வைக்கும் முறை

மேற்படி சாதனம் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 267ம் இலக்கத்தில் உள்ளது. கொழும்பு 10 டீ. ஆர். விஜயவர்தன மாவத்தை, 35, அசோசியேட்டட் நியுஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட், டிவிஷன் சப்ளை செயின் மெனேஜ்மன்ட் தலைமை அலுவலகத்தில் இருந்து மற்றும் ஏ.என்.சி.எல். கிளை அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கு அப்பால் சிறாம்பியடி லேன், இல. 06 தினகரன் புத்தக நிலையத்தில் இருந்து 2013 மே 10 வரை வார நாட்களில் அலுவலக நேரங்களில் மீளளிக்கக்கூடிய வைப்புக் கட்டணமாக ரூ. 5000/-யும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ. 2000/- யும் செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை பெறலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றோர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பார்வை இடுவதற்காக அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஹைடில்பார்க் ஒப் செட் இரண்டு வர்ண அச்சு இயந்திரம்" எனக் குறிப்பிட்டு பொறியிடப்பட்ட கேள்விகளை 2013 மே 21 பி.ப. 3.00 மணிக்கு முன்பு கீழ்கண்ட முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும் அல்லது கேள்வி பெட்டியில் இடவேண்டும்.

அதே நாளில் பி.ப. 3.15க்கு விண்ணப்பங்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும். அத்தினமே கேள்விதாரர்கள் வழங்கல் குறிப்பிட்ட நாள் தொடக்கம் 14 நாள்களுக்குள் முழுக் கட்டணத்தையும் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும். தவறுவோர்களின் கேள்வி வைப்பு கட்டணம் பறிமுதல் செய்யப்படும்.

சித்திகரமான கேள்விதாரர் கோரப்பட்ட விலையின் 12% வற் மற்றும் 2% NBT யை செலுத்த வேண்டும்.

தி அசோசியேட்டற் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட் நிறுவனத்துக்கு எந்தக் காரணத்தையும் காட்டாது எந்த கேள்வியையும் அல்லது எவர் கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை உண்டு.

வழங்கல் தொடர் முகாமைத்துவம்,
பிரிவு தலைமை,
**தி அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட்**
35, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10
தொலைபேசி: 2429422, 2429429 நீடிப்பு. 422

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பவளரத்தினம் தேவராசா

பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பவளரத்தினம் தேவராசா நேற்று (27.04.2013) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தேவராசாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா, அன்னலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவமாலா, தேவகாந்தன், தேவகுமாரன், தேவமனோகரன், தேவரூபன், தேவபிரதாபன், தேவானந்தன், தேவரஜனி (ரஜி) ஆகியோரின் பாசமிகு தாயும், சண்முகலிங்கம், நீற்றா, அருள்மதி, மங்கையர்க்கரசி, நளினி, சுபத்திரா, சுஜாதா ஆகியோரின் அன்பு மாமியும், சந்திரிகா - சனாதனன், சாமினி - தர்மதாசன், ரஜீவ் சஞ்சீவ், செந்தூரன், ஆதித்தன், அகல்யா, மயூரன், பிரியங்கா, பிரகாஷ், சூரியா, பிரியா, ஜீவிதன், காயத்திரி, கோகுலன், துளசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சகானா, அரன், அயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சொர்பாட்டு ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
ச.தேவரஜனி (ரஜி - HNB)
தொ.பே. 021 222 6367

(36471) (45.6)

## திருமதி மகேஸ்வரி அம்மா சந்தானகோபால சர்மா



யாழ்ப்பாணம், கோப்பாயை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்தானகோபாலசர்மா மகேஸ்வரி அம்மா 25.04.2013 வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதி குருக்கள் தம்பதிகளின் அன்பு மருமகளும், பிரம்மஸ்ரீசந்தானகோபாலசர்மா அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை 7, ஓடைலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.நாராயணி சர்மா-001 647 345 0237-கனடா, இ.ஜெகதீஸ்வர சர்மா- 0091 802 330 5578-இந்தியா
இ.பகவதீஸ்வர சர்மா-009 421 222 7660-ஜேர்மனி, 003 314 821 0384- பிரான்ஸ்
ந.நிரஞ்சனா- 003 395 454 4222 பிரான்ஸ்

(36473) (6.7.11)

# மரண அறிவித்தல்

## சதாசிவம் நரேந்திரன்

(Retired Senior Staff Technical Officer-
Department of Zoology, University of Jaffna)



புலோலி, தம்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் நரேந்திரன் (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவி நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், விலங்கியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்) நேற்று முன்தினம் (26.04.2013) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்- பூபதிஅம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம்- மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், சர்வேஸ்வரியின் (ஓய்வு பெற்ற உப அதிபர், யா/இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், சகுந் தலாதேவி (ஓய்வு பெற்ற அதிபர், புற்றளை மகா வித்தியாலயம்), அருந்ததி தேவி, சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்- ஆங்கிலம், வடமராட்சி), பூமாதேவி, காலஞ்சென்ற சிவபாலன், குமுதமலர் (தாதிய உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை), சோதிமயம் (USA), ரவீந்திரன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனேஷ் (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), அனுஜன் (நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, திருகோணமலை), Dr.சரணியா (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யாமளை (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), வினோபாஜினி ஆகியோரின் அன்பு மாமனும், ஹர்ஷாணனின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் பொன்னம்பலநாதன், செந்தில்நாயகம், வடிவானந்தம், பாக்கியலீலா, அருணேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


67/1, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந.தனேஷ்,
ந.அனுஜன்.

(36472)(6.11)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சண்முகராஜா



திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் குமரகோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சண்முகராஜா கடந்த (25.04.2013) வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கப்பொன்னு தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, தில்லைநடராஜா, தருமராஜா ஆகியோரின் சகோதரரும், சாயிகுமார், சுமதி, Dr.கோமதி, கௌரி, காலஞ்சென்ற திருக்குமரன் (திரு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், பிரணவச்செல்வன், யசோதா ஆகியோரின் மாமனும், நிசாயீசன், சபரீசன், நிசாயினி, துளசிகன், கஜானன், ஜெனனி, ரிதுசாயி, கவிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் சந்திரசேகரம், நடராஜா, காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் சுசீலாதேவி, தருமசொரூபி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனத்துக்காக கோண்டாவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம், கோண்டாவில்.T.P.021 222 7372

தகவல்: குடும்பத்தினர்.

(2.6)(சி/8438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலிகாமம் வலய எல்லே போட்டிகள்

# சுழிபுரம் விக்ரோறியா சம்பியன்



வலி.வடக்கு, ஏப்.28
வலிகாமம் கல்வி வலய பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மல்லாகம் மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய விக்ரோறியாக் கல்லூரி 7 ஓட்டங்களை பெற்றது. செந்தூரன் 3 ஓட்டங்களையும், தனுசன் 2 ஓட்டங்களையும், நிதர்ஷன், ராகுலன் ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

பதிலுக்கு விளையாடிய மல்லாகம் மகா வித்தியாலயம் 2 ஓட்டங்களைப் பெற்றது. தனுசன் அணி சார்பாக 2 ஓட்டகளைப் பெற்றார்.

7:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் விக்ரோறியாக் கல்லூரி மல்லாகம் மகா வித்தியாலயத்தை வெற்றி கொண்டு வலய மட்டச் சம்பியனாகியது. மூன்றாம் இடத்தை ஏழாலை சைவ மகா ஜனா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-86)

படத்தில்: வலிகாமம் வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற எல்லே சுற்றுப் போட்டியில் 19 வயது ஆண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட விக்ரோறியாக் கல்லூரி எல்லே அணியினர்.

வலயமட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து விக்ரோறியாக் கல்லூரி அணி மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளது.

## கிரிடா சக்தி நிகழ்ச்சித் திட்ட பயிற்சி முகாம் இன்று

வலி.வடக்கு, ஏப் 28
கிரிடா சக்தி நிகழ்சித் திட்டத்தின் இலங்கை விளையாட்டு அமைச்சால் விளையாட்டு வீர, வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு வீர, வீராங்கனைகள் இந்த பயிற்சி முகாமில் கலந்து கொள்ள முடியும் என்று இலங்கை விளையாட்டு அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

கிரிடா சக்தி நிகழ்சித் திட்டத்தின் கீழ் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கபடி, வலைப் பந்தாட்டம் மற்றும் ஹொக்கி ஆகிய விளையாட்டுகளுக்கு வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

யாழ் .மாவட்டப் பாடசாலைகள் மற்றும் கழகங்கள் தமது அணிகளில் உள்ள சிறந்த வீர, வீராங்கனைகளை இந்த பயிற்சி முகாமில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளன. 14 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்டவர்களே பயிற்சி முகாமில் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-86)

## இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.28
சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மற்றும் 11 பேர் பங்குபற்றும் 16 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆகியவற்றின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

இதில் 2மணிக்கு 11 பேர் பங்குபற்றும் 16 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஸ்ரீ காமட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் 7 பேர் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கோண்டாவில் கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் ஏபி அணி மோதவுள்ளது. (ற-23)

# வீ.ரி.எஸ். சிவகுருநாதன் வெற்றிக் கிண்ணம்

# ஆனந்தாவை வீழ்த்தியது யாழ். இந்து



யாழ்ப்பாணம்,ஏப்.28
வி.ரி.எஸ். சிவகுருநாதன் வெற்றிக்கிண்ணம் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆட்டத்தில் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. அதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 6 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சஜீகன் 38 ஓட்டங்களுடனும் நிலோஜன் ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்றையதினம் தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 206 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதில் சஜிகன் 68 ஓட்டங்களையும், வாமணன் 44 ஓட்டங்களையும், ஜஸ்மீனன் 21 ஓட்டங்களையும், கல்கோபன் 18 ஓட்டங்களையும், மதுஷன் 12 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி சார்பில் தரணரவீந் 3 இலக்குகளையும், டுஸ்மந்து டியசேனநாயக்க, இசுறு குணசேகர, டிலிப் ஜெயதிலக ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி 31.5 பந்து பரிமாற்றங்கள் முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதில் லக்கனஜெயசேகர 30 ஓட்டங்களையும், தமலக்கஅத்துலக்குமுதலி 21 ஓட்டங்களையும், டீலிப்பாஜெயலத் 11 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் வாமணனன் 6 இலக்குகளையும், மதுஷன் 3 இலக்குகளையும், ஜஸ்மினன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

103 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 34.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. மதுஷன் 17 ஓட்டங்களையும், உதயன் 6 ஓட்டங்களையும், கல்கோபன் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும், சஜீகன் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு ஆனந்தக் கல்லூரி அணி சார்பில் ஜெயலத் ஓர் இலக்கை வீழ்த்தினார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர் சஜீகனும் சிறந்த பந்து வீச்சாளர், ஆட்ட நாயகனாக யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர் வாமணனும், சிறந்த களத் தடுப்பாளராக கொழும்பு ஆனந்தக் கல்லூரி அணி வீரர் தரணகவிந்துவும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.28
கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ற-23)

★★★

கைதடி நபீல்ட் பாடசாலை அணிக்கும் பண்டாரவளை சென்.தோமஸ் கல்லுரிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று ஞாயிறுக்கிழமை யாழ். இந்துக்கல்லுரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது (ற-23)

★★★

[illegible]கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள்:

பி.ப. 3.30
இணுவி[illegible] அண்[illegible] வி.க எதிர் சண்டிலிப்பாய் உதயசூரியன் வி.க.

பி.ப. 4.30
கோண்டாவில் மறுமலர்ச்சி வி.க. எதிர் ஆலடி இந்து வி.க. 'பி' அணி.

(ஒ-288)

# சாதனைகள் கரீபிய மக்களுக்கு



நடப்பு ஆறாவது ஐ.பி.எல். தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அதிரடி வீரர் கெய்ல் 66 பந்துகளில் 13 பவுண்டரிகள், 17 சிக்ஸர்களுடன் 175 ஓட்டங்கள் குவித்தார். அதில் ஐ.பி.எல். போட்டியில் குறைந்த பந்தில் அரை சதம், சர்வதேச '20/20' ஆட்டத்தில் குறைந்த பந்தில் சதம் பெற்றமை, '20/20' ஆட்டத்தில் ஓர் இன்னிங்ஸில் அதிகபட்ச ஓட்டங்கள் குவிப்பு ஆகிய சாதனைகளும் அடங்கும்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கெய்ல், தனது சாதனைகளை [illegible] அர்ப்பணிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# அரையிறுதியில் சானியா



போர்ஸ் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் இணை அரையிறுதிக்கு முன்னேறியது.

ஜேர்மனியில் மகளிருக்கான டபிள்யு.டி.ஏ. போர்ஸ் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. அதில் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக்-சாண்ட்ஸ் இணை, அமெரிக்காவின் லிசல் ஹுபர், சுலோவாகியாவின் ஜனெட்டி ஹுசரோவா இணையைச் சந்தித்தது.

அதில் அபாரமாக ஆடிய சானியா ஜோடி 7-5, 6-4 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.(ற)

# டோனி 2,000

சென்னை அணி அணித் தலைவர் டோனி பிறீமியர் கிரிக்கெட் அரங்கில் 2000 ஓட்டங்கள் கடந்து புதிய மைல்கல்லை எட்டினார்.

அதன்மூலம் இந்த இலக்கை எட்டிய 8ஆவது வீரராகப் பதிவாகியுள்ளார். டோனி இதுவரை 86 போட்டியில் 11 அரைசதம் உட்பட 2017 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

முன்னதாக ரெய்னா (2406), கம்பீர் (2351), ரோகித் சர்மா (2239), கெய்ல் (2236), சச்சின் (2172), காலிஸ் (2083), சேவக் (2051) ஆகியோர் இந்த இலக்கை அடைந்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச புலவர் திருமண சேவை

INTERNATIONAL PULAVAR MATRIMONY

10.05.1962 இல் இருந்து திருமண சேவையில்....

238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7147, 075 842 7395

67, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
T.P. 077 404 1123, 024 222 6333

வேறு கிளைகள்: சாவகச்சேரி, சித்தாண்டி, திருகோணமலை.

## இன்று மின்தடை

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்புகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக் கும்-

மல்லாகம், அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், விளான், அம்பனை, வித்தகபுரம், ஏழாலை, கரந்தன் நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கட்டைப்பிராய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, செம்மணி, பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (ந)

## டோஹா, கட்டாரில் உடனடி வேலை வாய்ப்பு

பொறியியல் நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ஊடாக உடன் வேலை வாய்ப்புக்கள்

| | | | |
|---|---|---|---|
| மேசன் | 1200 -1500 | பொது உதவியாளர் | 900-1000 |
| எலக்ரீசியன் | 1200 -2000 | லேபர் | 900 - 1000 |
| பெயின்டர் | 1200 - 1500 | கிளினிங் லேபர் | 800 - 1000 |
| Plumber | 1200 - 1500 | Mechanic | 1200 - 2000 |
| கம்பிகட்டுபவர் | 1200 - 1500 | Mechanic Helper | 1000 |
| காப்பெண்டர்ஸ் | 1200 - 1500 | Valied Licenseor | |
| 6G Weldares | 1200 - 1500 | Gautar License | 1500 - 2000 |

உங்கள் விண்ணப்பங்கள், பாஸ்போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் 28 ஆம் திகதி இல.33, ஆசீர்வாதம் லேன், ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல் யாழ்ப்பாணத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை உங்கள் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

LL No - 2490
உடன் தொடர்புகளுக்கு
வவுனியாவில்
0777 929475,0772393165

தலைமை நிறுவனம் - Air Trust
Overseas Manpower Consultant,
945, Maradana Road, Borala, Colombo -08.
011 2676777, 0772393165 (26226)

## கடை வாடகைக்கு

யாழ். பிரதான வீதியில் உள்ள பாவி கடை [illegible] வாடகைக்கு உண்டு.

தொ.பே: 077 775 2317

## உடன் வேலை வாய்ப்பு

### பத்திரிகை மடிப்பதற்கு ஆள்கள் தேவை

தகுந்த சம்பளம் வழங்கப்படும் முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

நாளையும் (29.04.2013) நாளை மறுதினமும் (30.04.2013) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நேரில் சமுகமளிக்கவும்.

மனித வளமுகாமையாளர்

உதயன் பப்ளிக்கேசன் பிறைவேட் லிமிட்டெற்
இல.:361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## UKயில் படித்துக் கொண்டு வேலை செய்யும் கனவா?



இலகு புலமைப் பரிசிலுக்கு உடனடியாக விண்ணப்பியுங்கள்

2013 செப்ரெம்பர் மாத அனுமதிக்கு

இலவச உள்ளக ஆங்கில பரீட்சை வசதி பதிவுகளுக்கு முந்துங்கள்

May 1ஆம் திகதிக்கு முன்னர்

ஏஞ்சலியா றுஸ்கின் பல்கலைக்கழகத்துடனும் கேம்பிரிஜ் மற்றும் செல்ம்போர்ட் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து உலக அங்கிகாரம் கொண்ட தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

கிழக்கு லண்டனில் மிகப்பெரிய பல்கலைக்கழகம்

எமது கற்கைநெறிகள்:
கணக்கியலும் நிதியும், கணினி விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவம், கட்டட நிர்மாண முகாமைத்துவம், சட்டத்துறை, தாதியியல் மற்றும் பல

உடனடி அனுமதிகள் May 3ஆம் திகதி

நேரம்: 2.30 p.m - 5.30 p.m

இடம்: OEC தலைமைக் காரியாலயம்

ஏஞ்சலியா பல்கலைக்கழகத்தை ஏன் நாடுகிறீர்கள்?

- U.K யில் முதல் மூன்று தரநிலைகளுக்குள் உள்ளது, புதிய சர்வதேச மாணவர்களுக்கான கருத்தாய்வு நிகழ்வுகள்
- உளவியல், ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம், வரலாறு (RAE 2008) ஆகியவற்றுக்கான நவீன பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது.
- U.K யில் வாழ்வதற்கான 10 முதல்தர இடங்களாக கேம்பிரிஜிலும், செல்ம்போட்டிலும் உள்ள வளாகங்கள் கருதப்படுகின்றன.
- 14001 சர்வதேச தரச் சான்றிதழ் அங்கிகாரம் கொண்டது.

அழையுங்கள் : சுதாகரன் 0773013060

Overseas Education Center - Jaffna Branch
No 77, Clock Tower Road, Jaffna.
021 - 7306000, 0773013060

Overseas Education Center - Colombo Branch
No 102 A, Horton Place, Colombo-07,
011 763 2000 / 072 222 3600

## ACCOUNTS

Group Classes
A/L, CBF, DBF, AAT, HNDM, HNDA
By: T.Sutharsan, BBA
075 071 0252, 077 4525213
Nachchimar Kovil, Jaffna

## IELTS A1 B1 B2 KU Education

Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்

K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

## Personal Class (கணினி)

- ★ உங்கள் வீடுகளில்வந்து கற்பிக்கப்படும்
- ★ Ms Office, Internet & E- mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான பயிற்சி நெறிகள்.
- ★ சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- ★ குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாகக் கற்பிக்கப்படும்.

ஆசிரியர்: KRC
தொ.பே. 077 967 2038 நல்லூர்.

## STUDY IN UK

உங்கள் LONDON செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

GCE(O/L) தகமை போதுமானது

May/ June Intake நகான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 011 7 555511/14
021 7538395 / 021 2227230

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## சிறுநீரகம் தேவை

B Negative குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொ.பே: 077 654 4415

## Album Designer தேவை

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள Studio விற்கு Album Designing செய்யக்கூடிய அனுபவம் மிக்க வேலை ஆள்கள் தேவை. தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொ.பே. 077 500 2035,
011 233 0002

## LAND SCAPING

வீடுகள், ஹோட்டல்கள், பூங்காக்கள் ஆகியவற்றுக்கான பூந்தோட்ட அமைப்பு, சொட்டு நீர்ப்பாசனம் (Dripirrigation) என்பன சிறந்த முறையில் அமைத்துத் தரப்படுவதோடு மாதாந்த, வாராந்த அடிப்படையில் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும். பயன் பாடில்லாத காணிகளில் துப்புரவு செய்தல், வேலி அமைத்தல் (Fencing), சுற்று மதில் அமைத்தல், பயன் தரு மரங்கள் நடுதல் போன்றவையும் மிகச் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

V4 Greenz
077 968 4284,077 443 0364

## German Language Academy

★ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தியடையச் செய்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு மிக சிறந்த முறையில் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளலாம்.

★இங்கு கற்கும் மாணவர்களுக்கு எமது ஆசிரியர் அவர்களால் தயாரித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

German Language Academy
#23, Palaly Road, Jaffna.
0779707322

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL — Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2** — Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR** (Quick learning programme) — Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH** — Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்குத் தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்துக்கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறையுடன் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்கமுடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை

யாழ். மண்ணில் புதிய உதயம்...

வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்குத் தேவையான பொருள்கள், ஆவணங்களை குறுகிய நாள்களில் குறைந்த செலவில் அனுப்புவதற்கு இன்றே நாடுங்கள். எமது மேலதிக சேவையாக, வெள்ளவத்தை மகாராஜா நிறுவனத்தின் ஊடாக லண்டன், சுவிஸ், கனடா போன்ற நாடுகளிற்கு குறைந்த கட்டண பார்சல் சேவை (NORMAL SERVICE)

கடல் உணவுப் பொருள்களை ரின் (Tin) பொதி செய்து அனுப்பும் வசதி

10 Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு நம்ப முடியாத விசேட விலைக்கழிவு

தொடர்புகளுக்கு: இல.621, பருத்தித்துறை வீதி (முத்திரைச்சந்தை), நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.0243244261

கிளைகள்:
சஜீஸ் கொமினிக்கேசன் இல.22, பஸ்நிலையம், வவுனியா. 0242222166
நீதிமன்றம் முன்பாக ஏ 9 வீதி, கிளிநொச்சி
தபாற்கந்தோர் அருகில் பிரதான வீதி, முள்ளியவளை.

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 2 ஆம் நாள் -கற்பகதருக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உணரப்படாத உண்மைகள் 06

சீர்குலையும் தமிழர் பண்பாடு 07

திருவிழாவும் தேர்தல் பறவைகளும் 03

ஓயாத புயல் 19

இராணுவ ஆட்சியை நோக்கிய மண்கொள்ளை 23













# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 01

உதயன் | 28 ஏப்ரல் 2013 | ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள்: இருபத்துநான்கு


# கைகொடுத்த தமிழர்கள்

லதீப் பாரூக்

தமிழரசுக் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், மற்றும் அதன் நாடாளுமன்ற அங்கத்தவர் எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் முஸ்லிம் விரோதப் பரப்புரைகளுக்கு எதிராக, அண்மையில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பி இருந்தனர். முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளின் வங்குரோத்து அரசியல் சூழலையும் அவர்கள் இதன்போது வெளிப்படுத்தி இருந்தனர்.

அரசியல், சமய, பொருளாதார மற்றும் கலாசாரத் தளங்களில் திட்டமிட்ட தாக்குதல்களை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கி வருகிறது. அநுராதபுரத்தில் நானூறு ஆண்டு காலம் பழமையான முஸ்லிம் பெரியார் ஒருவரின் அடக்கத்தளம் தாக்கி அழிக்கப்பட்டதோடு ஆரம்பித்து, மிகத் தீவிரமானதாக இன்று இது உருவெடுத்துள்ளது. முஸ்லிம் பெண்கள் அணிகின்ற பாரம்பரிய ஹிஜாப் ஆடையை அணிந்தமைக்காக அவர்களைத் தாக்குகின்ற அளவுக்கு இந்த இனவாதிகள் சென்று விட்டனர். முஸ்லிம் விரோதப் பரப்புரைகள் ஒரு புறமும், சட்டத்துறையினர் இக்குழுவினருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுப்பதற்கு தவறி வருகின்றமையும், முஸ்லிம்கள் மத்தியில், குறிப்பாக சிங்கள சமூகத்தினர் மத்தியில் வாழ்கின்ற முஸ்லிம்கள் பயத்துடன் வாழ்வதற்கும், அச்சத்துடன் இரவுகளைக் கழிப்பதற்கும் வழி செய்கின்றன. குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, பாதிக்கப்படுபவர்களைப் பாதுகாப்பதோடு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய கடப்பாடுள்ள பொலிஸாரின் முன்னிலையிலேயே இச்சண்டியர்களின் எல்லா வன்டாவாளங்களும் அரங்கேறுகின்றன. பொலிஸார் தமது கடமையை மறந்து, பார்வையாளர்களாக இருக்கும் நிலையில், பாதிக்கப்படுவர்கள் தமக்கெதிரான வன்முறைகளின் போது முறையிடுவதற்கு ஆதரவற்ற நிலையே தொடர்கின்றது.

நிலைமை நாளுக்குநாள் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. சமாதானத்தை விரும்புகின்ற பௌத்தர்களின் மனங்களில் விசத்தைக் கலக்கின்ற அளவுக்கு இந்நிலை இன்று தீவிரமாகியுள்ளது.

இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில், களனிப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் சங்கைக்குரிய கல்கந்தே தம்மானந்த தேரர் அளித்த செவ்வியில்,

''நாட்டில் நிலவுகின்ற சமூக, அரசியல் ரீதியான பிரச்சினைகள் பேச்சு மூலமாகவே தீர்க்கப்பட வேண்டும். இதனைச் செய்வதற்கு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து நாம் தவறியிருக்கின்றோம். தற்போது மற்றுமொரு வன்முறைச் சூழல் உருவாகின்ற நிலை நாட்டில் காணப்படுகின்றது. எந்நேரமும் முஸ்லிம்களுக்கு எதிரான தொரு கருப்பு ஜூலை இடம்பெற்று விடுமோ என்று நான் அஞ்சுகின்றேன்'' என்கிறார்.

இவ்வாறானதொரு இக்கட்டான கால கட்டத்தில், தமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இப்பிரச்சனை தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என அவர்கள் எதிர்பார்ப்பது மிகவும் இயல்பானது. தமது பள்ளிகளுக்கும், கதிரைகளுக்கும் அபாயம் நேர்ந்து விடும் என்பதற்காக, முஸ்லிம் சமூகத்தின் வாழ்வா, சாவா என்றிருக்கின்ற பிரச்சினையைப் பற்றி வாய் திறக்கவே முஸ்லிம் பிரதிநிதிகள் தயங்குகிறார்கள். சிலர் மறுதலையாகவும் பேசி வருகிறார்கள்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக முஸ்லிம் சமூகம் அனுபவித்து வருகின்ற இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பியமைக்காக சம்பந்தன், சுமந்திரன் இருவரையும் முஸ்லிம் சமூகம் மிகவும் பாராட்டுகின்றது. ஏப்ரல் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் சம்பந்தன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட உரையாற்றி இருந்தார்.

இவ்வாறு தமிழரசுக் கட்சி [illegible] எழுப்பிய போதிலும், தமது சொந்த அரசியல்வாதிகள் இவ்விடயத்தில் நடந்து கொள்கின்ற முறை முஸ்லிம் சமூகத்திற்குத் திருப்தியாக இல்லை.

இவ்விதம் மௌனம் காக்கும் அரசியல் பிரதிநிதிகள் ஒரு புறமிருக்க, 'மற்றொரு கிரகத்தில்' வாழும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், முஸ்லிம்கள் எதுவிதப் பிரச்சினையையும் எதிர்கொள்ளவில்லை என முழுமையாக முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுக்கும் வேலையையும் செய்திருக்கிறார். பொமிலியான வில் பெஷன் பக் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிராக நிலுவையில் இருந்த வழக்கை, வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு, அதன் உரிமையாளரை மற்றொரு முஸ்லிம் நாடாளுமன்ற அங்கத்தவர் அச்சுறுத்தி வந்தார் எனவும் அறிய முடிகிறது. இத்தகைய செயற்பாடுகள் இனவாதிகளுக்கு மேலும் உற்சாகம் அளித்து, தமது பரப்புரைகளை மேலும் தொடர்வதற்கான உந்துதலையும் வழங்குகின்றன.

ஏப்ரல் ஐந்தாம் திகதி பாகிஸ்தான் வெளிநாட்டு செயலர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி இரு தரப்புப் பேச்சுக்காக கொழும்பு வந்திருந்த போது, முக்கிய முஸ்லிம் அரசியல்வாதிகளுடனும், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளுடனும், அண்மைக் கால நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கில், கலந்துரையாடல் ஒன்றை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவராலயம் ஏற்பாடு செய்திருந்தது. பாதுகாப்புச் செயலாளருடனான கலந்துரையாடலுக்கு முன்னதாக, இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

[illegible] இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம். அஸ்வர் உள்ளிட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் பலர் பாகிஸ்தான் வெளிநாட்டுச் செயலாளரிடம், முஸ்லிம்களின் நிலைமையைப் பற்றிய பல்வேறு விடயங்களை செயலாளருக்குத் தெளிவுபடுத்தினர். ஆரம்பத்தில் பேசிய ரவூப் ஹக்கீம், தீவிரவாத அமைப்புக்கள் அதிகரித்துள்ளமையால், நாட்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற அபாயங்களை விவரித்தார். தொடர்ந்து பேசுவதற்கு எழுந்த அஸ்வர் முஸ்லிம்கள் நாட்டில் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக கூறப்படுகின்றமையை அர்த்தமற்றதாக்கி விட்டார். எல்லா சமூகங்களும் சமாதானமாக நாட்டில் வாழ்வதாகவும், முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் வதந்திகள் மாத்திரமே என்றும் அவர் குறிப்பிட்டார்.


முஸ்லிம் தலைமைகள் இவ்வாறு தமக்குள் முரண்டுபட்டுக் கொண்டு நிற்கும் நிலையில் முஸ்லிம்களுக்காகத் தமிழ்த் தலைமைகள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியமை நிச்சயம் கவனத்துக்குரியது.



> கடந்த ஒன்றரை ஆண்டுகளாக முஸ்லிம் சமூகம் அனுபவித்து வருகின்ற இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பியமைக்காக சம்பந்தன், சுமந்திரன் இருவரையும் முஸ்லிம் சமூகம் மிகவும் பாராட்டுகின்றது. ஏப்ரல் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் சம்பந்தன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட உரையாற்றி இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டண உயர்வு அரசுக்கு ஆப்பு




■ அதிரன்

அரசு அண்மையில் மேற்கொண்ட மின் கட்டண உயர்வு அரசுக்கே தலையிடியாக மாறிவிட்டது. இந்த மின் கட்டண உயர்வினால் அரசுக்குள்ளேயே பெரும் கருத்து மோதல்கள் வெடித்திருக்கின்றன.

மின்கட்டண உயர்வுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் ஒருபுறத்தில் போர்க் கொடி தூக்கியுள்ள அதேவேளை அரசுக்குள் இருக்கும் அமைச்சர்களும் மின்கட்டண உயர்வை கடுமையாக எதிர்க்கிறார்கள். இந்த மின்கட்டண உயர்வால் தாம் மக்கள் முன்னிலையில் நடமாட முடியாத திரிசங்கு நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

என்றும் இல்லாதவாறு அதிகரிக்கப்பட்ட இந்த மின் கட்டணத்தால் இப்போது அரசுக்குப் பெரும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சரவை கூட இரண்டுபடும் அளவுக்கு மின் கட்டண உயர்வு தொடர்பான கருத்துக்கள் வலுத்துள்ளன. அரசுக்குள் இருக்கும் அமைச்சர்கள் பலர் மின்கட்டண உயர்வை கடுமையாக எதிர்க்கின்றனர். அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண ஆகியோர் மின் கட்டண உயர்வை கடுமையாக எதிர்த்து கருத்து வெளியிட்டுள்ளனர். அரசின் இந்த நடவடிக்கை சாதாரண மக்களை படுகுழியில் தள்ளுவதுபோன்று உள்ளது என்று தெரிவித்துள்ளனர். முன்னாள் மின்சக்தி அமைச்சரான சம்பிக்க ரணவக்க மின்கட்டண உயர்வு தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்து அரசுக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

மின்சார கட்டண உயர்வு அரசுக்கு எதிரான சதித்திட்டமா? என்பதை ஆராயுமாறு சம்பிக்க ரணவக்க ஜனாதிபதி மஹிந்தவிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார். வீட்டுப் பாவனையாளர்களின் மின்கட்டணத்தை அதிகரித்ததன் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே இடைவெளியை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். நிதியமைச்சின் செயலாளரே இந்த மின்கட்டண உயர்வை முன்வைத்திருக்கிறார் என்றும் இதனைத் தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் பகிரங்கமாகச் சாடியிருக்கிறார்.

**அரசுக்குள் இருக்கும் அமைச்சர்கள் பலர் மின்கட்டண உயர்வை கடுமையாக எதிர்க்கின்றனர். அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண ஆகியோர் மின்கட்டண உயர்வை கடுமையாக எதிர்த்து கருத்து வெளியிட்டுள்ளனர். அரசின் இந்த நடவடிக்கை சாதாரண மக்களை படுகுழியில் தள்ளுவதுபோன்று உள்ளது என்று தெரிவித்துள்ளனர்.**

அமைச்சர் சம்பிக்க இப்படிக் கூறியுள்ள நிலையில் அமைச்சரவைப் பேச்சாளரான கெஹெலிய ரம்புக்வெலவோ அதற்கு எதிர்மாறான கருத்தை வெளியிட்டிருக்கிறார். இந்த மின்கட்டண உயர்வு அரசினால் நன்கு ஆராய்ந்து ஆற அமர எடுக்கப்பட்ட முடிவு என்றும் இது தனிநபர் முடிவல்ல என்றும் கூறியுள்ள அமைச்சர் கெஹெலிய, அடுத்த ஆண்டு ஜனவரிக்கு முன்னர் மின்கட்டணத்தில் ஒருபோதும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று அரசின் முடிவை அடித்துக் கூறியிருக்கிறார்.

இதன் மூலம் மின்கட்டண உயர்வு தொடர்பில் அரசுக்குள்ளேயே இரு வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்பது தெட்டத்தெளிவாகியிருக்கிறது. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர் மின்கட்டணத்தை எதிர்த்துள்ள அதே நேரத்தில் அதனை நியாயப்படுத்தும் விதத்தில் அமைச்சரவையின் பேச்சாளர் கருத்து வெளியிடுகிறார். வேடிக்கையான விடயமாக இருக்கிறது இது. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைவரினதும் ஒட்டுமொத்த முடிவையே அரசு அமைச்சரவைத் தீர்மானமாக அறிவிக்கிறது. ஆயினும் மின்கட்டண விடயத்தில் அது முரண்பாடாகக் காணப்படுகிறது. அமைச்சர்களே எதிர்க்கும் மின் கட்டண உயர்வை அரசு எப்படி நடைமுறைக்குக் கொண்டு வந்தது என்று இப்போது எழுந்துள்ள கேள்வி.

இதனால் அரசுக்குள் இரண்டுபட்டு மோதிக்கொள்ளும் நிலை மின்கட்டண உயர்வால் ஏற்பட்டிருக்கிறது.

நியாயமற்ற விதத்தில் உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணங்களால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள். எனவே இதனை மீளாய்வு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரியிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க நாடாளுமன்றத்திலும் மின்கட்டண உயர்வு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. மின்கட்டண உயர்வை எதிர்த்து எதிர்க்கட்சிகள் கடந்த 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிரணியினர் மீது தண்ணீர்ப் போத்தல்களை வீசி தாக்குதல்களை மேற்கொண்டதால் சபையில் பெரும் களேபரம் ஏற்பட்டது. இருதரப்பினரும் சரிக்குச் சரி மோதிக் கொண்டனர். இவ்வாறு ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து மின்கட்டண உயர்வைப் பற்றி ஆராய அமைச்சரவையைக் கூட்டியிருந்தார் ஜனாதிபதி. ஆயினும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது மின்கட்டண உயர்வை மீளாய்வு செய்வதற்கு உருப்படியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர் கடும் விசனம் அடைந்திருக்கிறார்கள்.

ஒட்டுமொத்தில் மின்கட்டண உயர்வு அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் பெரும் நெருக்கடியையும் அதிருப்தி நிலையையும் உண்டுபண்ணியிருக்கிறது.

முன்னர் விலைவாசி உயர்வு, எரிபொருள் விலையேற்றம் ஆகியவற்றை அரசு மேற்கொள்ளும்போது அதனை எதிர்க்கட்சிகள் மட்டுமே எதிர்த்து வந்தன. இதனால் அவை அரசுக்குப் பெரிய பிரச்சினையை உண்டு பண்ணவில்லை. ஆயினும் இப்போது நிலைமை வேறு. அரசு செய்த மின்கட்டண உயர்வுக்கு எதிராக அரசுக்குள் இருப்போரே கொதித்தெழுந்திருக்கிறார்கள். இதனால் இப்போது பெரிய சிக்கலுக்குள் மாட்டியிருக்கிறது அரசு. இந்த சிக்கலில் இருந்து மீள்வதற்கு அரசு அடுத்து என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றது என்பதையே இப்போது இயல்பாக எழும்கேள்வி. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாவும் தேர்தல் பறவைகளும்



ஔண்யன்

> உள்ளூர் பிரபலங்கள் சிலருக்கும் தேர்தல் என்ற திராட்சை பற்றிய கனவுகள் நாவில் நீரூறச் செய்துள்ளன. தங்களால் அது எப்படியும் எட்டப்படக் கூடிய கனி என்பதே அவர்களின் கனவு.

புதூர் நாகதம்பிரான் திருவிழா பிரசித்தமான ஒன்று. மற்றைய நாள்களில் எப்போதாவது அத்தி பூத்தால் போல் வந்து சேரும் பக்தர்களையே கண்டு கொண்டிருந்த கோயிலும் அதன் சுற்றுப்புறமும் திருவிழா நாளன்று சனக்கூட்டத்தால் நிரம்பி வழியும். எள்விழுந்தால் எண்ணையாகும் அளவுக்கு கூட்டம். நூறு மைலுக்கு அப்பால் இருந்தும் வண்டில் கட்டிக் கொண்டு ஆயிரக் கணக்கான மக்கள் வந்து குவிவார்கள். கச்சான், கடலை, கற்பூரம் விற்போர், மணிக் கடை காரர், ஐஸ்கிறிம் காரர்கள் என்று எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகளே தெரியும். போதாக் குறைக்கு ஆலயத்தைச் சூழவுள்ள எல்லா மரம், செடி கொடிகளிலும் வர்ண விளக்குகள் வரிசை கட்டி அந்தப் பகுதியையே பகலாக்கி நிற்கும்.

காலையில் எல்லோரும் போய்விட, கிழிந்து கிடக்கும் கச்சான் பைகளோடு கோயில் பிரகாரம் யாரும் அற்ற அநாதையாக அடுத்த திருவிழாவுக்காக ஏக்கத்துடன் காத்திருக்கத் தொடங்கும்.

தேர்தலும் கிட்டத்தட்ட புதூர் நாகதம்பிரான் திருவிழா போலத்தான். நீண்ட காலமாக 'இந்தா, அந்தா' என்று இழுத்தடித்துக்கொண்டிருந்த வடமாகாண சபைத் தேர்தலை வைப்பதற்கு இப்போதுதான் அரசுக்கு மனம் வந்திருக்கிறது. அதுவும் அமெரிக்கா போன்ற சர்வதேச சக்திகள் கழுத்தில் கத்தி வைக்காத குறையாக இலங்கையை மிரட்டிய பின்னர் தான் வடமாகாணத் தேர்தலுக்கு நாள் குறிக்க சோதிடர்களைத் தேடி ஜனாதிபதி ஓடிப்போனார்.

அவர்களும் ஒரு நல்ல நாளை குறித்துக்கொடுக்க அந்தச் சூட்டோடு சூடாக 'செப்ரெம்பரில் வடமாகாண தேர்தல்' என்று வாய் நிறையப் பல்லோடு திருவாய் மலர்ந்தருளினார். என்னதான் சோதிடர்கள் நவக்கிரகங்களை அங்கும் இங்கும் மாற்றி அமைத்தாலும் கூட வடமாகாணத் தேர்தலில் அரச தரப்பு மண் கவ்வும் என்பது அரசுக்கே நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். ஆயினும் ஓரளவுக்கு கௌரவமாக தோற்போம் என்பதற்காகவே தனக்குச் சதாகமான சூழல் கனியும்வரை அரசு வடமாகாணத் தேர்தலை ஒத்தி வைத்துக்கொண்டே வந்தது.

இது வேடிக்கை என்னவென்றால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் பிரசவிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் விளைவாகவே இலங்கை மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான தற்காலிக தீர்வை தரக் கூடிய வகையில் இந்த மாகாண சபைகள் அமையும் என்றோ அல்லது மாகாண சபைகளைக்காட்டி உரிமைக்காக போராடும் தமிழர்களின் போர்க் குரலை இல்லாமல் செய்ய முடியும் என்றோ இந்திய நம்பியிருக்க வேண்டும். ஆக மொத்தத்தில் 13 ஆவது திருத்தத்தில் உருவான மாகாண சபையால் கிட்டக்கூடிய கொஞ்சநஞ்ச நன்மைகளையும் இதுவரை வடக்கு, மாகாணங்களே அனுபவித்திருக்க வேண்டும். ஆனால் யதார்த்தம் வேறாகவே உள்ளது. வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் சிறப்பாக மாகாண சபை ஆட்சி நடந்துகொண்டிருக்க, வடக்கும் கிழக்கும் இதுநாள் வரையும் போரின் கொடும்பிடியில் சிக்கி சின்னாபின்னப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்காக மாகாண சபை ஆட்சி வந்திருந்தால் வடக்கிலும் கிழக்கிலும் பாலாறும் தேனாறும் ஓடியிருக்கும் என்று அர்த்தம் இல்லை. எந்த மாகாணங்களுக்காக மாகாண சபை ஆட்சி கொண்டுவரப்பட்டதோ அந்த மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்கள் அதன் பலாபலனை அனுபவித்தது ஒரு முரண் நகைதான்.

இந்த நிலையில் கிழக்கில் ஒரு பொம்மை ஆட்சியை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் என்ற போர்வையில் அரசு ஏற்படுத்தி இருந்தது. கடந்த வருடம் மீண்டும் நடைபெற்ற கிழக்கு மாகாணத் தேர்தலில் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் கூட்டமைப்பு ஆட்சிக் கட்டிலை தவறவிட்டது. இப்போது வடமாகாணத்தின் முறை.

வடமாகாணத் தேர்தல் செப்ரெம்பரில் என்று ஜனாதிபதி சொல்லி வாய் மூடும் முன்னரே வரிசை கட்டிக் கொண்டு அரசியல் வாதிகள், அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்குமான தமது தேர்தல் கால படையெடுப்பைத் தொடங்கி விட்டார்கள். இந்த வாரத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்க, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் என்று அந்தப் பட்டியல் நீளத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு வருபவர்களின் உண்மையான நோக்கம் தமிழ் மக்கள் மீதான திடீர் கருணை அல்ல. தேர்தல் கால நடவடிக்கைகள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கான ஒரு நாடி பிடிப்புக்காக மாத்திரமே இத்தகைய வராது வந்த மாமணிகளின் பிரசன்னம் நிகழத்தொடங்கியிருக்கிறது.

இதேவேளை உள்ளூர் பிரபலங்கள் சிலருக்கும் தேர்தல் என்ற திராட்சை பற்றிய கனவுகள் நாவில் நீரூறச் செய்துள்ளன. தங்களால் அது எப்படியும் எட்டப்படக் கூடிய கனி என்பதே அவர்களின் கனவு. குறிப்பாக புலிகள் அமைப்பில் முக்கிய பதவிகளில் ஒட்டிக் கொண்டிருந்த சிலருக்கும் இந்தக் கனவு தோன்றி இருக்கிறது. அவர்களும் தமது விருப்பத்தை பகிரங்கமாகவே தெரிவிக்கத் தொடங்கி இருக்கின்றனர்.

கடைசியில் தேர்தல் முடிந்த பின்னர் 'சீச்சி! இந்த பழம் புளிக்கும்' என்ற கதையாக ''இந்தச் சனங்கள் இப்படித்தான். நல்லது செய்ய நினைச்சாலும் காலம் இல்லை.'' என்று முனகிக்கொண்டே மூலையில் அவர்கள் சுருள வேண்டியது தான்.

இதேவேளை, தேர்தல் பறவைகளின் முன்னோட்ட வரவு இன்னும் சிலரின் வயிறுகளில் புளியைக் கரைக்கவும் தவறவில்லை. ''அரச தரப்பின் முதலமைச்சர் வேட்பாளர் நானே'' என்று மார் தட்டிக்கொண்டு திரிந்தவர்கள் திருதிருவென திருட்டு முழியோடு செய்வதறியாது நிற்கிறார்கள். ஏனெனில் அரச தரப்பு சார்பில் வந்து இறங்கிய தேர்தல் பறவைகள் மக்களின் மனநிலை என்ன என்பது பற்றி அரச உயர்மட்டத்துக்கு செய்தி கொண்டு செல்லப்போவது உறுதியான விடயம். இந்த நிலையில் ''நாங்கள் எள் என்று சொன்னால் போதும், மக்கள் எண்ணெயாக மாறிவிடுவார்கள்'' என்று தென்னிலங்கையில் தாம் அடிக்கும் 'பீலா' வெளியே தெரிந்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு. அப்படித் தெரிந்தால் முதலமைச்சர் வேட்பாளர் என்ற கனவு மாத்திரமல்ல சாதாரண வேட்பாளருக்குரிய கனவு கூட கலைந்துவிடுமோ என்ற கலக்கம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத்-தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பவற்றின் போது இதே தேர்தல் பறவைகளால் வடக்கு வான்பரப்பு நிறைந்து கிடந்தது. நிறைய வாக்குறுதிகளையும் நிறையக் கனவுகளையும் இந்தப் பறவைகள் ஊரெங்கும் எச்சமிட்டன.

எல்லா மதில்களிலும் அங்குல இடைவெளி தானுமின்றி, விளம்பரங்கள் விதவிதமான வர்ணங்களில் சிரித்துகொண்டிருந்தன. அவையும் தேர்தல் பறவைகளின் வாக்குறுதிகளை வேறுவேறு வடிவங்களில் பார்ப் போரிடத்தே திணிப்பதற்கு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் தேர்தல் முடிந்ததுமே பறவைகளின் அசுமாத்தத்தை காணவே முடியவில்லை. அவை தம்பாட்டுக்கு வாக்குறுதிகளை நோட்டீஸ்களில் கைவிட்டுவிட்டு எதுவும் நடக்காதது போல பறந்தோடிப் போய்விட்டன.

இப்போது மீண்டும் ''அபிவிருத்தி'', ''ஜனநாயகம்'', ''அரச அராஜகம்'' என்பன போன்ற குரல்களின் மூலம் பழைய மொந்தையில் புளித்துக்கிடக்கும் வாக்குறுதிகளை புதிதான பாத்திரம் ஒன்றில் பருகக் கொண்டுவருகின்றன. முலாமிடப்பட்ட இந்த வாக்குறுதிகள் ஏற்கனவே கேட்டுக்கேட்டு புளித்துப்போனவை தான். அவற்றின் ஒரு வீதத்தைக்கூட இந்த தேர்தல் பறவைகளால் நிறைவேற்ற முடியாது என்பது மக்களுக்கு நன்கு தெரியும். தேர்தல் நெருங்கும்போது சைக்கிள்களையும், தையல் மெஷின்களையும் தமது காலைச் சுற்றி வருபவர்களுக்கு கொடுத்துவிட்டு, அதையே வடக்கின் மாபெரும் அபிவிருத்தியாக படம்காட்டி ''நீங்கள் வாக்களித்து எம்மை வெல்ல வைத்தால் இதேபோன்று நூறு மடங்காக அபிவிருத்தி செய்து வடக்கை முன்னேற்றலாம்'' என்று சொல்பவர்கள், தேர்தல் முடிந்ததும் தாம் தோற்றுப்போனது போல தமது வாக்குறுதிகளையும் தோற்கடித்துவிட்டே செல்கிறார்கள். பின்னர் மறுபடி இன்னொரு தேர்தல் வரும்வரை சைக்கிள்களும் வாக்குறுதிகளும் தூசு தட்டப்படுகின்றன. இப்போது கூட வடமாகாணத் தேர்தலுக்காக அரச நிதி ஒன்றை அப்படியே 'லபக்கி' சைக்கிள்களாக உருமாற்றி ஒரு கட்சி காத்திருக்கவே செய்கிறது.

உண்மையிலேயே மக்களுக்கான அரசியல் செய்பவர்கள் நம்பமுடியாத வாக்குறுதிகளையும், இலவசங்களையும் அள்ளி வீச வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அதற்கு மாறாக மக்களை விலை கொடுத்து வாங்குபவர்கள் உண்மையிலேயே மக்கள் நலனில் அக்கறை இல்லாதவர்களே. ஏனெனில் தமது வாக்குக்காக மக்களுக்கு இலவசங்களை கொடுக்கும் இவர்கள், இன்னொரு ஆதாயம் கிடைக்கும் வரை தமது சொந்த மக்களை யாருக்கும் அடகு வைக்கவும் தயங்கமாட்டார்கள். எனவே எப்போதுமே இலவசங்களையும் வாக்குறுதிகளையும் ஏற்றுக்கொள்வது போல வெளியே காட்டிக்கொள்ளும் மக்கள் கடைசியில் தேர்தல் நாளன்று தமது மனக்கிடக்கைகளை வாக்குகள் வடிவில் வெளிப்படுத்தி விடுகிறார்கள்.

வரலாறு எப்போதும் ஒரே திசையில் பயணிப்பதில்லை தான். ஆயினும் சிலமுறை வரலாறு தன்னைத்தானே மீளமீள பிரசவித்துக்கொள்ளவும் தவறவில்லை. அதேபோன்ற மீள்பிரசவமொன்று வடமாகாணத் தேர்தலில் நிகழும் தருணத்தில் தேர்தல் பறவைகளின் இரைச்சல் காணாமல் போயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியை நோக்கிய மண்கொள்ளை

சந்திரசேகர ஆஷாத்

> பரம்பரை பரம்பரையாக தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த கிழக்கு மாகாணக் குடிப் பரம்பலில் இப்போது 30 வீதம் சிங்களவர்கள் ஆகிவிட்டனர்.

எந்தவொரு நியாயமான மனிதனும் தான் பிறந்த மண்ணை தனது உயிரிலும் மேலாக நேசிக்கிறான். அவன் பிறந்த பின்பு தவழ்ந்ததும் தவழ்ந்தபோது அள்ளித் தின்றதும் விழுந்தெழுந்து நடை பயின்றதும் பள்ளி சென்றதும் கற்றுத் தேர்ந்ததும் குடும்பம் நடத்தியதும் தாய் மண்ணில் தான். அவன் இறந்த பின்பும் எரிந்து சாம்பலாவதோ புதைந்து மக்கிப் போவதோ இந்த மண்ணில்தான். எனவே மனிதன் மண்ணுடன் இரண்டறக் கலந்தவன். அவன் உடல் மட்டுமல்ல உணர்வும் கூட மண்பற்றினால் செதுக்கப்பட்டது; மண்ணின் மேன்மையால் மகிமை பெற்றது.

எனவேதான் அடக்குமுறையாளர்களும் ஆக்கிரமிப்பாளர்களும் முதலில் மண்ணைக் கைப்பற்றுகின்றனர். ஏனெனில் மண்ணைக் கையகப்படுத்தும்போது மனிதர்கள் தொடர்பான சகலவற்றையும் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர முடியும் என அவர்கள் நம்புகின்றனர். மொழி, பொருளாதாரம், கலாசாரம் போன்ற மனித குல தனித்துவங்களை தமக்கு ஏற்றபடி அடக்கு முறையாளர்கள் வடிவமைக்க மண்ணைக் கைப்பற்றுவதையே முதலாவதும் அடிப்படையுமானதுமாகக் கொள்கின்றனர்.

அந்த அடிப்படையிலேயே 1950 ஆம் ஆண்டில் கல்லோயா குடியேற்றத் திட்டம் மூலம் கிழக்கின் மீதான ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இது படிப்படியாக விரிவாக்கம் பெற்று திருமலை மாவட்டத்தில் சேருவில என்றொரு சிங்களத் தொகுதி உருவாக்கப்பட்டு கிழக்கில் தமிழ் மக்களின் குடிப்பரம்பல் தொடர்ச்சி உடைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி கந்தளாயிலிருந்து திருமலை நகரம் வரை பல பகுதிகள் சிங்களக் குடியேற்றங்களால் நிரப்பப்பட்டுவிட்டன. திருமலை நகரின் சந்தைப் பகுதி கூட சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. இவ்வாறே சீனி உற்பத்தி, கரும்புச் செய்கை என்பவற்றுடன் அம்பாறையில் ஆரம்பமான சிங்களக் குடியேற்ற விஸ்தரிப்பு இப்போது அம்பாறை என்ற சிங்கள மாவட்டத்தையே உருவாக்கிவிட்டது. அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் படிப்படியாக விரட்டப்பட்டு வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்த கிழக்கு மாகாணக் குடிப் பரம்பலில் இப்போது 30 வீதம் சிங்களவர்கள் ஆகிவிட்டனர்.

மணலாற்றிலும் 1977 இன் பின்பு சிங்களக் குடியேற்றங்கள் முடுக்கிவிடப்பட்டன. 1984 இல் மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் மணலாற்றிலிருந்து முற்றாகவே தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர். எனினும் விடுதலைப் புலிகளின் பலம் காரணமாக மணலாற்றில் சிங்களவர்களை நிரந்தரமாகக் குடியேற்ற முடியவில்லை. போர் முடிவுற்ற பின்பு மணலாறு தனிப் பிரதேச செயலர் பிரிவாக்கப்பட்டு முல்லை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு வேகமாகச் சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழிடம் என்ற தகைமையை அழிக்க 1950 இல் இருந்து இன்று வரை பல வடிவங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்று கிழக்கு மாகாண சபையின் அதிகாரம் கூட சில முஸ்லிம் தலைவர்கள் சோரம் போன காரணத்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கைகளுக்குப் போய்விட்டது.

இவ்வாறு சிங்கள ஆக்கிரமிப்பு சக்திகள் கிழக்கில் தங்கள் கரங்களைக் காலத்துக்குக் காலம் வலுப்படுத்தி வந்த போதிலும் வடக்கில் அது இது காலவரை சாத்தியமற்றதாகவே இருந்துவந்தது. வருடமும் மண் மேலும் மேலும் வளம் பெற்று அதிகூடிய விளைச்சலைத் தரும். இப்போது இது படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது.

வளலாய் விருந்தினர் விடுதியிலிருந்து சந்தைக்கும் தொண்டமனாறு பலாலி வீதிக்குமிடையே தொண்டமானாறு சந்தி வரை பரந்த பிரதேசம் உண்டு. இது அரச காணி, இரண்டாம் உலக யுத்த காலத்தில் அந்த இடத்தில் பிரிட்டிஷ் படைத்தளம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் இடிபாடுகளை இப்போதும் காணலாம். அப்படி

றது என்றால் மண்பறிப்புக்கும் மேலாக வேறு உள்ளார்ந்த காரணங்களும் உண்டு என்பதை நிச்சயம் நம்பலாம். ஒன்று தமிழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்புக்களை அழித்து அவர்களைப் பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்தி ஓட்டாண்டிகளாக்கி அவர்களின் ஆற்றலை அழித்தல், அடுத்தது தமிழ்மக்களின் ஒரு பகுதியினரை என்றும் அகதிகளாகவே வைத்து அவர்களின் இனத் தனித்துவத்தைச் சிதைத்து அவர்களை எதிரிகளாக்குவது மற்றது இராணுவம்தான் விரும்பியபடி தமிழ் மக்களைக் கையாள்வது என்பதைத் தொடர்ச்சியான ஒடுக்குமுறை மூலம் அவர்களின் மனதில் பதிய வைத்தல்.

இறுதியாக இராணுவக் குடியிருப்புக்களில் குடும்பங்களின் வீட்டுத்திட்டம், சிமெந்து ஆலைத் தொழிலாளர்கள், துறைமுகப் பணியாளர்கள் எனச் சிங்களவர்களைக் குடியேற்றி கிழக்கைப் போல் வடக்கையும் படிப்படியாக சிங்கள மயப்படுத்தல். இவை நான்கும் ஒரு நீண்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தெளிவாகப் புரிய

தது. எனவே காணிப் பறிப்பு இன்னொரு வடிவத்தில் இங்கு அமுலுக்கு கொண்டுவரப்படுகிறது. அதாவது அபிவிருத்தி, பாதுகாப்பு என இரு வடிவங்கள் கொடுக்கப்பட்டு அதற்குச் சட்டபூர்வமான காரணங்களும் காட்டப்பட்டு காணி அபகரிப்பு முன்னெடுக்கப்படுகிறது. இவ்வகையில் வலிகாமம் வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் 24 கிராமசேவகர் பிரிவிலுள்ள 8,381 ஏக்கர் காணி இராணுவத் தேவைக்காகச் சுவீகரிக்கப்படுவதாக அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இவற்றில் இரண்டு விதமான பகுதிகள் உள்ளன. ஒன்று நிலத்தின் கீழ் சுண்ணாம்புக் கற்படுகை படர்ந்த செம்மண் பிரதேசம். இந்தப் பகுதி 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு மிளகாய், வெங்காயம், மரவள்ளி, வாழை, வெற்றிலை, முந்திரிகை என்பன விளையும் வளமான பூமியாக விளங்கியது. இதில் உள்ள சிறப்பம்சம், சுண்ணாம்புக் கற்படுகை காரணமாக மண்ணில் இடப்படும் இயற்கை உரங்கள் கீழ் இறங்க முடியாமல் மண்ணுடனேயே கலந்துவிடும். அதன் காரணமாக ஒவ்வொரு

ஒரு அரச காணி வசதியான பிரதேசமாக இருக்கும்போது ஏன் பொதுமக்களின் விளை நிலங்கள், குடியிருப்புக்கள், படைமுகாமுக்காக அபகரிக்கப்படுகின்றன.

அடுத்தது மயிலிட்டி வடபகுதியின் மிக முக்கிய மீன்பிடி மையங்களில் ஒன்று. மயிலிட்டி மீன் லொறி வந்தால்தான் கொழும்பு மீன்சந்தை விழிக்கும் என்று சொல்லுமளவுக்கு மயிலிட்டி மீன்களுக்கு கொழும்பில் மிகுந்த கிராக்கி உண்டு. அந்த மக்கள் சொந்தமாக வள்ளங்கள் வைத்து கடலில் நீண்ட தூரம் சென்று மீன்பிடித்து வருவதுண்டு. இன்று அந்த மயிலிட்டிப் பகுதியும் இராணுவவலயத்துக்குள் கொண்டுவரப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. தமிழ் மீனவ மக்களுக்கு வருவாய் தருவது மட்டுமன்றி இலங்கைப் பொருளாதாரத்துக்கே பங்களிக்கும் மயிலிட்டி ஏன் ஆக்கிரமிக்கப்பட்டது.

இந்த இரண்டு வகையான பிரதேசங்களையும் கொண்ட வலி.வடக்கின் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் வேறு வசதியான அரச நிலம் இருக்கத்தக்கதாக ஆக்கிரமிக்கப்படுகின்றன


ஆரம்பித்துவிட்டன.

இதேவேளை வவுனியா பேயாடி கூழாங்குளத்தில் தனியாருக்குச் சொந்தமான வயல் நிலங்கள் அபகரிக்கப்பட்டு கடற்படை முகாம் அமைக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. வவுனியாவில் கடல் எங்கே இருக்கிறது என்பது கடற்படையினருக்கு மட்டுமே வெளிச்சம். அங்கு நிறையக் காடுகள் அரச காணிகளாக உண்டு. ஆனால் அவர்களுக்கோ விவசாயிகளின் நல்லவிளை நிலங்கள் தான் தேவைப்படுகின்றன.

இது போன்றே கிளிநொச்சி உதிரவேங்கை வைரவர் ஆலயக் காணியும் படையினரின் உதவியுடன் சிங்களவர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பிருந்தே உதிரவேங்கை மரத்தின் கீழ் ஒரு சூலம் நடப்பட்டு கண்டி வீதியால் செல்வோரால் வழிபடப்பட்டு வந்தது. அந்த இடம் யானைகள் நடமாட்டம் அதிகமான பகுதியாதலால் வைரவர் யானைகளிடமிருந்து பயணிகளைப் பாதுகாப்பவர் என்ற நம்பிக்கை நிலவி வந்தது.

ஏற்கனவே கேப்பாபிலவில் பரம்பரை பரம்பரையாகக் குடியிருந்த மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டும் படைமுகாம் அமைக்கப்பட்டுவிட்டது.

முள்ளியவளையில் தமிழ்மக்களின் காணிகளில் முஸ்லிம்களைக் குடியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள் மக்களின் எதிர்ப்புக் காரணமாகத் தோல்வியடைந்தன. குறைவடையாமல் இருப்புக்குக்காக வன பரிபாலன பகுதியினரால் நடப்பட்டு நீரூற்றி வளர்க்கப்பட்ட தேக்கங்காட்டை இப்போதே அழித்து அதில் முஸ்லிம்களைக் குடியேற்ற முயற்சிகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் அவர் மறிச்சுக்கட்டியில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட முஸ்லிம்களின் பாரம்பரியக் காணிகளை மீட்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.



இப்படியான பரந்தளவு மண் கொள்ளை மூலம் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதன் மூலம் தமிழர்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், கலாசாரம், இனத்தனித்துவம், குடியியல் உரிமைகள் என்பன சிதைக்கப்படுகின்றன.

இத்தகைய திட்டமிட்ட இன அழிப்புக்கு எதிராகத் தமிழ் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவார்கள் என்பதை அரச தரப்பு நன்கறியும். அப்படிப் போராட்டங்கள் எழுச்சி பெற வேண்டும் என்பதே அரசின் சூழ்ச்சிகரமான நோக்கமுமாகும்.

இத்தகைய போராட்டங்களைக் காரணம் காட்டி வடக்கில் இராணுவ அதிகாரத்தைப் பாதுகாப்பு என்ற பேரில் மேலும் வலுப்படுத்தி தொடர்ந்தும் தமிழ் மக்களை ஓர் இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் அடிமையாக வைத்திருக்க வகுக்கப்பட்ட ஒரு நீண்ட நிகழ்ச்சி நிரலின் ஆரம்பகட்டமே இந்த மண் கொள்ளையாகும். அரசில் ஓர் அமைச்சராக விளங்குளம் விமல் வீரவன்ச உட்பட சிங்களக் கடும் போக்குவாதிகள் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தக் கூடாதெனப் பிரசாரம் செய்து வருவதும் இந்தத் திட்டத்தின் ஒரு அங்கம்தான்.

எப்படியிருப்பினும் வடக்கில் பிரகடனப்படுத்தப்படாத ஒரு இராணுவ ஆட்சியை மேலும் வலுப்படுத்தவே இந்த மண்கொள்ளை தீவிரமாகவும் வேகமாகவும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அதற்காக நாம் எமது உரிமைகளுக்கான போராட்டங்களை இடைநிறுத்திவிட முடியாது. ஆனால் இந்தப் போராட்டங்களைக் காரணம் காட்டி இராணுவ அடக்குமுறையை அதிகரிக்கின்றனரோ அதே போராட்டங்கள் இராணுவ அதிகாரத்தையே உடைத்துச் சிதற வைத்தமை இலங்கைத் தமிழ் மக்களின் அனுபவம் மட்டுமல்ல உலக வரலாறும் அதையே மீண்டும் மீண்டும் கற்பித்து வருகிறது. ★

ஞாயிறு காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பின் உண்மை

## அபத்தப் புலனாய்வு

■ ந.மயூரரூபன்



ஒரு படைப்பு; உருவாக்கம் பெறுவதற்கான இயங்கியல் தன்மை என்பது ஏற்கனவே 'இவ்வாறு' எனத் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக அமையமுடியாது. அதாவது, ஒரு மேசையை உருவாக்குவதிலுள்ள திட்டமிடுதல், கருவிகள், பலகை, அளவுகள், மாதிரிகள் என்பவற்றிலுள்ள முற்தீர்மானங்கள் இங்கிருக்க முடியாது. ஆனாலும் தமது இலக்கியச் சூழலில்; ஒரு குறித்த எழுத்தாளரின் அல்லது குறித்த படைப்பு மாதிரியை முன்னிறுத்தி 'அதுபோல' எழுதுவதும் நிகழ்கிறது என்பதை மறுப்பதற்குமில்லை.

எனினும் ஒரு படைப்பு; இல்லாத ஒன்றிலிருந்து தோற்றம் பெறுவதல்ல. குறிப்பாக படைப்பு கொண்டிருக்கின்ற மொழி, சம்பவம், கூட்டு- தனிமனித சுயங்களின் கருத்தியல், புவியியல், அரசியல், பொருளாதார, சமூக அமைவு, வரலாறு மற்றும் தொன்மங்கள் என பொது நிலைப் படிமங்களின்



இருப்புத் தருகின்ற மூலப் பொருள்கள் குறித்த 'திரு உரு' வாய் அமைந்துவிட்டன. எனினும் படைப்புகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாயே எப்போதும் அமைந்துவிடுகின்றன. எழுத்துக்கென்று ஒரு சுயத்துவம் (எழுதுபவனின் சுயத்துவ இயல்புகளோடு) இருப்பதை எவரும் மறுக்க முடியாது. இங்கு எழுத்தின் சுயம் என்பது சார்பு நிலைக்குட்படாதது. தனக்கான தன் விதிகளுடன் கட்டமைந்தது. ஒரு படைப்பு என்பது சமூகவியல் அல்ல, பொருளாதாரம் அல்ல, அரசியல் அல்ல, மொழியியல் அல்ல. ஆனால் படைப்பு சமூகவியலுடன் உறவு கொண்டது. அதே போல் பொருளாதாரத்துடனும், அரசியலுடனும் மொழியியலுடனும் உறவினைக் கொண்டது.

இலக்கியம்/படைப்பு தனக்கான வெளியுறவுகளால் தன்னை செழுமையுறச் செய்கிறது. இவ்வாறான வெவ்வேறு உறவுகளின், அமைப்புக் களின் அறிவியலின் தொடர்பு; படைப்பின் தனித்துவத்தை/ அதன் சுயத்தினை நிலை நிறுத்த துணைநிற்கிறது. ஒரே குண்டுச்சட்டியும், ஒரே குதிரையும் படைப்பின் திரைக் காட்சியாய் எத்தனை காலத்துக்கு நிலைத்திருக்க முடியும்.

எங்களிடம் (வாசகர்கள், விமர்சகர்கள்) ஓர் இயந்திரம் இருக்கிறது. நாங்கள் அந்த இயந்திரத்தை இப்படித்தான் உருவாக்கி வைத்திருக்கிறோம். அந்த மன இயந்திரம் சொல்லுகிறது;

நாவல் என்பது 'செங்கை யாழியான்' எழுதுவது போலவும், சிறுகதை என்பது 'தேவி பரமலிங்கம்' எழுதுவது... கவிதை 'அவர்' எழுதுவது போலவும் இருக்க வேண்டும்.

இது வெறுமனே எடுத்துக்காட்டு மட்டும்தான். மன இயந்திரத்தின் உற்பத்திப் பிரதி. இது 'போல' , 'அவர்' போன்ற மாதிரிப் படைப்புகளின் விருப்பினை எமது மனம் பயபக்தியுடன் பார்த்துக் கொண்டே இருக்கிறது. படைப்பு என்பது ஒருமை வடிவம் கொண்ட மன அமைவுகளின் உற்பத்தியாகவே எம்முன் பிரதி எடுக்கப்படுகின்றது.

அதேபோல் 'உள்ளொளி' என்ற இயந்திர உற்பத்தியை -மீள் உற்பத்திகளையே எமது விமர்சகர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள் நம்புகிறார்கள். உள்ளொளி கொண்டு எழுதுதல் என்பது ஒரு அதீத, உன்னத மனப்பாங்காகவே கையாளப்படுகிறது. இது தெய்வீகச்சுடர் வாலாயமாகி விட்டது என்கிற மாய நம்பிக்கையின் உறவினை உருவாக்குகிறது ஒரு படைப்புக்கு பல வகையான அர்த்தங்களேஅதற்கான ஆழத்தைத் தரவல்லது. உள்ளொளி என்ற ஒன்று (உள்ளொளிக்கு

> “ஒரு தனி மனிதன் (வாசகன்/ விமரிசகன்) ஒரு படைப்பை ; அதன் உண்மையை/ நம்பகத்தன்மையை வைத்தா- எதிர்பார்த்தா அணுகுகிறான். அது தருகின்ற அழகியல் அனுபவம் தான் அவனுக்குத்தேவை. அது தான் 'பிரதியின்பம்'.”

அறிவு நிலையியல் கருத்து நிலைத் தெளிவை /உணர் திறனை தரவல்ல அர்த்தப் படவும் பயன்படுத்தலாம் - எமது சூழலில் இது இல்லை) அறிகை நிலைக்கு எதிரானது தமிழவன் சொல்வது போல் இலக்கியப் பிரதி பல வாய்களைக் கொண்ட ஒரு மிருகம்.

ஆனால் நாம் ஒருமைப் பட்ட புள்ளியை நோக்கியே எமது வாசிப்பைக் குறுக்கிக் கொள்கிறோம்.

மூத்த நண்பர் ஒருவர் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். 'படைப்பின் உண்மைத்தன்மை; நம்பகத் தன்மை எப்பொழுதுதான் வாசகனுக்கு வெளியாவது?

ஒரு படைப்பில் உண்மை என்பது அதன்புனைவு வெளிக்குள்ளான உண்மையே தவிர புற உலகுதரும் உண்மையல்ல (புற உலகிலுள்ள உண்மையும் அரசியல், மத, வர்க்க, சாதி மேலாதிக்கக் கருத்தியல்கள் செமித்த உண்மைதான்)

படைப்பு மொழியாலானது. மொழி சிறு சிறு குறிகளாலானது குறிகளின் சேர்க்கையும் அமைவும் வாசிக்கப்படுகின்ற அர்த்தப்படுத்தப்படுகின்ற உண்மையைத் தருகின்றது.

டானியல் உண்மையை எழுதினாரா (எழுதியிருக்கலாம்) செங்கை ஆழியான் உண்மையை எழுதினாரா என்பது ஒரு விமர்சகனின் வாசகனின் கேள்வியாக அமைய முடியாது ஏனெனில் மொழி எப்போதும் கருத்துகளால் ஊடறுக்கப்பட்டது. மொழியில் கருத்து - கருத்தியல் கலந்தேயிருக்கும். புனைவுக்குள் உண்மையைத் தேடுவதென்பது அபத்தம்.

''அதிரியாருக்கு 1970 களில் ஏற்பட்ட பாலைதீவுப் படகு விபத்தில் ஒரேயொரு மகனையும் இழக்க நேரிடுகிறது''

இது 'ஒற்றைத் தென்னை' (நந்தினி சேவியர்) சிறுகதையில் உள்ள பிரதி தருகின்ற 'உண்மை' ஆகும். அதிரியார், அவரது மகன், இழப்பு உண்மையாக இருப்பதற்கு வாய்ப்பிருந்தாலும் அது புற உலகின் உண்மையல்ல; பிரதிக்குள்ளே அமைந்திருக்கும் உண்மை யதார்த்தில் அதிரியாருக்கு வேறு பெயர்- குண நலன்கள் இருந்திருக்க முடியும்.

வாசகசர்கள் படைப்புத் தருகின்ற புனைவு வெளிக்குள் 'மினைக்கட்டு புலனாய்வு செய்து' உண்மையைக் கண்டு பிடிப்பது; படைப்பின் இயல்பை சித்திரவதை செய்வதாகும். ஒரு படைப்பை- அதன் யதார்த்தத்தை உணராதவர்களே புனைவுக்குள் உண்மையைத் தேடுவார்கள்.

இங்கு உண்மை என்பது யாருக்குரியது என்ற கேள்வி எழலாம். படைப்பு உண்மையின் பன்முகத்தைப் பேசுவதாக அமையும். 'கருத்தியல் கல் போன்றது அல்ல' என்பார்கள். படைப்புத் தருகின்ற கருத்தியல் உண்மையும் அவ்வாறானதே. அதற்கு இருக்கின்ற பொருண்மைத்தன்மை என்பது இக்கல்லுக்குரியது அல்ல அதற்குப் பல குணங் கள் உண்டு.அதன்பௌதிக பௌதிக வாசிப்பால் அளவிடப்படுவது.

ஒரு தனி மனிதன் (வாசகன்/ விமரிசகன்) ஒரு படைப்பை ; அதன் உண்மையை/ நம்பகத்தன்மையை வைத்தா- எதிர்பார்த்தா அணுகுகிறான். அது தருகின்ற அழகியல் அனுபவம் தான் அவனுக்குத்தேவை. அதுதான் 'பிரதியின்பம்'. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணரப்படாத உண்மைகள்

■ மதுவிழி


உலகில் நடைபெற்ற எத்தகைய போர்களாயினும் சரி, முதலில் பலியாவது நீதியும் தர்மமும்தான். இவை பலியாகின்ற போது கூடவே இன்னும் இரண்டு தரப்பினர் பலியாகிவிடுகிறார்கள். பெண்களும் சிறுவர்களுமே இவ்வாறு மோசமாகப் பலியாகின்ற தரப்பனர்களாக காணப்படுகின்றார்கள். அது எந்த நாடாக இருந்தாலும் சரி, போரின் போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் சின்னா பின்னமாகிப்போனதே வரலாறு. அந்த வரலாறு இலங்கைக்கு மட்டும் விதிவிலக்காக இருந்திருக்கவுமில்லை.

இத்தகைய உண்மையை மிக அழுத்தம் திருத்தமாக உளவியல் ரீதியாக மிக அழகாக காட்ட முனைந்திருக்கின்ற ஒரு திரைப்படமே Turtles can fly (ஆமைகளாலும் பறக்க முடியும்). 'பக்மன் கொபாடி' உடைய நெறியாள்கையில் வெளி வந்திருந்த அந்தத் திரைப்படம். அரசியலையும் சமூகவியலையும் உளவியலையும் தொட்டுக் கொண்டு நகரும். படம் முழுதும் சிறுவர்கள் பட்டாளமே காணப்படுகிறது. அக்ரின், ரெகா, கென்கோர் பசோ மற்றும் சற்றலைற் என்று சிறுவர்களைக் கொண்டு நகரும் படம் சொல்லும் கதையும் அவர்களைப் பற்றியதே..



இங்கு அக்ரின் என்ற சிறுமியே படத்தின் முக்கிய பாத்திரம். அவளுடைய சகோதரனான கென்கோர் போரில் இரண்டு கைகளையும் இழந்தவன். அவர்களினுடைய பெற்றோர்கள் போரில் இறந்து விட்டார்கள். இன்னுமொரு பாத்திரமான சற்றலைற், அவர்களில் கொஞ்சம் வயதானவன். சற்று அறிவியல் தெரிந்தவனாக தன்னை காட்டிக்கொள்வதோடு முகாமில் இருக்கின்றவர்களை போர்ச்செய்திகளைப் பற்றி அறிவதற்காக வென்று சற்றலைற். 'டிஸ்' வாங்கிப்புட்டச் சொல்லி அறிவுறுத்துபவன். அமெரிக்க இராணுவத்தில் விருப்பமுள்ள அவன் பின்னர் அமெரிக்க கண்ணிவெடிக்கே தன்னுடைய காலை பறிகொடுத்ததிலிருந்து அமெரிக்காவை வெறுப்பவன். இங்கிருக்கின்று மிக முக்கியமான அதேநேரம் அதிர்ச்சியையும் தரக்கூடிய ஒரு பாத்திரம் ரெகா. வெறும் பதின்மூன்றே வயது நிரம்பிய அக்ரினுடைய மூன்று வயதுக் குழந்தை.





அது அவளுடைய குழந்தைதானா என்று கேட்பவர்களிற்கு ஆம் அது அவளுடைய குழந்தை தான் . அது அவளுடைய குழந்தை இல்லையா என்று கேட்பவர்களிற்கு ஆம் அது அவளுடைய குழந்தை அல்ல. கொஞ்சம் விளங்கிக் கொள்ள சிக்கலாக இருப்பது போலத்தான் அவர்களின் வாழ்க்கையும். சிலநேரம் அந்தக் குழந்தையுடன் அளவுக்கதிகமாக அன்பு காட்டும் அக்ரின் மாறாக சிலநேரங்களில் இரத்தம் வரும்படி அடிப்பது மட்டுமன்றி தன் வாழ்வைக் கலைத்த பிசாசு எனவும் பேசுகிறாள்.

படத்தின் ஆரம்பத்தில் மலைப்பாங்கான பிரதேசம் ஒன்றில் ஏறிவிழுந்து அக்ரின் தற்கொலை செய்யமுயல்வதோடு ஆரம்பக்கின்ற படம் பின்னகர்ந்து காரணத்தை விளக்க எத்தனிக்கிறது. ஒருநாள் இரவில் தன்னுடைய முகாமிலிருந்து யாருக்கும் தெரியாமல் வெளியேறும் அக்ரின் சிறிய நீர்நிலையை கடந்து சென்று தன்னுடைய ஆடையில் தீயைப் பற்றவைத்து இறக்கமுற்படுகிறாள். அக்கணம் அவளக்கு தன்னுடைய குழந்தை அழைப்பது போலிருக்கிறது. தீயை நீரில் நனைத்து அணைத்துவிட்டு உடனே முகாமுக்கு வருகிறாள்.

இன்னும் ஒருநாள் அவள் தன்னுடைய சகோதரனைக் கேட்கிறாள் ''தான் இந்த முகாமிலிருந்து வெளியேறி சொந்த நிலத்திற்கு போகவேண்டும் என்று. சகோதரனோ ''அது இப்போது முடியாது கொஞ்சம் பொறுத்துக்கொள்'' என்றுசொல்கிறான்.அவளோ''இல்லை இனி என்னால் இங்கே இருக்க முடியாது உடனே போக வேண்டும்'' என்றாள். மென்கிறான். அவனோ ''ஆத்திரத்துடன் நீ போற தெண்டால் போ நான் வரமுடியாது'' என்கிறான். அவளோ ''நான் போனால் நீ எப்படி பிள்ளையைத் தனியாகப் பார்த்துக்கொள்வாய். அதனால நாங்கள் இந்தப் பிள்ளையை விட்டிட்டு போவம். யாராவது இதை எடுத்து வளர்ப்பினம்'' என்கிறாள். சகோதரன் ''சரி அப்படிப் போகத்தான் வேண்டுமானால் இவனையும் கொண்டு போவம்'' என்கிறான்.

> அது அவளுடைய குழந்தையா? அவள் பெற்றால் அது அவளுடைய குழந்தையா? அது அவளின் எதிரியின் குழந்தை..! இப்போது அவள் சமூகத்திற்கு எப்படிச்சொல்வது தன்னுடைய குழந்தை என்றா..? இல்லை, தன்னுடைய எதிரியின் குழந்தை என்றா?



அந்தக் குழந்தையின் தாயோ (அக்ரின்) ''இல்லை. இவனை நாங்கள் எம்மோடு கொண்டு போக முடியாது. சனங்களிடம் நாங்கள் என்ன சொல்வது. இவன் எப்படிப் பிறந்தான் எனச் சொல்வது? அல்லது இவனை வீதியில் கண்டெடுத்தோமென்று சொல்லுவதா?'' என்கிறாள்.

உண்மைதான். அவளால் எப்படிச் சொல்லமுடியும் ஈராக் இராணுவத்தினர் குர்திஸ் மீது போர்தொடுத்து வந்தபோது அவர்களால் தான் சின்னாபின்னமாக்கப்பட்டதை.. அந்த அவமானத்தின் சின்னமாக இருக்கின்ற அந்தக் குழந்தையை அவளால் எப்படி தன்னுடைய குழந்தை என்று சொல்லமுடியும்.? அதுவும் வெறும் பதின்மூன்று வயதில் அது அவளுடைய இருப்பிடத்தை அழித்தவனின், அவளுடைய பெற்றோரை எரித்தவனின், அவளின் அழகான சிறு பராய வாழ்வைப் பறித்தவனின் குழந்தை.

அது அவளுடைய குழந்தையா? அவள் பெற்றால் அது அவளுடைய குழந்தையா? அது அவளின் எதிரியின் குழந்தை..! இப்போது அவள் சமூகத்திற்கு எப்படிச்சொல்வது தன்னுடைய குழந்தை என்றா..? இல்லை, தன்னுடைய எதிரியின் குழந்தை என்றா?

ஒரு சின்னாபின்னமான நாட்டில் முகாம் வாழ்க்கை வாழும் சிறுமியின் பதின்ம வயது மனோவியலை மிக எளிமையாக நேர்த்தியாக காட்டியுள்ள கோபாடி, அதன் மூலம் ஒரு கனதியான செய்தியை சொல்லியிருக்கிறார். அதாவது படம் அமெரிக்க ஈராக் போருக்கு முன்னர் ஆரம்பமாகி அமெரிக்க வருகையை காட்டிமுடிவடைகிறது. குர்திஸினுள் இராணுவம் வருகிறது. வீதியில் அமெரிக்க இராணுவம் அணிவகுத்து வருகின்ற அதேநேரம் அத[illegible] எதிர்த்திசையில் தன்னுடைய ஊன்றுகோலை ஊன்றியபடி சற்றலைட் சென்றுகொண்டிருப்பதைக் காட்டி முடிவடைகிறது.

ஆதிக்க அரசுகளின் இரும்புப்பிடிக்குள் சிக்குகின்ற சிறுபான்மை மக்கள் அனுபவிக்கின்ற வலிகளுக்கு வடிவங்கள் பல. வேண்டுமென்றே திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற சில அழிப்புச் செயற்பாடுகளும் வன்முறைகளும் ஒரு இனத்தை, அந்த இனத்தின் எதிர்கால சந்ததியை எவ்வாறு குறிவைத்து நடத்தப்படுகிறது என்பதை மிக யதார்த்தமாக காட்டியிருக்கிறார். இது குர்திஸ் இன மக்களிற்கு மட்டுமல்ல, ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்ட எல்லா இனமக்களின் வாழ்வியலிலும் உறைந்து போனதொரு மிகப்பெரிய உண்மை. வெறும் கேடிபில்லாவுக்கும் சேட்டைக்கும் ''தியேட்டர்களில்'' கொடுக்கின்ற முன்னுரிமையை சில உண்மைகளைச் சொல்லும் படங்களுக்கும் கொடுக்கலாம். ஆனால் உண்மைகள் தான் இப்போதெங்களுக்கு உறைப்பதேயில்லையே.! ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாற்றம் ஒன்றே நிரந்தரமானது, மாற்றங்கள் நிகழாவிட்டால் உலகத்தோடு ஒட்டி வாழமுடியாது. நல்லதுக்கான மாற்றங்களை உள்வாங்கினால் மட்டுமே நாம் பயனடைய முடியும் இல்லையேல் அழிவே மிஞ்சும்.

■ இளையவன்னியம்

# சீர்குலையும் தமிழர் பண்பாடு

பல்லினங்கள் பரந்துபட்டு வாழும் இந்த பிரபஞ்சத்தில் ஒவ்வொரு இனமும் தனக்கென தனித்துவத்தை கொண்டு வாழ்ந்து வருகின்றது. இதற்கு அடிப்படையான அம்சங்களில் மொழியும் பண்பாடும் முக்கியம் பெறுகிறது. மிருகங்கள் கூட தமக்கான பண்பாட்டுடன் வாழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன, சாதாரண வாழ்வில் மனிதனால் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் பண்பாடுகளாகின்றன என பண்பாட்டு மானிடவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். நடைமுறைகள் என்னும் போது மரபுகள், வழக்காறுகள், நியமங்கள், விழுமியங்கள், பட்டயங்கள், பழக்க வழக்கங்கள் என்பன அடங்குகின்றன.

நீண்ட நெடிய வரலாற்று சிறப்பு மிக்கதும் தமக்கென தனித்துவமான கலாசாரத்தை கொண்ட ஓர் இனமாக ஈழத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஏனைய சமூகங்களில் இருந்து உன்னதமான முறையில் தம்மை வேறுபடுத்துபவர்களாகவும் உள்ளனர். அத்துடன் சமூகத்தில் எவை குற்றங்களாக கருதப்படுகின்றதோ அவற்றை தமிழர் பண்பாடு புறந்தள்ளி உயர்ந்த, சீரிய, ஒழுக்க கோவைகளை கொண்டதாகவும் சமூகக் குற்றங்களை தடுப்பதாகவும் தமிழர் பண்பாடு அமைகின்றது. இன்றைய சுழலில் அதனை பேணி பாதுகாத்து வளர்ப்பது என்பது சவாலான விடயமாக மட்டுமல்லாது, கலாசார அடிப்படையில் ஆபத்தான, இருண்ட காலமாக எண்ணத் தோன்றுகிறது.

உரிமைக்காக போராடும் ஒரு சமூகம் அது தோற்கடிக்கப்படும் போது அவர்களின் தேசிய ஒற்றுமையை சீர்குலைக்க அலைந்து திரியும் வெற்றி கொண்ட சமூகம் பல்வேறு வழிகளிலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உரிமைக்காக போராடும் சமூகத்தின் மீது அநாகரிகமான துர்ப்பாக்கிய செயல்களை மேற்கொண்டு வருகின்றது. இதில் முக்கியமானது கலாசார சிதைப்பு. அநேகமாக குறித்த சமுகம் ஒருமைப்படும், இணையும் ஒன்றாக இது அமைவதால் கலாசார சிதைப்புக்கு திட்டமிட்டு வெற்றி கொண்டவர்கள் செயற்படுகிறார்கள்.

எமது புலத்தில் இதனை அப்பட்டமாக இன்று காணக் கூடியதாகவுள்ளது, என்றுமில்லாதவாறு விபசாரமும் அதிகரித்திருக்கிறது. இதுவரை யாழில் இரண்டு விபசார விடுதிகள் முற்றுகையிடப்பட்டுள்ளன. இதில் ஒன்று அண்மையில் பொது மக்களால் முற்றுகையிடப்பட்டிருந்தது. கற்பு என்ற சொல்லுக்கு இருக்கும் மரியாதையும், ஒருவனுக்கொருத்தி என்ற பாலியல் சார் ஒழுக்க பண்பாடும் இன்று காற்றாடி போல் காற்றிலே பறக்கவிடப்பட்டுள்ளது என்ற பயம் அனைவர் மனதிலும் ஏற்பட்டள்ளது.

சிறிசு முதல் பெரிசு வரை போதைக்கு பழக்கப்பட்டுவரும் நிலையானது சமூகம் தொடர்பான எதிர்கால அச்சத்தை விளைவிப்பதாக அமைகிறது. பொழுது போக்கு மையங்களை விடுமுறை நாள்களில் கண்கொண்டு காணமுடியாதுள்ளது. குடி போதையில் மயங்கி தாம் செய்வது என்னவென்று தெரியாது நடந்து கொள்கின்றனர். எந்த தங்கு தடையும் இன்றி போதைப் பொருள் விநியோகம் செய்யும் முகவர்கள் மிகவும் சுதந்திரமாக செயற்படுகிறார்கள். இராணுவ சோதனைச் சாவடிகள் இன்றும் இயங்கி வரும் நிலையில் எப்படி இவை நகர்த்தப்படுகின்றன, கடத்தப்படுகின்றன என்ற கேள்வி எழுப்பனால் இதற்கான விடை தெளிவாக கிடைக்கும்.

மது, மாது இரண்டும் இன்று சமூக குற்றங்களை அதிகரிக்க செய்வது மட்டுமல்லாது சமூகத்தின் அடிக்கட்டுமாணங்களை உடைக்க முற்படுகின்றன. இவை இரண்டும் எதிர்கால சந்ததியினரை படுபாதாள உலகிற்கு இட்டு செல்வது மட்டுமல்லாது வேறு சில உள் நோக்கங்களுக்காகவும் இவற்றின் கிடைப்பனவு அதிகரித்திருக்கிறது என்று சந்தேகிப்பதில் தவறும் இல்லை.

பாலியல் தொடர்பான பல நோய்களை திட்டமிட்டு பரப்பக்கூடிய அபாய நிலையுள்ளது. எயிட்ஸ் போன்ற பாரதூரமான நோய்கள் சமூகத்தை முழுமையாக விழுங்கி விடும். இவை உடனே அடையாளம் காண முடியாத நிலையில் பாதிப்பை அதிகப்படுத்துகிறது. தடையின்றி கிடைக்கப்பெறும் போதைப்பொருள் இவ்வளவு இலகுவாக கிடைக்கிறது என்றால் அதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்கிறது என்பதை அதை வாங்குபவர்கள் உணர வேண்டும். நீண்ட காலத்தில் மனிதனை பாதிக்ககூடிய இரசாயன பொருள்களை போதை பொருள்களில் மிகவும் இலாபகரமாக கலக்கலாம். அப்படி கலந்து விற்றால் எமது எதிர்கால நிலை என்ன? எம் இனத்தை விழுங்கும் சில விசமிகள் கூட இப்படியாக திட்டமிட்டு செய்வார்கள். எனவே எஞ்சியிருக்கும் இனத்தையும் நோய் கொண்ட சமூகமாக மாற்றுவதற்கு இன வழிப்பளர்கள் இலகுவான வழியாக இவற்றை கையாளலாம்.



பெரியோரை கனம் பண்ணுதல், கீழ்படிதல் என்ற உயர்ந்த பழக்கவழக்கங்கள் சமூகத்தில் குறைந்து செல்கிறது. கோயில் திருவிழாக்களிலும், பொது நிகழ்வுகளிலும் நடந்தேறும் சில சம்பவங்கள் சமூகத்தின் உயிர் நாடியை உலுக்குவதாக இருக்கிறது. விடுதலைப்புலிகளின் நிழல் அரசுக்காலத்தில் தமிழையும் தமிழர் கலாசாரத்தையும் பொறுத்தவரையில் உன்னத நிலை காணப்பட்டது. இப்படியான நிகழ்வுகளை அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் எங்குமே காணமுடியாது இருந்ததோடு கட்டுபாடற்ற பகுதிகளில் கூட இன்றுள்ள நிலை போல் அன்று இருக்கவில்லை. யாழ் பேருந்து தரிப்பிடத்தில் குடி போதையில் தனது உடலில் இருந்து ஆடை அவிழ்ந்து விழுவது கூட தெரியாது அலைந்து திரிகிறது சமுகத்தின் தனியன் ஒன்று. எம் தேசம் அழிக்கப்படுவதற்கு முன் எப்போதாவது எமது கண்கள் இப்படி கண்டிருக்கிறதா?

உலகில் எந்த பண்பாடும் தன்னை புரிந்துகொள் என்று கெஞ்சுகிறதே தவிர தன்னை ஏற்றுகொள் என கட்டாயப்படுத்துவது இல்லை. இதற்கு மாறாக சிங்கள பௌத்தம் இன்று திணிக்கப்படுகிறது. ஒரு பண்பாடு திடீரென ஒரு பண்பாட்டை எதிர்கொள்ளும் போது அதிர்ச்சியில் உறைகிறது. இதை பண்பாட்டு அதிர்ச்சி என்பர். ஆனால் சில காலங்களுக்குள் மீண்டும் அதிர்ச்சியில் இருந்து மீண்டு விடும். மீளுகையானது மூன்று விதமாக அமையும். ஒன்று எதிர்கொண்ட பண்பாட்டை முழுமையாக ஏற்றல், இரண்டு தனக்கு உகந்த, தன்னோடு ஒத்து போகக்கூடிய நல்ல விடயங்களை ஏற்றுகொள்ளல், மூன்றாவது அதிர்ச்சியில் தெளிவடைந்து தனது தனித்துவத்தை விடாது தன் பண்பாட்டை தொடருதல். உலகில் ஒவொரு பண்பாடும் ஏதோ ஒரு விதத்தில் பண்பாட்டு அதிர்ச்சிக்குள்ளாகி பின் மேற்கூறிய மூன்றில் ஒன்றினூடாக மீளுகின்றன.

மூடிய சமூகமாக இருந்த எமக்கு திறந்த கலாசாரத்தை எதிர்கொள்ளும்போது ஏற்படுகிற அதிர்ச்சி வழமையானதே. ஆனால் அதிர்ச்சிக் காலம் முடிந்து மீளும் காலம் தொடங்கியிருக்க வேண்டும். இப்போது நாம் சரியாக நடந்து கொள்ளவேண்டும். எமக்கு தேவையில்லாதவற்றை புறம்தள்ளி எமது தனித்துவத்தை நிலை நாட்டக்கூடிய ஒன்றையே தெரிவு செய்ய வேண்டும். அது எமது கலாசாரத்தில் நாம் வைத்திருக்கும் பற்று, மரியாதை, கௌரவம் என்பவற்றில் தங்கியுள்ளது. அதற்காக கடுமையாக உழைக்க வேண்டியும் இருக்கிறது. இப்போது எதனை தெரிவு செய்ய போகிறோம்?

எவ்வளவு காலம்தான் அவர்களால் இப்படி நடக்கிறது என்று சொல்லிக்கொண்டு இருப்பது. அப்படி நடக்கிறது என்றால் ஒவ்வொருவரும் அவரது சக்திக்கு உட்பட்டு கலாசாரத்தை பேண என்ன பிரயத்தனத்தை எடுத்தோம் என்றால் அது புச்சியம். அதுதான் எமது சாபக்கேடு. மூத்தோர், புத்திஜீவிகள் என்று தம்மை சொல்லிக் கொள்வோர், சமூக நிறுவனங்கள், ஆலய அமைப்புக்கள் இனியாவது ஒன்றிணைந்து செயற்பட முற்படவேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், எங்கு போகிறார்கள் என்பது தொடர்பாக மிகுந்த சிரத்தையுடன் செயற்பட வேண்டும். இளவயது கர்ப்பம், கருக்கலைப்பு, ஆகியவற்றோடு எயிட்ஸ் நோயால் அதிகம் யாழில் பாதிக்கப்படிருப்பவர்கள் மாணவிகளே என்று புள்ளிவிவரம் கூறுகிறது. பெற்றோர்களே உங்கள் வளர்ப்பில் ஏதோ பழை இருக்கிறது திருத்திக் கொள்ளுங்கள். அதாவது ''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவது கெட்டவராவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்ற பாடலடியை அனைத்துப் பெற்றோரும் மனதில் நிறுத்த வேண்டும்.

நாடற்றோர் ஆக்கப்பட்ட இஸ்ரேல் மக்கள் உலகத்தாரிடம் தாம் கற்பதற்கு ஒரு இடமே கேட்டார்கள். அங்கே தமது சந்ததிக்கு தத்துவத்தையும், பண்பாட்டையும், தொழிநுட்பத்தையும் போதித்தார்கள். அப்படி போதிப்பது தெரிந்தால் பச்சையாக வெட்டிக் கொல்லும் ஆட்சி நடைபெற்ற போதும் தமது நிலைத்திருப்புக்காக, தனித்துவத்திற்காக இஸ்ரேல் என்னும் எதிர்கால தேசத்துக்காகவே செய்தார்கள். இஸ்ரேல் வரலாற்றை ஆய்வு செய்தவர்கள் மதகுருமார்களின் இந்த செயற்பாடு இஸ்ரேல் என்னும் நாடு உருவாகி அவர்கள் இன்றும் உலகில் தனித்துவத்தோடு வாழ அடிப்படையாக அமைந்த காரணங்களில் ஒன்றாகிறது என்கின்றனர்.

புலம்பெயர் தேசத்தில் இருந்து புலத்திற்கு வரும்போது தமிழர்களாக வந்து தமிழர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் மொழி

## சில கேள்விகள்

■ த.அஜந்தகுட

**ஒரு சோம்பேறியின் பக்கம்**

இன்று பின்நவீனத்துவ செல்வாக்கால் இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகள் ஆரோக்கியமாகக் கதையாடப்படுகின்றன. பெண் மொழி என்ற விடயம் பற்றி பெண்ணியச் சிந்தனையாளர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். சமுதாயத்தில் ஒருவருக்கும் இன்னொருவருக்குமான ஆள் நிலைப்பட்ட தொடர்பாடல்களை வலுப்படுத்தும் முக்கியமான ஊடகம் மொழிதான். அது என்ன ஆண்மொழி? பெண்மொழி என்ற கேள்வி இயல்பாகவே சிலரிடம் ஏன் பலரிடம் கூட தோன்றக் கூடும்.

பெண்ணியவாதிகள் இன்று நாம் பேசுகின்ற, எழுதுகின்ற மொழியெல்லாம் ஆண்களின் அதிகாரத்துக்குரிய அவர்களுக்குரிய மொழிதான் என்று கூறி அதிலிருந்து விட்டுவிடுதலையாகி தனித்துவமான தமக்கென்ற மொழியை உருவாக்க எத்தனம் கொள்கிறார்கள்.

காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியிலே

*"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்*
*சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்"*

என்று பாடுகிறார்.

இதை அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் காரைக்கால் அம்மையார் புராணத்தில்

*"பணியணிவார் கழற் கடிமை பழகிவரும் பாங்கு பெறத்*
*தணிவில் பெரு மனக் காதல் ததும்ப வருமொழி பயின்றார்"*

என்று பாடியுள்ளார்.

இதிலிருந்து சமூகமயமாக்கல் மூலம் இது வரை ஆணும் பெண்ணும் கற்றுக் கொள்ளும், பெற்றுக் கொள்ளும் மொழி ஒன்று தான். ஆனால் அது ஆணின் அதிகாரத்துக்குரிய அடிமையாய் அவனுடன் பழகுதற்குரிய மொழியாகவே இருந்திருக்கிறது. சிவபெருமான் என்பதை நீக்கிவிட்டு ஆண் என்ற சொல் இதில் சேர்த்தால் நான் இதில் சொல்ல வந்திருக்கும் விடயம் புலனாகும்.

எனவே சிந்திக்கின்ற , செயற்படுகின்ற பெண்கள் தமக்கான மொழியை கண்டடைகின்ற பயணத்தில் ஈடுபடுகின்றார்கள். பெண் மொழி பற்றி மாலதி மைத்ரி,

"இந்த ஆணாதிக்க சமூகத்தால் உருவாக்கப்பட்ட பெண்ணுக்கெதிரான கருத்துருவங்களையும், மதிப்பீடுகளையும் குலைப்பதும், சிதைப்பதும்தான் பெண் மொழி. தனக்கான அழகியலையும், அறிவியலையும் மறு மதிப்பீடுகளையும் உருவாக்குவது தான் பெண் மொழி" என்று குறிப்பிடுகின்றார்.

இதே போல ஆழியாள்;

***"தன்னிச்சையாய் சுற்றிவரும் தாள லயத்துடன் அங்கு எனக்கென ஒரு பிரபஞ்சம் உருவாகும். அப்போது உயிர் பெறும் எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய என்மொழி அதன் பின் தேமல் படர்ந்த எவனாயினும் என்னோடு உரையாடட்டும் அப்போது கூறுகிறேன் என்பதில்லை! என் மொழியில் என் ஆதித் தாயின் மொழியில்"*** என்று ஆண்களின் அதிகாரத்துக்கு எதிரான சாட்டையாக பெண் மொழியை உருவாக்குவேன் என்கின்றார். அதுவும் ஆதித் தாயின் பெண் மொழியூடாக மீள் உயிர்க்கச் செய்வேன் என்கின்றார். அப்படியென்றால் தாய்வழிச் சமுதாய அமைப்பில் பெண்மொழிக்கான சாத்தியப்பாடுகள் இருந்திருக்கின்றன என வாதிடுகிறாரா?

இப்போதுதான் என் மனதில் ஒரு கேள்வி ஆரம்பிக்கிறது. ஆண்களின் மொழியைப் பயின்று அடிமை பழகிவரும் பாங்கு பெண்களுக்குக் கைவந்தது என்றால் பெண்களின் மொழியை அவர்களின் கனவு மொழியை ஆண்களால் உருவாக்க முடியுமா?

ஏனென்றால் பெண் மொழி பற்றிய பிரக்ஞையுடைய பெண் சிந்தனையாளர்களே மயங்கக்கூடிய பெண்மொழி போன்ற 'மாரீச எழுத்துக்களை' ஆண்கள் உருவாக்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

'பெயல் மணக்கும் பொழுது' என்ற பெண்களின் கவிதைத் தொகுதியைத் தொகுத்த மங்கையவர்கள் மாலிகா என்ற பெயரில் கவிதை எழுதியவர் புதுவை இரத்தினதுரை தான் என்று அறிந்ததும் அதில் சேர்க்க முடியாததை எண்ணி கவலை கொண்டதாக கூறுகிறார்.

பெண் கவிஞர் ஒருவரின் அற்புதமான படைப்புகளாக தொகுத்தவர்களுக்கு அது தோன்றியிருக்கின்றது. ஹரிகரசர்மா பெண் பெயரில் எழுதிய கவிதைகள் அதில் இடம் பெற்றுள்ளமை அவர்களை மீறிய ஒன்றாக அமைந்து விட்டது.

பின்நவீனத்துவ படைப்பாளி என்று கூறிக்கொள்ளும் ஓர் ஈழத்து எழுத்தாளர் போட்டிகளுக்கு பெண்ணியத்தனமான கதைகளை தனது மனைவி யின் பெயரில் ஒளிந்திருந்து எழுதி அனுப்பி பரிசு பெற்ற சம்பவங்களும் நிகழ்ந்ததுண்டு. தாமரைச் செல்வி போன்ற பெண் படைப்பாளிகள் அவரையும் ஒரு பெண் எழுத்தாளராக கவனப்படுத்தி எழுதியும் உள்ளார்கள். பரிசுக்கும், தேவைக்கும் தக்கவாறு பெண்மொழி பழகும் ஆண் படைப்பாளிகளும் பெருகுகிறார்கள். அதே நேரத்தில் அவர்களை பெண் எழுத்தாளர் என்று பெண் படைப்பாளிகளும் மயங்குகின்றார்கள். இலக்கிய வரலாற்றை எழுதும் ஆசிரியர்களுக்கு இவை எல்லாம் பெரும் இடர்களாக இருக்கப் போகின்றன.

'பெண் மொழி' 'பெண் மொழி' என்று கோசமிடுபவர்களைப் பார்த்து நான் கேட்பது என்னவென்றால் பெண் மொழியை ஆண்கள் உருவாக்க முடியுமா?

பெண்மொழியை பிரித்தறிய முடியுமா? கோட்பாட்டுக்கும் செயற்பாட்டுக்கும் இடையில் நிரப்ப முடியாத இடைவெளிகள் இருந்து கொண்டுதான் இருக்கப் போகின்றனவா?

பெண்ணின் பிரச்சினையை ஆணும் உணர்ந்து பெண்ணின் மொழியில் வெளிப்படுத்த முடியாதா?

பெரியாழ்வார் தன்னைத் தாயாகவும் கண்ணனை குழந்தையாகவும் பாவனை செய்து வாத்சய பாவத்தில் நின்று பாடினார். வெற்றியும் பெற்றார். ஆளுமையுள்ள ஆண் படைப்பாளியாலும் பெண் என்று நம்ப வை க்கும் படைப்புக்களை படைக்கலாம் போலத்தானே தெரிகிறது.

பிறகேன் பெண்மொழியாம் பெண்மொழி?

உதயனின் "சூரியகாந்தியில்" உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.
உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;
சூரியகாந்தி - உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்... பணம்... பணம்...

## எப்படி மீதப்படுத்தலாம்



"அடிக்கடி உணவகங்களில் சாப்பிடுவது இப்போது பலருக்கு பழக்கம் ஆகிவிட்டது. வெளியில் சாப்பிட்டால் ஒரு நபருக்கு குறைந்தது 100 ரூபாய்க்கு குறைவில்லாமல் செலவு ஆகும். அதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அந்தப்பணத்தை விட்டில் உள்ள அனைவரும் சாப்பிடும் வகையில் செலவு செய்யலாம்.

இன்று பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றன. அவர்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செலுத்துவதே பெரும் பாடாகி இருக்கும் இந்த நிலையில் விண்ணைத் தாண்டி மேலே சென்று கொண்டிருக்கும் விலைவாசி, அதிர்ச்சியில் ஆழ்த்தும் மின்சாரக் கட்டணங்கள்... கல்விக் கட்டணங்கள் இவற்றை தங்கள் வருமானத்தைக் கொண்டு பெரும் பாலானவர்களால் எளிதில் சமாளிக்க முடிவதில்லை. ஆயினும் எம்மால் முடிந்த சில கட்டுப்பாடுகளை வகித்துக் கொண்டால் கொஞ்சமாவது மிச்சம் பிடிக்கலாம் அல்லவா.....இதோ உங்களுக்கான சில வழிமுறைகள்.

### மொத்த விற்பனைக் கடையை நாடுங்கள்!

பெரிய பெரிய விற்பனை நிலையங்களில் பொருட்களை வாங்காமல், கடைவீதியில் மொத்தமாக பொருட்கள் விற்கும் கடைகளில் மாதத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கினால்... 10 சதவிகிதத்துக்கும் அதிகமாகப் பணம் மிச்சமாகும்.

### பெட்ரோல் சிக்கனம்!

நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருந்தால் இன்ஜினை அணைத்து விடுங்கள். வாகனங்களை ஒழுங்காகப் பராமரித்தால் வாகன எரிபொருள் செலவு மட்டுப்படும். கிளட்ச், பிரேக் போன்றவற்றை தேவை இல்லாமல் அழுத்திக் கொண்டிருந்தாலும் மளமள என்று எரிபொருள் குறைய ஆரம்பிக்கும். வெளி வேலைகளைக் குறித்து வைத்துக் கொண்டு, ஒரு முறை வாகனத்தை எடுக்கும்போதே அனைத்து வேலைகளையும் முடிக்கப் பாருங்கள். ஒரே திசையில் ஒரே நேரத்தில் பயணம் செய்யும் நண்பர்கள் இருந்தால், பயணத்தையும், எரிபொருள் செலவையும் பகிர்ந்துகொள்ளுங்கள். நிழலில் வாகனத்தை நிறுத்தினால்... பெட்ரோல் ஆவியாவது பெருமளவு தவிர்க்கப்படும்.

### மின்சாதனங்களின் ஆழியை அணைக்க மறக்காதீர்கள்!

ஆளில்லாத அறைகளில் ஓடிக்கொண்டிருக்கும் மின்விசிறி, விளக்குகள், தொலைக்காட்சிப் பெட்டி, கணிப்பொறி போன்றவற்றை அணையுங்கள். வீட்டை விட்டு வெளியே செல்லும்போது மின்சாதனங்களின் ஆழிகள்அணைக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.

### தவறான பழக்கத்துக்கு 'தடை' போடுங்கள்!

உங்களது குடும்ப உறுப்பினர் யாருக்கேனும் புகை மற்றும் குடிப்பழக்கம் இருப்பின் அதை கைவிட உங்களால் ஆனதைச் செய்யுங்கள். உடல் நலன் பாதிக்கப்படுவது தடுக்கப்படுவதோடு... இந்த பழக்கங்களுக்கு செய்யப்படும் மிக அதிகமான செலவையும் கட்டுப்படுத்தி, அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படுத்தலாம்.

### தண்ணீரை மிச்சப்படுத்துங்கள்

வேலைகளைச் செய்யும்போது குழாய்களை திறந்து வைத்துக் கொண்டு செய்யாமல், சில நொடிகளே என்றாலும்... தேவை இல்லாதபோது, குழாய்களைச் சரியாக மூடினாலே பெருமளவு தண்ணீரைச் சேமிக்கலாம். மிகச் சரியான முறையில் திட்டமிட்டுக் குளித்தால் அரை வாளி முதல் ஒரு வாளிவரை தண்ணீரே சுத்தமாகக் குளிப்பதற்குப் போதும். இதுபோல நாம் யோசித்து செயல்பட்டால், சமையலறை பயன்பாடு உட்பட பல வழிகளிலும் தண்ணீரை மிச்சப்படுத்தலாம்.

### வேண்டாமே!

குண்டு பல்புகள் அதிகம் மின்சாரத்தை உறிஞ்சும். எனவே, குறைந்த மின்சாரத்தை எடுத்துக்கொள்ளும் யூ வகை பல்புகளுக்கு மாறுங்கள். இதன் மூலம் மின்சாரம் 77 வீதம் சேமிக்கப்படுகிறது. இந்த பல்புகளின் ஆயுட்காலமும் அதிகம்.

### உணவகங்களில் சாப்பிடுவதை தவிருங்கள்

அடிக்கடி உணவகங்களில் சாப்பிடுவது இப்போது பலருக்கு பழக்கம் ஆகிவிட்டது. வெளியில் சாப்பிட்டால் ஒரு நபருக்கு குறைந்தது 100 ரூபாய்க்கு குறைவில்லாமல் செலவு ஆகும். அதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.அந்தப்பணத்தை விட்டில் உள்ள அனைவரும்சாப்பிடும் வகையில் செலவு செய்யலாம்.

### நேரத்தை பணமாக்குங்கள்!

வெட்டி அரட்டை, அதிகப்படியான தூக்கம் போன்றவற்றில் விரயமாகும் நேரத்தை சேமித்து, உருப்படியான வழியில் செலவிடுங்கள். படைப்பாற்றல், புதிய தொழில் கற்றுக்கொள்ளுதல், ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்ளுதல் இவற்றின் மூலம் உங்கள் வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

# அன்புச் சகோதரிக்கு



பண்பாட்டுக்குப் பேர் போன யாழ். மண்ணிலே சீரழிவுகள் சீராக இடம் பிடிக்கும் புது உலகில் உனக்கு உடன் பிறவாச் சகோதரியாய் நான் இருந்து கூறுவது.

அன்றொருநாள் 751 இலக்க பஸ் வண்டியில் வழமைபோல் பிரயாணிக்கும் போது நகர்வு பஸ் தரிப்பிடத்திலிருந்தே தொடங்கியது. உன் காதலின் பயணத்தின் ஒரு பகுதி. உன் தோளில் சாய, ஒரு வயதைக் கடந்து விட்டாள் தம்பிக்குக் கூட அனுமதி கிடையாது.

அவ்வாறிருக்கும்போது உன் வருங்காலத் தலைவன் என்று நீ நினைத்திருக்கும் உன் காதலன் உன்னுடன் அங்கிருந்து இரகசியங்கள் காதோடு பேசுவதும், உன் மடிமீதிருந்த புத்தகத்துக்கு முட்டுக் கொடுப்பதும் என் பார்வைக்கு வேடிக்கையாக இருந்தது. பலருக்கும் கேளிக்கையாயிருந்தது. உன்னோடு உண்மையான காதல் கொண்டவன் அவனாக இருந்தால் இதேபோன்ற அன்பு தொடர்ந்து வர என் வாழ்த்துக்கள். ஆனால் காதல் செய்யும் போது உன்னைத் தொட்டுரசும் அந்தப் பழக்கம் யாராலும் ஏற்க முடியாத ஒன்றாகும். எனவே நீ உன் காதலுக்கு உறுதியான வகையில் பெற்றோருக்கும் மற்றோருக்கும் உண்மையானவளாயும் ஒழுக்கமானவளாயும் இருப்பதை மறந்து விடாதே! "ஒருவனுக்கு [illegible] இடம் கொடுத்த உன் உள்ளம் நாளை இன்னொருவனுக்கு தரத் தலைவிதி தீர்மானிக்காமல் பார்த்துக்கொள்.

நமது மண்ணில், காதல் கதை பேசும் உள்ளங்கள் வெளிப்படையாக இருப்பது [illegible]லும் நான் புரிந்து கொண்டேன். காதலன் என்பதை விட கணவன் என்பவனுக்கே உன்னில் உரிமை அதிகம் உண்டு என்ற உண்மையை நான் உன்னிடம் சொல்ல விளைகிறேன்.

எம்.மனு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கூத்தும் கும்மாளமும் நிரம்பி வழிந்த அந்தக் காட்டில் இரண்டு நாள்களாகக் குரங்குகள் வருத்தத்தோடு இருந்தன. அந்தக் குரங்குக் கூட்டத்தில் படுசுட்டியாகத் திரிந்த மணி, இப்போது இல்லை. பாவம் மணிக் குரங்கு. இப்போது சங்கிலியால் கட்டப்பட்டு, வீட்டுக்கு வீடு சென்று கரணம் அடித்துக் கொண்டு இருக்கும்.

அந்தக் காட்டுக்கு அடிக்கடி சில மனிதர்கள் வருவார்கள். வாய் குறுகிய செம்புகளில் கடலைப் பருப்புகளைப் போட்டுத் தரையில்வைத்துவிட்டு, மறைந்து கொள்வார்கள்.

பசியோடு இருக்கும் குரங்குகள் ஓடிவந்து செம்புக்குள் கையைவிட்டு, கடலைப் பருப்புகளைக் கைநிறைய அள்ளும். அந்த நேரத்தில் மனிதர்கள் தடியோடு ஓடிவருவார்கள். எடுத்த கடலைகளைச் செம்புக்குள் போட மனம் இல்லாத குரங்குகள், கையில் இருக்கும் கடலையோடு கையை வெளியே எடுக்கப் பார்க்கும். வாய் குறுகிய செம்பில் இருந்து கை வெளியே வராது. ஓடவும் முடியாமல் மரத்தில் ஏறவும் முடியாமல் அந்தக் குரங்குகள் மனிதர்களின் கையில் அகப்பட்டுவிடும்.

இப்படி மனிதர்கள் அவ்வப்போது தங்கள் இனத்தவரைப் பிடித்துப் போவதைப் பார்த்து மற்ற குரங்குகள் தவித்தன. எல்லோருக்கும் செல்லப் பிள்ளையான மணியை, மனிதர்கள் பிடித்துக்கொண்டு போனதில் இருந்து, 'இந்தக் கொடுமை தீர ஏதேனும் வழி கண்டுபிடித்தே ஆக வேண்டும்' என்று குரங்குகள் உறுதி எடுத்தன. இரவில் அதற்கான ஆலோசனைக் கூட்டமும் நடைபெறப்போவதாக அறிவிக்கப்பட்டது.

அன்று இரவு, குரங்குகளின் தலைவர் மூக்கன் நடுநாயகமாக ஒரு கல்லின் மீது அமர்ந்து இருந்தது. ஒவ்வொரு குரங்கும் தங்கள் இனம் மனிதர்களிடம் பிடிபட்டு அடிமையாக மாறுவதைச் சொல்லி வருத்தம் தெரிவித்தன.

''இப்படியே போனால், மனிதர்கள் நம் இனத்தையே அழித்துவிடுவார்கள்'' என்று ஒரு குரங்கு சொன்னது. ''நம் பலவீனத்தைப் பயன்படுத்தி நம்மைப் பிடித்து அடிமையாக்குகிறார்கள்'' - இது இன்னொரு குரங்கின் ஆதங்கம்.

''மனிதர்களுக்கு நாம் என்ன தீங்கு செய்தோம்? ஏன் இப்படிச் செய்கிறார்கள்?'' என வருத்தத்தோடு கேட்டது ஒரு குட்டிக் குரங்கு.

''ஆளாளுக்கு இப்படிப் பேசிக்கொண்டு இருந்தால் இதற்கு என்னதான் தீர்வு? அதைப்பற்றி யோசிப்போம்!'' அந்தக் கூட்டத்தின் துணைத் தலைவர் சற்று உரத்த குரலில் சொன்னது.

''மனிதர்கள் செம்பில் கடலைகளைப் போட்டு வைக்கிறார்கள். நாம் ஆர்வத்தோடு கடலைகளைக் கையில் எடுக்கிறோம். பிறகு அவர்கள் ஓடி வரும்போது கடலைகளைப் போட்டுவிட நமக்கு மனம் வருவதில்லை. இனி நாம் கடலையே உண்ணக் கூடாது என்று வைராக்கியம் எடுத்துக் கொள்வோம்'' என்றது ஒரு பெண் குரங்கு.

''ஐயோ... என்னால் அப்படி வைராக்கியம் எடுத்துக்கொள்ள முடியாது'' எனப் பதறியது ஒரு தடிக் குரங்கு. ''நீ ஒரு தின்னிமாடன். இப்படித்தான் சொல்வாய். உனக்கு கடலைதான் வேண்டும் என்றால், மனிதர்களிடம் அகப்பட்டு அடிமையாகக் கிட'' எனக் கோபத்துடன் சொன்னது பெண் குரங்கு.

இப்படி ஒவ்வொரு குரங்கும் பேச, சற்று நேரத்தில் அங்கே ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. ''எல்லோரும் கொஞ்சம் வாயை மூடுகிறீர்களா?'' என்று அதட்டியது தலைவன் குரங்கு.

அவ்வளவுதான்... எல்லாக் குரங்குகளும் வாயை மூடிக்கொண்டன. சற்று நேரம் அமைதியாகக் கழிந்தது. ''நம் குரங்கு இனத்துக்குக் கடலை என்றால் மிகவும் பிடிக்கும். அப்படி இருக்க, நாம் ஏன் கடலையைத் தியாகம் செய்ய வேண்டும். மனிதர்களின் சூழ்ச்சியை நாமும் சூழ்ச்சியால் ஜெயிக்க வேண்டும்'' என்றது.

பிறகு திடீரென்று 'ஐடியா வந்துவிட்டது!' என்று விரலைச் சொடுக்கியது.

சில நாள்கள் கழிந்தன. அன்று வழக்கம்போல் அந்தக் காட்டுக்குள் மனிதர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் குரங்குகள் ஒன்றையொன்று பார்த்துக் கண்ணடித்துக்கொண்டன.

மனிதர்கள் பல செம்புகளில் கடலையைப் போட்டு, குரங்குகளின் பார்வையில் படும்படி வைத்துவிட்டு, புதர்களின் பின்னால் மறைந்து கொண்டார்கள். இதுதான் சமயம் என்று குரங்குகள் மரத்தில் இருந்து கீழே குதித்து, செம்புகளை நோக்கி ஓடிவந்தன. கண்சிமிட்டும் நேரத்தில், ஒவ்வொரு குரங்கும் ஒவ்வொரு செம்பைத் தூக்கிக்கொண்டு ஒரே ஓட்டமாகக் காட்டுக்குள் ஓடி மறைந்தன.

குரங்குகளின் செய்கையைக் கண்ட மனிதர்கள் திகைத்தார்கள். 'நம் சூழ்ச்சியை இந்தக் குரங்குகள் புரிந்துகொண்டன. குரங்குகளைப் பிடிக்கவந்து கடலையும் போச்சு, செம்பும் போச்சே' என்று புலம்பியபடியே கிளம்பினார்கள்.

அன்று இரவு நடந்த குரங்குகளின் கூட்டத்தில்...



''பார்த்தீர்களா? எப்போதும் சூழ்ச்சியை சூழ்ச்சியால்தான் வெல்ல வேண்டும். பல 100 ஆண்டுகளாக மனிதர்கள் நம்மைப் பிடிக்க இந்த வழியைத்தான் பின் பற்றினார்கள். இனி அவர்கள் வேறு திட்டம் யோசிக்கப் பல காலம் ஆகும். அது வரை நாம் சந்தோஷமாக இருக்கலாம். எல்லோரும் போய் ஆடிப்பாடி இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள்'' என்றது தலைவன் குரங்கு.

பல நாள்களுக்குப் பிறகு, அங்கே ஆட்டமும் பாட்டமும் அரங்கேறத் தொடங்கியது. ஒவ்வொரு குரங்கின் கையிலும் கடலை ஜொலித்தது!

# கல்வி

சுட்டுரை போல் ஒரு கல்வி
காவியக் கல்வி
சுட்டுரை போல் ஒரு கல்வி
சுந்தரக் கல்வி
வெட்டுரை போல் ஒரு கல்வி
வியத்தகு கல்வி
சித்திரை போல் ஒரு கல்வி
சிறப்புரை கல்வி
மாத்திரை போல் ஒரு கல்வி
மறைக் கல்வி
கார்த்திகை போல் ஒரு கல்வி
கனிந்த கல்வி
எத்தரை போனாலும் கல்வி
இன்னியும் குறையாது காண்பீரே
செத்தாலும் எழுகின்ற சிறப்பு
செகத்திலே கல்விக்கு இருக்கு
மத்தால் கடைகின்ற பால்
மாறி வருமே வெண்ணெய்
வித்தால் விளையும் கல்வி
வேரொடு மிளிர்ந்து துளிர்க்கும்
சிற்பியில் கற்றிடும் கல்வி
நிறைவே அளிக்கும் பெறுவீர்
சத்தியம் போல் ஒரு வாழ்வை
சாதனையாக்கும் உய்வீர்
பெற்றவர், குரு வேண்டுபவர்
எல்லோரும் பேணுபவர்
கற்றவர் என்றாலே மதித்தல்
இல்லையேல்
குற்றத்தார் போல் குறுகி
நிற்கவே செய்வார்

இ.சாருண்யா, தரம்-10,
கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

## விடை தெரியுமா? 208

### உங்களுக்கும் பரிசுகள்

1. ஞாபக சக்தி அதிகம் உள்ள விலங்கு எது?
2. பெண் கல்விக்காக குரல் கொடுத்து அண்மையில் தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்டு தப்பியுள்ள பாகிஸ்தான் மாணவியின் பெயர் என்ன?
3. முதன் முதலில் துப்பறிய நாயைப் பயன்படுத்திய நாடு எது?
4. காச நோய்க்கு உகந்த மருந்து எது?
5. அமேசன் நதி எங்கே உள்ளது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 04.05.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 206

1. தாய், தந்தை
2. தீக்கோழி
3. அடம்ஸ்மித்
4. புளோரன்ஸ் நைற்றிங்கேள்
5. கழிமுகம்

### வெற்றி பெற்றோர் விவரம் (206)

* ப.சிவரூபி, தரம்-8பி, யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
* சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/ வேம்படி மகளிர் உயர்தர பா.
* ஆ.பாலமதுஜா, புலோலி மேற்கு, பருத்தித்துறை
* இ.இலக்கியா, கிளி/ பரந்தன் இந்து.ம.வி.
* சி.கேசாயினி, தரம் -5, யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தி.




ஸ்ரீ.திவ்யநேசன், தரம்-6டி, யாழ்.இந்துக் கல்லூரி



க.தனஞ்சயன், தரம்-6E, யா/சென்ஜோன்ஸ் கல்லூரி




சஜன்லி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி




தி.ரிஷிகன், எவர் மைசன் முன்பள்ளி



சு.சுலக்சன், தரம்-8டி யா/ இந்துக் கல்லூரி



இ.பிருந்தா, யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



எஸ்.அனிருத்தன், தரம்-2 யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

28.04.2013 முதல் 04.05.2013 வரை

தருபவர் - வித்தியா



**மேடம்**- உங்கள் மனதில், புதிய சிந்தனை உருவாகும் செயல்திறனை வளர்த்துக் கொள்வீர்கள். இனிய பேச்சு உறவினர், நண்பர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதையை பெற்றுத் தரும். புத்திரரின் சோம்பல் குணம் மாற தேவையான ஊக்கமும், உதவியும் வழங்குவீர்கள். எதிரியிடம் விலகுவதால் சிரமத்தைத் தவிர்க்கலாம். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். பணியாளர்கள், பொறுப்பாகச் செயற்பட்டு, சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் கல்வியில் சிறந்த முயற்சிகளை எடுக்க வேண்டும்.



**இடபம்**- புதிய முயற்சிகளை, தகுந்த திட்டத்துடன் நிறைவேற்றுவீர்கள். நற்குணம் உள்ள முக்கியஸ்தரின் அறிமுகம், உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் அதிருப்தி பேச்சை கவனத்தில் கொள்வீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி, உபரி பணவரவு உண்டு. பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு திருப்திகர பணவரவு கிடைக்கும். மாணவர்கள் அதிக கவனத்துடன், படிப்பில் முன்னேற்றம் பெற தேவையான விடயங்களை அறிந்து கொள்வர்.



**மிதுனம்**- உங்களின் முயற்சிகளுக்கு, இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நின்று உதவும். நிதானமாகப்பேசி, நற்பெயரைப் பாதுகாப்பீர்கள். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். குடும்பப் பெண்கள், உறவினர்களுக்கு மனமுவந்து தேவையான உதவி வழங்குவர். மாணவர்கள், சந்தோஷ எண்ணங்களுடன் படிப்பில் கவனம் கொள்வர்.



**கடகம்**- எண்ணத்திலும், செயலிலும், முன் இருந்த மாறுபட்ட தன்மைகளை புரிந்து கொள்வீர்கள். பல நாள் நினைத்த திட்டங்களை, சாந்தமான அணுகுமுறையால் நிறைவேற்றுவீர்கள். இளைய சகோதரர் வாழ்வில் முன்னேறி, உங்களுக்கும் உதவிகரமாக நடந்துகொள்வார். இல்லறத் துணையின் நம்பிக்கையை கூடுதலாகப் பெற முயற்சிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு கௌரவமான பதவி பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் வெளிவட்டாரப் பழக்கம் குறைப்பதால், படிப்பில் கவனம் வளரும்.



**சிங்கம்**-உங்களின் ஒவ்வொரு செயலும் சிறப்பாக அமைந்து நன்மையும், புகழும் பெற்றுத்தரும். உண்மை, நேர்மை குணம் உள்ளவர்களுக்கு, இயன்ற அளவில் உதவுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி, உபரி பணவரவு உண்டு. பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்வதைத் தவிருங்கள்.



**கன்னி**-இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். உறவினர்களின் நல் அன்பு, பாசம் கிடைத்து மனதில் ஊக்கம் பெறுவீர்கள். காலமுறை உணவுப்பழக்கம், உடல் நலம் பாதுகாக்க உதவும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தன்மைகளை பொறுப்புணர்வுடன் பாதுகாப்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை தவறாமல் பின்பற்றி, நற்பெயர் பெறுவர். மாணவர்கள், ஆசிரியரின் நன்மதிப்பைப் பெறும் விதத்தில் செயற்படுவர்.



**துலாம்**- உங்களின் பொறுப்பான செயல்களை, சிலர் பொறாமைக் குணத்துடன் குறை சொல்வர். பொறுமையுடன் நடந்து கொள்வதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். அறிமுகம் இல்லாதவர்களை, வீட்டில் அனுமதிக்க வேண்டாம். இல்லறத்துணையிடம், பயனற்ற பேச்சுகளை தவிர்ப்பதால், குடும்ப ஒற்றுமை சீராகும். பணியாளர்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், சாகச செயல்களில் ஈடுபடுவதைத் தவிருங்கள்.



**விருச்சிகம்**-தன்னைச் சார்ந்தவர்களின் கருத்துக்களை மதித்துச் செயற்படுவீர்கள். அதிக பணவரவு பெற, புதிய வாய்ப்பு உருவாகும். அயராது பணிபுரிந்து, தேவையான நன்மைகளைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அரசு சார்ந்த உதவி எளிதாகக் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு, அதிகாரிகளின் ஒத்துழைப்பு, திருப்திகரமாக அமைந்து திட்டம் நிறைவேறும். குடும்ப பெண்கள், கணவரின் கருத்துகளை மதித்து நடப்பது, குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்க உதவும். மாணவர்கள், சக மாணவர்களின் உதவியால் சில நன்மை பெறுவர்.



**தனுசு** - உங்களின் நற்செயல், நற்குணம் பார்த்து புதியவர் நட்புப் பாராட்டுவர். சமூகப்பணியிலும், ஓரளவு ஆர்வம் கொள்வீர்கள். புத்திரரின் எண்ணங்களை அறிந்து, வழி நடத்துவது நல்லது. உடல்நல ஆரோக்கியத்திற்கு ஏற்ப விருந்து, விசேஷத்தில் பங்கேற்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, தேவையான சீர்திருத்தம் செய்வீர்கள். பணியாளர்கள் சலுகைப் பயன்பெற, நிதான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், ஒவ்வாத உணவு வகை உண்ணுவதைத் தவிருங்கள்.



**மகரம்** -மனதில் கருணையும், சத்திய குணமும் பின்பற்றுவீர்கள். உங்களிடம் பொறாமை எண்ணத்துடன் பேசியவரும், நல்அபிப்பிராயம் கொள்வர். உடல்நல ஆரோக்கியத்தில் தகுந்த கவனம் கொள்வதால், பணிகள் குறித்த காலத்தில் நிறைவேற்றலாம். வெளியூர் பயணத்திட்டத்தில், மாறுதல் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தம் செய்து அதிக உற்பத்தி, விற்பனை இலக்கை அடைவீர்கள். உத்தியோகத்தர் நிர்வாக நடைமுறை சிறக்க, ஆலோசனை சொல்வர். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் அதிக கவனம் வேண்டும்



**கும்பம்** - எதிர்வரும் சிரமங்களை, சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். திட்டமிட்ட உழைப்பால் அதிக பணவரவும், கூடுதல் அந்தஸ்தும் பெறுவீர்கள். புத்திரர் மனக்குறைக்கு உட்படாத அளவில், தேவையை நிறைவேற்றுவது குடும்ப ஒற்றுமையைப் பலப்படுத்தும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான அனுகூல காரணி, இஷ்ட தெய்வ அருளால் பலம் பெறும். மாணவர்கள், சிலரது கேலிப்பேச்சுகளை பெரிதுபடுத்தாமல் விலகி, பெருந்தன்மை குணத்தைப் பாதுகாப்பர்.



**மீனம்**- நல்ல கருத்துக்களை கூட இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவதால் மட்டுமே, நற்பெயரை பாதுகாக்க இயலும். அதிக பயன் தராத பொருள்களை சிலரது நிர்ப்பந்தத்தின் பேரில் விலைக்கு வாங்க வேண்டாம். ஒவ்வாத உணவு வகையைத் தவிர்ப்பதால், உடல்நலம் சீராக இருக்கும். இல்லறத்துணை புரிதல் தன்மையுடன் நடந்து, தேவையான உதவி புரிவார். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவைப்படும். மாணவர்கள், எவரிடமும் தேவையற்ற விவாதங்களில் ஈடுபட [illegible]

## அச்சில் முதல் தமிழ் நூல்

தம்பிரான் வணக்கம்




இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் முதன்முதலாக அச்சுப் புத்தகம் வெளியிடப்பட்டது. புனிதசேவியர் என்கிற பாதிரியாரால் போர்த்துகீசிய மொழியில் எழுதப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' எனும் இந்தக் கிறிஸ்தவ நூலை தமிழுக்கு மொழிபெயர்த்தவர் பாதிரியார் அண்டிறிக் என்பவர். 20.10.1578 இல் கொல்லத்தில் இந்த நூல் அச்சாக்கப்பட்டது. 436 ஆண்டுகளாகின்றன தமிழில் முதல் அச்சுப்புத்தகம் வெளியாகி......

[தமிழ்நாடன் எழுதிய 'தமிழ்மொழியின் முதல் அச்சுப் புத்தகம்' நூலிலிருந்து]




எனைச் சுமந்தாய்
பெற்றாய்
உயிர் தந்தாய்
எனை எடுத்தாய்
கட்டி அணைத்தாய்
மடி கொடுத்தாய்
உற்றுப் பார்த்தாய்
முத்தம் கொடுத்தாய்
முகம் மலர்ந்தாய்
பால் தந்தாய்
சிரித்தாய்
மகிழ்ந்தாய்
அழுதாய்
[illegible]ந்தாய்
அடித்தாய்
எனைப் படிப்பித்தாய்
கண்டித்தாய்
கரம் கொடுத்தாய்
தட்டிக் கொடுத்தாய்
எனை அறிந்தாய்
கை கொடுத்தாய்
மதம் தந்தாய்
இனம் தந்தாய்

இனிய மொழி தந்தாய்
ஈகை அளித்தாய்
ஐயம் தீர்த்தாய்
உவகை அளித்தாய்
ஒளி தந்தாய்
சிந்தித்தாய்
ஓயாது உழைத்தாய்
மனம் குளிர்ந்தாய்
எனைக் காதலித்தாய்
கற்பித்தாய்
வரம் தந்தாய்
புகழ் படைத்தாய்
உருக்குலைந்தாய்
தவித்தாய்
தூக்கம் [illegible]
எனை வளர்த்தாய்
மௌனித்தாய்
எனக்காய்
உடல் மெலிந்தாய்
மொத்த உறவு தந்தாய்
அதனால்தான்
நீ என்தாய்
நீயே என் தாய்

எஸ்.தர்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



85

# ஆளுமை கொண்ட தென்மோடிக் கலைஞர் கலைமாமணி கி.கிறிஸ்தோப்பர்

ஒரு சாதாரண தமிழ்க் குடிமகனாக இருந்த போதும் தனது சொந்தப் பணத்தில் எண்ணற்ற கூத்துக்களை மேடையேற்றிய அண்ணாவி யாராகவும் முப்பதிற்கும் மேற்பட்ட சமய, சமூக வளர்ச்சி மன்றங்களின் தலைவர், செயலாளர் நிலைகளிலும் நிர்வாக உறுப்பினராகவும் விளங்குவதுடன் பல ஆண்டுகளாகக் கலைப் பணியாற்றி வருகின்ற குருநகர்நாட்டுக் கூத்து மன்றத்தில் தலைவராகவும் கூத்து, திரைப்பட நடிகராகவும் பாடகராகவும் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப்பணியாற்றி வருபவர் கலைத்திலகம் கி.கிறிஸ்தோப்பர்.

வயாவிளான் தவமைந்தன்

தமிழ் மக்களின் உயிராய் விளங்குகின்ற மரபு வழிக் கலைகளின் வளர்ச்சி என்பது எதிர்காலத்தில் எப்படி இருக்கப்போகின்றது என்பது சந்தேகத்திற்குரியதே. ஏனெனில் பதவி முத்திரை, சுழல் கதிரை, பெயர்ப்பலகை, அழைப்பு மணி, மேசை விரிப்பு, மலர்ச்செண்டு போன்ற பொருள்களைப் பூசை அறையில் வைத்து, உயர்பதவிக்காகத் தவம் கிடப்போரின் சப்பாத்துக் கால்களுக்குள் நசிபடும் பொருளாகவே ஆற்றுகைக் கலைக் கல்வியானது மாறிவிட்டது. வகை வகையான விடுப்புக்களையும் புலமைப் பரிசில்களையும் பெறுவதன் ஊடாக இவர்களுக்குக் கிடைக்கின்ற பெருந்தொகைப் பணமானது, அவர்களின் வங்கிக் கணக்குகளை நிறைத்து விடுகின்றதே தவிர தமிழர்தாயகமெங்கும் பரந்து விரிந்து சிதறிக் கிடக்கின்ற கிராமியக் கலைகளை வளர்ப்பதற்கோ அதன் உயிர்ப்பைத் தரிசித்துக் காப்பதற்கோ பயன்படுவதில்லை.

ஆனால் ஒரு சாதாரண தமிழ்க் குடிமகனாக இருந்த போதும் தனது சொந்தப் பணத்தில் எண்ணற்ற கூத்துக்களை மேடையேற்றிய அண்ணாவியாரா்கவும் முப்பதிற்கும் மேற்பட்ட சமய, சமூக வளர்ச்சி மன்றங்களின் தலைவர், செயலாளர் நிலைகளிலும் நிர்வாக உறுப்பினராகவும் விளங்குவதுடன் பல ஆண்டுகளாகக் கலைப் பணியாற்றி வருகின்ற குருநகர்நாட்டுக் கூத்து மன்றத்தில் தலைவராகவும் கூத்து, திரைப்பட நடிகராகவும் பாடகராகவும் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கலைப் பணியாற்றி வருபவர் கலைத்திலகம் கி.கிறிஸ்தோப்பர்.

மறைந்த கிறகரி - சிசிலியா தம்பதியரின் மகனாக 08.06.1949இல் குருநகரில் இவர்பிறந்தார். புனித யாகப்பர் ஆண்கள் பாடசாலையில் கற்ற இவர்தனது தந்தையின் இசை பாடும் வல்லமையால் கவரப்பட்டுக் கூத்துக் கலையில் நாட்டம் கொண்டு, பேரனாராகிய இராசையா, மாமன்மாராகிய அகஸ்ரின், சவிரியான் போன்ற அண்ணாவிமார்களின் கூத்துச் செயற்பாடுகளாலும் ஈர்க்கப் பட்டுச் சிறு வயதிலேயே இந்தத் துறையில் பேராவலுடன் ஈடுபட்டு வந்தார்.

குருநகர் நெய்தல் வளர்பிறை மன்றமானது 1966இல் தயாரித்த இதயக் குமுறல் என்னும் சமூக நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்றுச் சிறப்புற நடித்து அனைவராலும் பாராட்டப் பட்ட இவர் 1970இல் இருந்து அம் மன்றத்தின் தலைவராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். அதே ஆண்டில் கு.நெ.வ.மன்றத்தால் தயாரிக்கப்பட்ட கொலை மேடையில் மண மேடை என்னும் கூத்தில் முதல் முதலாக இளவரசனாக நடித்து தென் மோடிக் கூத்தில் தனியானதோர் இடத்தைத் நிலை நிறுத்திக் கொண்டார்.

எண்ணற்ற கூத்துக்களை நெறிப் படுத்தி மேடையேற்றிக் கூத்துத் துறையில் சாதனைகள் படைத்து வந்த இவரது நெறிப்படுத்தலில் 1993இல் குரு.புனித யாகப்பர் ஆலயத்தில் செந்தூது என்னும் கூத்தானது மேடையேற்றப்பட்ட போது அண்ணாவியார் சாமிநாதரால் மதிப்பளிக்கப்பட்டதுடன் ஏராளமான பொதுமக்கள், அருட்தந்தையர்கள் முன்னிலையில் அண்ணாவியாராகவும் அங்கீகரிக்கப்பட்டுக் கூத்துத் துறையில் தரமுயர்த்தப்பட்டார்.

சுருதி, இலயம் பிசகாமல் பாடிய

## சாதனைக் கலைஞரைச்

### சந்திப்போம் சிந்திப்போம்

வாறும் வசனங்களைச் சுவை கெடாமல் பேசியவாறும் சந்தம் குன்றாமல் ஆடியும் சிறப்பாக நடிக்கும் அற்புதத் திறன் கொண்ட இவர் 1980களில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொன் மணி என்னும் திரைப்படத்திலும் படகோட்டியாக நடித்தவர். கம்பீரமான தோற்றமும் கனதியான குரல் வளமும் கொண்ட இவர்அரச பாத்திரங்களில் வேடமேற்று நடிப்பதில் தன்னிகரற்றவராகவும் திகழ்ந்து வருகின்றார்.

1995இல் கிளிநொச் வாழ்ந்த காலத்
தில் அங்கும் இ ரைத் திரட்டிக்
கூத்துக்களை நெ த்தி மேடை
யேற்றியதுடன் ப ல மாணவர்
களுக்கும் இந்தக் யைப் பரப்பி
வருபவர்என்பதும் பிள்ளைகளை
யும் இந்தத் து சிறந்த கலை
ஞர்களாக உருவா ார் என்பதும்
போற்றுதற்குரிய கும்.
தமிழர் வீரத்தைப் ற்றும் மன்ன
னாகிய பண்டார னின் வரலாற்
றைக் கூத்துவடிவி வழி தவறாமல்
நெறிப்படுத்தி ப ற்றிய இவர்
அந்த ஆற்றுகை மை என்னும்
பெயரில் பல லட் செலவையும்
பொருட்படுத்தாம ப்பதிவாகவும்
திரைப்படமாக ரியிட்டிருப்ப
துடன் உதிரத்து ள் என்னும்
தவக்காலச் சிந்த இசை இறு
வட்டினையும் கு ாட்டுக் கூத்து
மன்றத்தின் ஊடா ிட்டுள்ளமை
குறிப்பிடத்தக்கதா
ஒரு சில திரைப் ல்களை மட்
டும் தொழில் மூ க வைத்துக்
கொண்டு தமிழ் வதே எமது
கொள்கை என்றும் து பலவீனங்
களைப் பாதுகாத்து வார் பரீட்சை
மண்டபங்களிலும் அறையிலும்
காலத்தைக் கழிப்பதுடன் விடெரிக்கும் இராசாவிற்குக் கொள்ளிக் கட்டை கொடுக்கும் மந்திரிகள் போல் பதவியில் இருப்போரின் முறைகேடான செயற்பாடுகள் அனைத்திற்கும் தலையாட்டும் பொம்மைகளாகவும் கவின்கலைக் கல்வியைச் சீரழித்து வருகின்றனர். தமிழரின் மரபு வழிக் கலைகள் பற்றி இவர்கள் சிந்திப்பதே இல்லை.

ஆனால் கிராமங்கள சிக்கின்ற அண்
ணாவிமார்களுள் த் திறமையும்
துறைசார்ந்த ஆளுமை கொண்டவராக
வும் தனது சொந்தப் தையே இந்தக்
கலைகளுக்காக அ ங்கும் மனப்
பக்குவம் கொண்ட வும் விளங்கு
கின்ற இந்தக் கலை னது கருத்துக்
களை இவ்வாறு சு
யாழ்.திறந்த வெ ானது ஒலி, ஒளி அமைப்புடன் அந்தக் காலத்தில் இலவசமாக வழங்கப்பட்டதால் நாடக அரங்கேற்றங்களுக்குக் குறைவே இருக்கவில்லை. ஆனால் பார்க்கும் இடமெல்லாம் கலாசார மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள் வானுயர்ந்து வளர்ந்து நிற்கும் இக்காலத்தில் நாடகம், கூத்து என்னும் எமது கலைகள் அற்றுப் போன கலைகளாகவே காணப்படுகின்றன. ஆற்றுகைக் கலை நிகழ்வுகளின் மேடையேற்றங்களுக்கு அந்த மண்டபங்களை இலவசமாகத் தருவதற்கு எவரும் தயாரில்லை.

அதைவிடத் தற்காலத்தில் மேடையேற்றப்படும் தென்மோடிக் கூத்துக்களில் சோகப் பாடல்களுக்கு ஆடுதல், ஆட வேண்டிய பாடலுக்குப் பொருத்தமில்லாத முறையில் ஆடுதல் போன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வதுடன் பாடசாலைப் போட்டிகளிலும் பாடலை விட ஆட்டத்திற்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமையும் தவிர்க்கப்பட வேண்டும் என்று வேதனையுடன் கருத்துரைக்கின்றார் கூத்தரசன் கிறிஸ்தோப்பர். ★

---

## கோடை



இரவு பகல் வில்லங்கமானது
பகலில் பகிரும் பிரயத்தனம்
இரவில் பறிக்கப்படுகிறது
கோடையின் சிலிர்ப்பும் அதன் நிழலும்
உலுப்பி வருகிறது பெருவலியை
திசைமுழுவதும் தாவிப்பாயும் பிரமம்
அதன் நீட்சியும்
காலடியில் இன்னும் கிடக்கிறது
ஒரு கொடிய மிருகத்தை ஒத்தது போல
அதன் அருகாமையும்
அதன் வலியும் நீள்கிறது
என்ன செய்ய உத்தேசம் நான்
தடம் மாறிக் கிடக்கிறேன்
திசை முழுவதும் பல சூரியன் பல சந்திரன்
என் சுவடுகளின் அருகாமையில்
கிடக்கிறது அது ஓர் அற்பமாய்

எதுவும் புரியாத கடுங்கோடை
உலுப்புகிறது தனிமைத் தீ பரவி, வெளிறி
வெப்பமூட்டுகிறது
இனி என்னை செய்வேன்?
கனியும் பிஞ்சும் இதழும்
ஒரு வெப்பத்தின் கோடையா
அல்லது
விருந்தில் பகிரவந்த அழைய விருந்தாளியா
மின்னுகின்ற அதன் கண்களின் பிரகாசம்
வெறித்துத் திரிகிறது என் மீதும்
இனியும் கடும் கோடையில் கறுப்பு வெளியும்
உள்ளங்கையில் நிழலாடும் அதன் வெறுப்பும்
எந்தனடியில் கூக்குரலிட்டபடி எழுகிறது
இந்தக் கோடை தவிப்பா?
அல்லது சூரியனை எரிக்க வந்த கோடையா?
எங்கும் கோடை
கோடையின் கரம் நீள்கிறது
பெரு வலி பரப்பி


சத்தியமலரவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

48



உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

குழந்தை வளர்ப்பு என்பது நம் வாழ்வில் முக்கியமானது ஆகும். ஆனால் அதற்கே முழுநேரத்தையும் செலவழித்துவிடக் கூடாது. உங்கள் வாழ்க்கை இலக்குகளை அடைவதற்கான செயல்களில் ஈடுபடவும் நேரம் ஒதுக்கவும் வேண்டும். குழந்தைகளுக்காக லட்சியத்தைத் தியாகம் செய்யாது பாராட்டுக்குரியதாக இருந்தாலும், உங்கள் குழந்தைகள் அந்த வாய்ப்பைத் தடுத்துவிட்டதாகக் கோபப்படவும் வாய்ப்பிருக்கிறது. சில சமயங்களில் குழந்தைகளை நம்மால் பார்த்துக்கொள்ள இயலாத போது, பிறரை அந்தப் பொறுப்பில் நியமிக்கலாம். வேலைக்குப் போகும் போது குழந்தைகளை ஒரு இடத்தில் பொறுப்பாக விட்டுச் செல்லலாம். குழந்தைகளை அங்கு விடுவதற்கு முன் அங்குள்ள வசதிகள் போன்றவற்றைச் சரிபார்த்துக் கொள்வது நல்லது. அதுபோன்ற இடங்களில் விடும் போது உங்கள் உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்ப்பதுடன், உங்கள் குழந்தைகளிடமும் அது பற்றிக் கருத்துக் கேளுங்கள். மேலும் இதர பெற்றோர்களிடம் குழந்தை வளர்ப்பு பற்றிக் கேட்கலாம்.

**குழந்தைகளுடன் தரமான நேரத்தை செலவிடுவதற்கான 10 வழிகள்**

**ஒன்று கூடுங்கள் :-** குழந்தைகளுடன் தரமான நேரத்தைச் செலவிட வேண்டுமென்பதற்காக வாரத்தில் ஒரு மதிய நேரத்தை ஒதுக்கலாம். அப்போது குழந்தைகளுடன் சேர்ந்து ஏதாவது மகிழ்ச்சி தரும் வேலையைச் செய்யலாம்.

**திட்டத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள் :-** அடுத்து என்னென்ன செய்யத் திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் குழந்தைகளிடம் சொல்லலாம். திட்டமிடுவதற்கு நேரத்தை ஒதுக்குவதுடன் அதை அவர்களுடன் விவாதிக்கவும் செய்யலாம். திட்டம் பற்றிய அவர்களுடைய கருத்து, எதிர்பார்ப்பு என்னவென்பதையும் அறிந்து கொள்ளலாம்.

**விளையாட்டு :-** கடைசியாக உங்கள் குழந்தைகளுடன் எப்போது விளையாடினீர்கள்? குழந்தைகளுடன் அடிக்கடி நேரம் ஒதுக்கி விளையாட வேண்டும். அவர்களுடன் விளையாடும் போதுதான் குழந்தைகள் உலகம் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முடியும்.

**ஒரு கூட்டத்தை அமைத்துக் கொள்ளுதல் :-** மற்றக் குடும்பத்தினருடன் இணைந்து ஒரு மகிழ்வான குழுவை ஏற்படுத்திக் கொண்டால், பல வேடிக்கையான விடயங்களைச் செய்வதுடன், நல்ல விதமாகவும் பொழுதைக் கழிக்கலாம்.

**சீசன் டிக்கெட் :-** பருவ கால ரிக்கெட் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது. இது நீங்கள் விரும்பும் இடத்துக்கு அதாவது மிருகக் காட்சிச் சாலை போன்ற இடங்களுக்கு அடிக்கடி போய் வர ஊக்குவிக்கும். இடமானது கால மாற்றத்தில் எப்படி மாறியுள்ளது என்பதைப் பார்க்கலாம். அப்புறம், ஒரு இடத்துக்கு அடிக்கடி போனால் அதிக விடயங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

**பொழுது போக்கு :-** புகைப்படம் எடுப்பது, குதிரை ஏற்றம், மீன் பிடிப்பது போன்ற பொழுதுபோக்குகளில் மற்றவர்களுடன் ஈடுபடலாம். இதில் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைகள் பெரியவர்களைவிட சில விடயங்களை நன்கு செய்வார்கள்.

**சமைக்கலாமே :-** சமைக்கப் பழகுவது என்பது மிகவும் நல்லது. அதுவும் மற்றவர்களுடன் இணைந்து சமைப்பது இன்னும் சுவாரஸ்யமானதாக இருக்கும். ஏதாவது வெற்றியைக் கொண்டாட ஒன்றாகச் சேர்ந்து சமைத்துச் சாப்பிடலாம்.

**போட்டியிடுதல் :-** வெற்றி பெறுவதற்கு இணைந்து செயற்படுதல் வேண்டும். ஒரு செயலில் போட்டியும், பந்தயமும் இருந்தால் அந்தச் செயல் நன்கு திறன்பட்டதாக வரும். நாம் ரிஸ்க் என்று நினைத்துத் தவிர்க்கும் விடயங்களை குழந்தைகள் தைரியமாக எடுத்துச் செய்வார்கள்.

**உங்களின் பள்ளி பெறுபேற்றுத்தாளை வெளியே எடுங்கள் :-** குழந்தைகள், தங்கள் பெற்றோர்கள் சிறுவர்களாக இருந்த போது என்ன செய்தார்கள் என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பார்கள். பள்ளி தேர்ச்சி அறிக்கை பழைய புகைப்படங்கள் போன்றவற்றை அவர்களிடம் காட்டி, அது பற்றி விவாதிக்கலாம்.

**சேர்ந்து செய்தல் :-** நம் குழந்தைகளுடன் சேர்ந்து செய்யும் செயல்களை, குழந்தைகள் எளிதாகக் கற்றுக் கொள்வார்கள். அதனால் குழந்தைகளுடன் சேர்ந்து பல விடயங்களைச் செய்ய வேண்டும்.

## எனக்கும் அப்பா இருந்தார்....



ஒரு போக்குவரத்து சமிக்ஞையில் ஒரு ஊனமுற்ற சிறுமி நின்று கொண்டிருந்தாள். அங்கு ஒரு கார் வந்து நின்றது. அந்த சிறுமி சிறிது நேரம் அந்த காரில் உள்ள நபரை உற்று பார்த்துக்கொண்டிருந்தாள். பின்னர் அந்த காருக்கு அருகில் சென்று கதவை தட்டினால். ஜன்னலின் கண்ணாடி திறக்கப்பட்டது. அங்கு புகை பிடித்தபடி ஒரு நபர் அமர்த்திருந்தார். கிழிந்த ஆடைகளுடன் கையில் தடியுடன் இருந்த சிறுமியைப் பார்த்து ''என்னம்மா? காசு வேணுமா?'' என்று கேட்டார். சிறுமியிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை.

அந்தச் சிறுமி காரில் இருந்த அனைவரையும் சுற்றி சுற்றிப் பார்த்தாள். காருக்குள் கைக்குழந்தையுடன் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். '' உனக்கு என்ன வேணும்?'' என்று அந்தப் பெண்ணும் கேட்டார்.

''எனக்கு எதுவும் வேணாம் அம்மா..'' என்றவள் காரில் இருந்த மனிதரை நோக்கி,

''உங்கள் பிள்ளைகளுக்கு நீங்க எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுறீர்களா ஐயா ?'' என்று கேட்டாள்.

''ஆமாம். ஏனம்மா இப்படிக் கேட்கிறாய்?'' என்று கேட்டார்.

''உங்கள் பிள்ளைகளுக்கு எல்லாவற்றையும் கொடுங்கள். ஆனால் என்னை மாதிரி அவளுக்கும் வறுமையை கொடுக்காதீர்கள் ஐயா.

இன்றைக்கு நீங்கள் என்ன பிச்சைக்காரி என்று நினைத்தமாதிரி நாளைக்கு உங்கள் மகளை யாரும் நினைத்து விடக் கூடாது. இந்த புகை பிடிக்கும் பழக்கத்தை இன்றோடு விட்டுத்தள்ளுங்கள் ஐயா.

உங்களைப் போன்ற ஒரு அப்பா எனக்கும் இருந்ததால் தான் நான் இன்று உங்கள் முன் நிற்கிறேன் ஒரு அநாதையாய், ஒரு பிச்சைக்காரியை போல்.

இந்த நிலை உங்கள் மகளுக்கும் வரவேண்டுமா?'' என்று கேட்டாள் அந்தச் சிறுபெண். சட்டென்று சிகரட்டை கீழே போட்டார் அவர்.

என்ன ஐயா ? சிகரட் சுட்டு விட்டதா ?'' என்று அந்தச் சிறுமி கேட்க.. ''இல்லை அம்மா. நீ சொன்ன [illegible] என்னை சுட்டு [illegible] அவர் . தயவு கூர்ந்து புகைப்பிடிப்பதை இன்றோடு நிறுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

48



பா.உண்மை

1864, ஜனாதிபதித் தேர்தலிலும் லிங்கன் வெற்றி பெற்றார். இந்த வெற்றி அவர்மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கையையும் அன்பையும் வெளிச்சம் போட்டுக்ககாட்டியது. அமெரிக்காவில் நிலவும் ஜனாதிபதித் தேர்தல் வாக்கு முறைப்படி லிங்கன் 212 வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மெக்கலன் 21 வாக்குகளும் பெற்றிருந்தனர் கென்டகி, டிலேவர் மற்றும் நியூஜெர்ஸி, தவிர மற்ற மாநிலங்களில் லிங்கன் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் லிங்கனுக்கு வெற்றி ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் போர் முனையிலும் அவருக்கு வெற்றி அவரைத் தேடி ஓடி வந்து கொண்டிருந்தது. தளபதி ஷெர்மான் தென்பகுதிக்குள்ளேயே நுழைந்து ஒரு பெரிய போரை நடத்தினார் சவன்னாவைக் கைப்பற்றினார். மற்றொருபுறம் நாஷ்வில்லி என்ற இடத்தில் தளபதி தாமஸ் தெற்குப் படைகளளை சின்னாபின்னப்படுத்திக் கொண்டிருந்தார். 1865, ஜனவரி 15 ஆம் திகதி 60 கப்பல்களுடன் கிளம்பிய அமெரிக்க யூனியன் படை ஃபிஷர் கோட்டையைக் கைப்பற்றியவுடனேயே அமெரிக்கா உள்நாட்டுப் போரில் அமெரிக்க யூனியன் படை, ஃபிஷர் கோட்டையைக் கைப்பற்றியவுடனேயே அமெரிக்கா யூனியன் படையின் வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது.

அதேசமயம், தென்பகுதி மாநிலங்களின் கூட்டமைப்புப் படையின் தளபதி லீ தோல்வியின் கடைசிப்பகுதிக்கு வந்துவிட்டார். இத்தனை நாள்கள் நடந்திருந்த போரின் இறுதிப்பகுதியில் அவர் பல பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. காரணம் போதிய அளவு உணவு கிடைக்கவில்லை. சரியான சாப்பாடு இல்லாமல் எப்படிச் சண்டை போடுவதாம்? வீரர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், படை முகாமை விட்டு ஓடத் தொடங்கியிருந்தார்கள்.

அதே சமயம் லீக்கு இன்னொரு தலைவலியும் வந்து சேர்ந்தது. ஒரு மாநிலத்தில் அமெரிக்கா யூனியன் படைகள் தாக்க வருகின்றன என்று தெரிந்தால் போதும், அந்த மாநில ஆளுநர்கள் உஷராகிவிடுவார்கள். தங்கள் படைகளை லீயின் படைக்கு உதவியாக அனுப்ப மாட்டார்கள். எதற்கு வீண் வம்பு என்று ஒதுங்கிக் கொண்டார்கள். அப்போது, ஜார்ஜியா மாநிலத்தின் ஆளுநராக இருந்த ஜோசப் பிரவுன், தன்னுடைய மாநில எல்லைக்குள் தென்னக அரசு தலையிடுவதை வெளிப்படையாகவே எதிர்த்தார். இவையெல்லாம் போதாதென்று, அப்போது ஒரு புதுக் குரல் ஒன்று வடக்கு கரோலினாவில் எழுந்து கொண்டிருந்தது. 'போர் வேண்டாம். அமைதி வேண்டும்' என்றது அந்தக் குரல். இந்தக் குரல், அலாபாமா, அர்கான்சாஸ் மாநிலங்களிலும் ஒலிக்கத் தொடங்கியிருந்தது. இதற்கிடையில் லிங்கனைக் கடத்த ஒரு முயற்சியை செய்துபார்த்தது தென்னக அரசாங்கம். லிங்கனைப் பிணைக் கைதியாக்கிப் பேரம் பேசலாம் என்பது திட்டம். ஆனால் அந்த முயற்சி, தோல்வியில் முடிந்தது. லிங்கன் 1865, மார்ச் 4 ஆம் தேதி இரண்டாவது முறையாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

★

ஒரு நாட்டின் ஜனாதிபதி நினைத்தால் என்ன செய்ய முடியும்?

'என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்.' இதுதானே சரியான பதில்? ஆனால் லிங்கன் தனது சுய லாபத்துக்காக, ஜனாதிபதிப் பதவியை ஒரு போதும் பயன்படுத்திக்கொண்டது கிடையாது.

லிங்கனின் மூத்த மகனான ரொபேட் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவரத். அவருக்கு உள்ளூர் ஓர் ஆசை 'ராணுவத்தில் சேரவேண்டும்' நேரே லிங்கனிடம் வந்தார். விடயத்தைச் சொன்னார்.

பெரிய பெரிய தலைவர்களெல்லாம் தங்களது வாரிசுகளை அரியாசனத்தில் அமர்த்தி அழகு பார்த்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். லிங்கன் நினைத்திருந்தால் ரொபேட்டை அமெரிக்க யூனியன் படைக்குத் தலைமைத் தளபதியாகவே ஆக்கியிருக்க முடியும். லிங்கன் அப்படிச்செய்யவில்லை.

'பார்க்கலாம்' என்றார். ரொபேட் போனதும், தளபதி கிராண்டுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'என் மகன் ராணுவத்தில் சேர்ந்து சேவை செய்ய விரும்புகிறான் என்னை ஜனாதிபதியாக நினைத்தக் கொள்ளாமல், ஒரு நண்பனாக நினைத்து ஓர் உதவி செய்யுங்கள். மற்ற அதிகாரிகளுக்கு எந்தப் பாதகமும் இல்லாமல், ராணுவத்தில் அவனுக்கு ஏற்ற வேலை ஏதாவது இருந்தால் அவனுக்குத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.'

லிங்கனின் படைகள் தொடர்ந்து வெற்றி பெற்றுக்கொண்டிருந்தன. தாக்குதல்களைத் தாக்குப் பிடிக்காமல் முடியாமல் பீட்டர்ஸ்பர்க் நகரைவிட்டு லீயின் தென்னகக் கூட்டுப் படைகள் இரவோடு இரவாக ஓடின. தென்னகக் கூட்டுப் படைகளின் முக்கியமான நகரமாகக் கருதப்பட்ட ரிச்மாண்ட் நகரம் அமெரிக்க, யூனியன் படைகளின் வசமானது.

(மீட்பர் வருவார்)

## அங்கே......



முந்திய நாள்களில்
அந்த ஒற்றையடிப் பாதையால்
நடந்து
செல்கின்ற போது
மலர்வோடு பயணிக்கும்
பல வதனங்களை
காண்பேன்
இப்போ...

ஒற்றையடிப் பாதை
வெறிச்சோடி இருக்கிறது
பாழடைந்த
பனை மரக்குற்றிகள்
மண்ணில் உக்கிச்
செல்கின்றன
சில குருவிகளின்
சப்திப்புக்கள் கேட்கின்றன

குருவிகளின்
சப்திப்புக்களும் நீண்ட நேரம்
நிலைப்பதில்லை

எங்கோ பறந்து செல்கின்றன
இப்போ ஒற்றையடிப் பாதை
புற்களால் நிறைந்து இருக்கிறது

இடையிடையே
பட்டிப் பூக்கள்
மலர்ந்திருக்கின்றன

ஆ.முல்லை திவ்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடீஸ்வரரான வங்கிசேவகர்

75 அசை போட ஒரு விடயம்

திடீர் பணக்காரர் ஆவதற்கு எத்தனையோ விதமான உத்திகள் பயன்படுத்தப் படுகின்றன. இவைகளுக்கு சாதாரண மக்களும் அரச நிறுவனங்களும் பெரும் பாலும் இலக்காகின்றார்கள்.

சிலருக்கும் புதையல் கிடைத்து அதன் மூலம் பணக்காரராகிறார்கள். சிலருக்கு வைரக்கற்கள் கிடைத்து பணக்காரர் ஆகிறார்கள். இன்னும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பெருந்தொகை பணம் கிடைக்கப் பெறுகிறது. பெரும்பாலானவர்கள் திருட்டுத் தொழில் புரிந்தும் கொள்ளையடித்தும் பணக்காரர் ஆகிறார்கள்.

இன்னும் சிலர் தமது அறிவையும் புத்திசாதுர்யத்தையும் வைத்து எவரும் கண்டுபிடிக்க முடியாதபடி திருட்டு செய்கிறார்கள். அதன் மூலம் பெரும் பணக்காரர் ஆகிறார்கள். அரசியல்வாதிகள் அதுவும் அரசு சார்ந்த அரசியல்வாதிகளும் அவர்களின் வால்பிடிகாரர்களும் திடீர் பணக்காரர் ஆகிவிடுவதைப் பார்க்கிறோம். இந்த நிலைமை இலங்கையில் மட்டுமல்ல இந்தியா போன்ற நாடுகளிலும் சர்வ சாதாரணமாகக் காணப் படுகின்றது.

இப்படியானவர்களை எழுத்தாளர்கள் தமது கதைகளில், கட்டுரைகளில் கவிதைகளிலும் கூட கண்டிருக்கிறார்கள். பூடகமாக கிண்டல் செய்கிறார்கள். அதைவிட நாடகங்கள், திரைப்படங்களில் கூட இவர்களைப் பற்றிய அம்சங்களை தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் அவை பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களின் ஊழல் செயற்பாடுகள்தொடர்ந்து கொண்டே போகின்றன.



மனிதர்களுக்கு இயற்கையாக கிடைத்து விடுகின்ற மேதைத் தன்மையானது உலகத்தின் உயர்வுக்கும் உலக மக்களின் மேன்மைக்குமே பயன்படவேண்டும். அவ்வாறு பயன்பட்டமையால்தான் இன்று உலகம் இன்றைய நாகரிக தன்மையைப் பெற்றது. ஆனால் சிலர் தமக்கு இயற்கையின் வரப்பிரசாதமாகக் கிடைக்கும் மேதாவிலாசத்தை தம்மை மட்டும் வளர்த்துக் கொள்வதற்கும் உலகையும் உலக நிறுவனங்களையும் ஏமாற்றி பேரும் புகழும் மட்டுமல்ல பெரும் அளவில் பணத்தையும், சம்பாதித்து விடுகிறார்கள். அப்படியான ஒருவர் பற்றி ஆர்.எம். [illegible] வால் எழுதியுள்ள ஒரு நூலில் விவரிக்கிறார்.

1985 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்திய அரச வங்கியின் சார்பார்க் கிளை தனது கணக்குகளை மீளாய்வு செய்தபோது மூன்று கோடி ரூபாய்க்கு கணக்கில் வித்தியாசம் இருப்பதை கண்டுபிடித்தது. அதைவிட குறித்த வங்கியினால் வழங்கப்பட்டுள்ள வங்கி ஆணை (டிராபட்)களின் விவரங்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

வங்கி நிர்வாகம் இதனை துலாம்பரமாக துருவி ஆராய்ந்து கண்டுபிடிக்கும் பொறுப்பை மத்திய புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைத்தது. 20 நாள்களின் பின்னர் மத்திய புலனாய்வுப் பிரிவினர் இதில் வங்கியில் உள்ள ஒருவரே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்தது. ஆனால் குற்றவாளி யாராய் இருப்பார் என்பதற்கு அதனால் தடயம் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் பேரில் வங்கியிலுள்ள ஒவ்வொரு நபரினதும் தனிப்பட்ட வாழ்க்கையையும் புலனாய்வாளர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

அவர்களில் எவராவது தனது வருமானத்துக்கு [illegible] சொத்துக்களை சேர்த்திருக்கிறாரா என்பதை அவர்கள் ஆராய்ந்தார்கள்.

இறுதியில் அந்த வங்கியில் பணி புரிந்த சேவகர் ஒருவரே குற்றவாளி என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ரகுநாத்கவுர் என்பது அவருடைய பெயர். இவர் தமது இந்த குற்றச் செயல்களைப் புரிவதற்கு தமது மனைவி மற்றும் மைத்துனரையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். வங்கிக் கிளையிலிருந்து வங்கியின் தலைமையகத்துக்குத் தபால்களைக்கொண்டு செல்வது அவரது அன்றாடக் கடமையாக இருந்துள்ளது.

இவ்வாறு பணி புரிந்ததில் காசோலைகளை எவ்வாறு பணமாக மாற்றிக் கொள்வது என்பதில் அவருக்கு தேர்ச்சியான அறிவு கிடைத்தது.

முதலாவதாக அவர் இந்திய அரச வங்கியின் பல கிளைகளில் புனைப் பெயர்களில் கணக்குகளை ஆரம்பித்தார். அதற்கேற்ப காசோலை வசதியையும் பெற்றுக்கொண்டார்.

அவுத் கூட்டுறவு வங்கியின் அமினா பாத் கிளையில் இரண்டு கணக்குகளை ஆரம்பித்தார். கணக்குகளை ஆரம்பிக்கும் போது தன்னை அறிமுகப்படுத்துவதற்கான ஆள்களைக் கண்டுபிடிப்பதில்அவருக்கு கஷ்டம் இருக்கவில்லை.

இந்திய அரசு வங்கியின் செறக் வங்கியிலிருந்து ஆர்.எம்.குப்தா என்பவருக்கு ரகுனாத் 200 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையொன்றை எழுதினார். பின்னர் அந்த காசோலையை அனத் கூட்டுறவு வங்கியின் அதினாபாத் கிளையில் ஆர்.எம்.குப்தாவின் கணக்கில் வைப்புச் செய்தார். அது அரச வங்கியின் பிரதான வங்கிக்கு வைப்புச் செய்வதற்கான காசோலையை அனுப்பியது.

அங்கே சென்ற போது அதன் தொகை அவுத் கூட்டுறவு வங்கியில் வரவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் பணம் செலுத்தப்படுவதற்காக காசோலை இந்திய அரச வங்கியின் சவுக் கிளைக்கு அனுப்பப்பட்டது. அங்கே ரகுநாத்தே அந்த காசோலையை எடுத்து எறிந்து விட்டார். காசோலை வங்கிக்குச் சென்றடையாததால் அந்த குறிப்பிட்ட தொகை பணம் காசோலையை எழுதியவரின் கணக்கில் இருக்கிறதா என்பதை நிர்ணயிப்பது சாத்தியப்படவில்லை.

அடுத்த நாள் அனுமதி வழங்கும் மையம் கிரடிட் எட்வைஸ் சிட்டையை ஒவுத் கூட்டுறவு வங்கிக்கு வழங்கியது. அவர்கள் ஆர்.எம்.குப்தாவின் கணக்கில் அதனை வரவு செய்தார்கள்.

நகுநாத் உடனடியாகவே அதனை எடுத்துக் கொண்டார். இவ்வாறு முதல் தடவை கிடைத்த வெற்றியினால் ஊக்கம் பெற்ற அவர் தொடர்ந்து இந்த ஊழல் நடவடிக்கையில் வேகத்துடன் ஈடுபடலானார். இந்திய அரச வங்கியின் பெயரில் வழங்கப்படும் பணத்துக்கு சமமாக டிராப்பட்களை எடுப்பதில் அவர் கவனமாய் இருந்துள்ளார். அதனால் கணக்குகள் சரி பார்க்கப்படும் சமயங்களில் வரவும் - செலவும் வித்தியாசம் எதுவும் இன்றியே காணப்பட்டது.

1983 ஒக்ரோபரிலிருந்து நகுநாத் அவ்வாறான 27 காசோலைகளைத் தனது இரண்டு கணக்குகளில் வைப்பீடு செய்துள்ளார். அந்த வகையில்அந்த வங்கிக்கு 31, 82, 720 ரூபாய் நட்டமேற்படுத்தியுள்ளனர். இதே மாதிரியில் பஞ்சாப் தேசிய வங்கி அலகாபாத் வங்கி மற்று ஐக்கிய வர்த்தக வங்கிகளை ஏமாற்றியுள்ளனார். 1985 ஆம் ஆண்டு கணக்குகள் சரி பார்த்த போது தான் இவ்வளவு பெரிய தொகைக்கான ஊழல் வெளிப்படலாயிற்று.


ரகுநாத்திடம் மிக சொகுசு பஸ் ஒன்றையும் பியாக்கோ ஸ்கூட்டர் ஒன்றையும் அதிகாரிகள் கண்டுபிடித்தார்கள். அரை கிலோ தங்க நகைகள், தொலைக் காட்சி பெட்டிகள், குளிர் சாதனங்கள் இரண்டு, பங்களாக்கள் மற்றும் ஒரு பண்ணையும் அவர் பெயரில் இருந்துள்ளது. 20 லட்சம் ரூபா பணமும் அவரிடமிருந்து கைப்பற்றப் பட்டது. அவர் வங்கிகளில் வைத்திருந்த கணக்குகள் எல்லாம் உடனடியாக சீல் வைக்கப்பட்டன. ரகுநாத் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

குற்றச் செயலானது ஒரு போதும் நன்மை தராது என்ற பாடத்தை அவர் கற்றுக் கொண்டாரா என்பது தெரியவில்லை.

“மனிதர்களுக்கு இயற்கையாக கிடைத்து விடுகின்ற மேதைத் தன்மையானது உலகத்தின் உயர்வுக்கும் உலக மக்களின் மேன்மைக்குமே பயன்படவேண்டும். ஆனால் சிலர் தமக்கு இயற்கையின் வரப்பிரசாதமாகக் கிடைக்கும் மேதா விலாசத்தை தம்மை மட்டும் வளர்த்துக் கொள்வதற்கும் உலகையும் உலக நிறுவனங்களையும் ஏமாற்றி பேரும் புகழும் மட்டுமல்ல பெரும் அளவில் பணத்தையும் சம்பாதித்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 265



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.முகத்துக்கு முன்பாகச் செய்யப்படும் உபகாரம்
4.நச்சு வேலை செய்பவன்
7.அரங்கம்
8. சூரியன்
9. தனியான - விசேடமான தன்மை
11. திருத்தணியை இப்படியும் அழைப்பர்
12. பழங்கால யுத்த ஆயுதம்
13. வெற்றி பெறுக
14. ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல
15. நல்ல
16.மோர் போல குடிக்கலாம்
18. ஆலயக் கோபுர உச்சியில் அமைவது
20. பாம்பாட்டியின் இசைக்கருவி
21. தேவலோக நடனமாது
22. கிரௌஞ்சப் பறவை.

### மேலிருந்து கீழ்

1. சேலையில் முன்தலைப்பு
2. கொழும்புக்குப் பக்கத்தில் ஓர் இடம்
3. இறத்தல்
4. ரகம்
5. கழித்தல் குறி
6.கனத்தில் ஒளிக்கீற்றைக் கக்கி மறைவது
8. மகிழ்ச்சி
10. தைரியமான செயல்
12. எல்லையில் போடுவது
13. சர்க்கரை
14. பெண் தெய்வம்
15. அரக்க/ அசைய
17. குடிசை
19. அமைப்பு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 261 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கதிர்காமம் (6) தரு (7) கறி (8) பூபூ
(9) கடிதம் (11) சுத்தி (12) அதிதி (13) தக்கது
(15) மாதா (17) விக்கல் (18) வன்னி (19) யாகம்
(20) வட (21) தின் (22) குடும்பம்

**மேலிருந்து கீழ்**

(1) கதகளி (2) திருடி (3) காகம் (4) மறி
(5) புழுதி (8) புத்திமான் (10) தர்க்கம் (11) சுதி
(12) அது (13) தக்கன் (14) கல் (16) தானியம்
(17) வியாதி (18) வடம் (20) வடு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 265**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (08.05.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.263இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.05.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 260 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**பு.கிருஸ்ணாநிதி**
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

**2 ஆம் பரிசு**
**ந.பானுஜன்,**
இல.177, மூர் வீதி, மன்னார்.

**3 ஆம் பரிசு**
**பாலமதுஜா ஆறுமுகநாதன்,**
திருநாவலூர், புலோலி மேற்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
**வி.விதுஷன்,** இல. 50, கண்டுவில், 2 ஆம் ஒழுங்கை, டச்சுவீதி, சாவகச்சேரி.

**5 ஆம் பரிசு**
**எஸ்.எஸ்.ஐயா,**
இல.98, செட்டித்தெரு, நல்லூர்.

**பாராட்டுப் பெறுவோர்**


**ப.தீபா,**
அச்செழு, நீர்வேலி.

**செல்வி ச.நிரோஷிகா,**
இல.75, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


**செல்வி. சு.விதுப்பிரியா,**
இல.A 2/1 அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு- 04

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் 'நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பி வைக்கப்படும்.*

# யார் மிருகம் எது மனிதம்



தொகுப்பு: ஆதி



இரண்டு நாய் குட்டிகள் விளையாடிக் கொண்டு இருக்கும் போது தவறுதலாக அவை ஒரு கிணற்றில் விழுந்து விட்டன.இதைப் பார்த்த தாய் நாய் தன்னுடைய முதலாளியை வர வைப்பதற்காக கிணற்றின் அருகில் நின்று குரைத்து கொண்டே இருந்தது.

சத்தம் கேட்டு கிணற்றை எட்டி பார்த்த முதலாளிக்கு ஒரே அதிர்ச்சி.தான் ஆசையாக வளர்த்த நாய் குட்டிகள் கிணற்றில் விழுந்து கிடக்கின்றன அதன் அருகில் பெரிய ராஜநாகம் படம் எடுத்து ஆடிக் கொண்டு இருந்தது.

கிணற்றில் ஒரு பகுதியில் மண் திட்டியும் மறு பகுதியும் தண்ணீரும் இருந்தன.ராஜநாகம் நாய் குட்டிகளை ஒன்றும் செய்யவில்லை, நாய் குட்டிகள் தண்ணீரில் இறங்காதவாறு காவல் காத்து கொண்டு இருந்தது.

ராஜநாகம் மற்றும் நாய் குட்டிகள் 48 மணி நேரம் கிணற்றில் ஒன்றாக இருந்தன.இந்த 48 மணி நேரமும் நாய் குட்டிகள் தண்ணீரில் விழாதவாறு ராஜநாகம் அமைதியாக காவல் காத்து கொண்டு இருந்தது.

பிறகு வனத்துறையினர் கிணற்றுக்குள் இறங்கிய போது ராஜநாகம் மறு கரைக்கு சென்றுவிட்டது.நாய் குட்டிகளை காப்பாற்றிய வனத்துறையினர் அந்த ராஜநாகத்தையும் காப்பாற்றி காட்டில் விட்டனர்.

அதிகம் விஷம் உடைய ஒரு ராஜநாகம் இரண்டு சிறிய உயிரினத்துக்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பு கொடுக்கும் இந்த பூமியில் தான், சின்னஞ்சிறு குழந்தைகளையும் சிறுமிகளையும் பாலியல் பலாத்காரம் செய்யும் மனித மிருகங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. இதுபோன்ற உயிர்களிடத்தில் இருந்தாவது நல்ல பண்புகளை கற்று கொள்ளுங்கள் மனித மிருகங்களே...


> அதிகம் விஷம் உடைய ஒரு ராஜநாகம் இரண்டு சிறிய உயிரனத்துக்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாப்பு கொடுக்கும் இந்த பூமியில் தான். சின்னஞ்சிறு குழந்தைகளையும் சிறுமிகளையும் பாலியல் பலாத்காரம் செய்யும் மனித மிருகங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணங்களின் லயம்



ஓவியர் வசந்தரூபனுடன் ஒரு பகிர்வு



■ நேர்காணல்: கரன்



சித்திர வரலாற்றில் பல ஓவியர்கள், புகைப் படக் கலைஞர்கள், சிற்பிகள் போன்ற துறைசார் கலைஞர்கள் ஏராளமானோர் காணப்படினும் புத்தாக்க திறன் கொண்ட ஓவியர்கள் சிலரையே நாம் காண்கிறோம். சகலவித மான திறன்களும் கொண்ட மைந்த ஒருவராலேயே தமது படைப்புகளை கண்காட்சிகளாக அமைத்து பிறர்இன்புற வகை செய்து கொடுக்க முடிகிறது.

ஐக்கியத்தையும் நல்லெண் ணத்தையும் வலுப்படுத்தும் நோக்குடன் சுழிபுரம் காவேரி கலா மன்றம் தைப்பொங்கல்தினத்தன்று 'வர்ணஒளி' என்ற புகைப்படக் கண்காட்சியை நடத்தியிருந்தது. யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டதாரியும் தற்சமயம் இந்தி யாவில் பாளையங்கோட்டை தூய சவேரியார்கல்லூரியில் நாட் டார்வழக்காற்றியல் துறையில் பயிலும் ஆய்வு பட்டதாரி மாணவனுமாகிய வேலுப்பிள்ளை வசந்தரூபனின் (வசந்) ஓவியங்க ளும் புகைப்படங்களும் காட்சியி டப்பட்டு பலரின் பாராட்டுக் களைப் பெற்றிருந்தன.

உள்ளூரிலிருந்து மாத்திர மல்லாமல் தென்னிலங்கையிலி ருந்தும் பெருந்திரளான மக்கள் இதனைப் பார்வையிட்டனர்.

தமிழர்களின் பாரம்பரிய தைத் திருநாளின் சிறப்பையும் கலாசா ரத்தையும் பிரதிபலிக்கும் முக மாக வாழைகள், தோரணங்கள், மாலைகள், கரும்புகள் கட்டி, சாணி மெழுகி, கோலம் போட்டு, உரல், ஆட்டுக்கல், கலப்பை, மாட்டுவண்டில், மாடு, தொழு வம், வைக்கோல் கயிறு போன்ற வைகளை வைத்து அரங்க மைத்து அதன் நடுவே ஓவியங் கள் வைக்கப்பட்டிருந்தன.

தூரிகை மூலமும் புகைப் படக் கருவி மூலமும் நல்ல படைப்புக்களை காட்சிப்படுத் திய கலைஞர் வசந்தரூபனை நேர் கண்டோம்.

**கேள்வி:-** கண்காட்சியில் அதிகம் பாராட்டப்பட்ட ஓவியம் பூக்களில் தேன் அருந்தும் தேனீக் கள். அதனை வரைவதற்கான கற்பனை எவ்வாறு தோன்றியது?

**பதில் :-** சிறுவர்களின் ரசனை கூடுதலாக தமது சுற்றுப்புறச் சுழலிற் காணப்படுகின்ற தாவ ரங்களிலும் அதில் அழகான வர் ணத்தில் பூத்துக்குலுங்குகிற புக்களிலும், தேன் பருக வருகின்ற அழகிய வண்ணத்துப்பூச்சிகள், தும்பிகள், தேனீக்களிலும் தான் மனம் லயித்துக் காணப்படும். தேனைப்பருக வந்த தேனீக்கள் தான் என்னை பெரிதும் கவர்ந் தன. மனிதனின் கூர்ப்பு சக்தி போல் தேனீக்களுக்கும் ஏற்பட் டால் அதன் தோற்றம் மாறும் என்று எண்ணி வரைந்தபடம் தான் இது. புகழ்பெற்ற உலக ஓவியர்கள் வரைந்தபடங்களில் பெரும்பான்மையானவை எதிர் கால மாற்றங்களை ஊகித்து வடிவமைத்தது போல எனது படைப்பும்அமையவேண்டுமென்று எண்ணி யாழ் பல்கலைக்கழகத் தில் 3ம் வருடம் பயின்று கொண் டிருந்த நேரம் வண்ணக்கட்டி களால் வரைந்தேன். பலர் இத னைப் பாராட்டியதால் ஊக்கம் கொண்டு இந்தியாவில் படிக்கின்ற வேளையில் கன்வஸ்துணியில் வரைந்தேன்.

**கேள்வி:-** இரண்டாவதாக உங்களது படைப்பான 'கிரீடம் தரித்த அழகிய நங்கையின் முகம்' பலரது மனதையும் கவர்ந்தது. இதனை வரைந்தெடுக்க நீண்ட காலம் எடுத்திருக்கும் என நினைக் கிறேன். அதுமட்டுமல்ல இப்படி ஓர் ஓவியத்தை தீட்டவேண்டு மென்கின்ற கற்பனை எவ்வாறு எழுந்தது என்று கூற முடியுமா?

**பதில்:-** நான் இந்தியாவிலே நாட்டார்கலைகள் தொடர்பான ஆய்வு பற்றி பயின்று கொண்டி ருக்கிறேன். அங்கே கேரளா மாநிலத்தில் காணப்படுகின்ற தெய்யம், கதகளி (நிகழ்த்துக் கலைகள்) போன்ற நாட்டுப் புறக்கலையைப் பார்க்கலாம். தமிழ்நாட்டில் தெருக்கூத்துக் களையும், எங்கள் மண்ணில் கோவலன் கண்ணகி கூத்தை யும், காத்தவராயன் கூத்தையும் பார்க்கலாம். தென்னிலங்கை யில் கண்டிய நடனத்தையும் பார்க்கலாம். இதில் ஆடுகிற பெண்களின் தலையில் காணப் படுகின்ற கிரீடமும், முக ஒப் பனைகளும் அணிகலன்களும் ஒன்றுடன் ஒன்று ஒரே மாதிரி யாக ஒத்துப்போவதை கண்டேன். ஆதலால் எல்லாக் கூறுகளையும் ஒப்பிட்டு ஒருங்கிணைத்து அலங் காரமுறையில் இவ் ஓவியத்தை வரைந்து பதிவு செய்ய விரும் பினேன்.

**கேள்வி :-** ஓவியத்தில் மட்டுமல்ல புகைப்படக் கலை யிலும் கைதேர்ந்த கலைஞனாக நீங்கள் திகழ்வதை இங்கே காட்சிப்படுத்தியுள்ள புகைப் படங்கள் பறைசாற்றுகின்றன. அதற்குள் ஒன்று இரு குழந்தை கள் ஒருவரை ஒருவர்பார்த்த வாறு இருக்கிற புகைப்படம் என்னை பெரிதும் கவர்ந்தது. அவர்களின் முகபாவனையும் கண்களில் தெரியும் ஏக்க உணர்வுகளும் நிறையக் கதை கள் எமக்குச் சொல்கின்றன. அது பற்றி....?

**பதில்:** இது ஒரு சுவாரசிய மான நிகழ்வு. எனக்கும் அந்த குழந்தைகளுக்குமிடையே பத்தடி தூரம் இருக்கும். நான் அவர்களையே கவனித்தபடி இருந்தேன். அந்த மண்டபத் தில் சுமார்இருநூறு சனங்களும் நடுவில் இக் குழந்தைகள் இருந்தனர். பெரிய குழந்தை யிடம் இருந்த லட்டை சிறு குழந்தை சுரண்டிக் கேட்டுச் சாப்பிடும். அது முடிய மீண்டும் சுறண்டும். பெரிய குழந்தை பார்க்கும். பின் லட்டைக் கொடுக் கும்.

இந்த நிகழ்வை எனது புகைப் படக்கருவி ''கிளிக்'' செய்தது. உலகப் போர்காலத்திலும் சுனாமி அடித்த நேரத்திலும் உணவுக்கு அல்லலுற்ற குழந் தைகளின் ஏக்கப் பார்வைக்கான அர்த்தம் இதில் உண்டு.

ஒரு படைப்பாளி தனது இடைவிடாத முயற்சியால் தனது படைப்பை சரி பிழை என்று பாராது பிறர் என்ன சொல்வார் களோ என்று அச்சப்படாமல் கூச்சத்தை தவிர்த்து மனத்துணி வுடன் தனதாற்றலை ஊரறிய வெளிக்கொண்டு வரவேண் டும். இதற்கு மூத்த கலைஞர் களும், ஆசான்களும், சிரேஸ்ட மாணவர்களும் பக்கத்துணை யாக நின்று இவர்களை சமூகத் துக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். என் வளர்ச்சிக்கு தவிய எனது பாடசாலை ஆசிரி யர்கள், பல்கலைக்கழக விரிவு ரையாளர்கள் , மூத்த ஓவியக் கலைஞர்கள், சிரேஷ்ட மாண வர்கள், நண்பர்கள், பெற்றோர் கள், சகோதரங்கள், ஜோசுவா அடிகளார்ஆகியோரை என்னால் மறக்க முடியாது. திருமதி ராஜ் மனோகரன் (விஜி) ஆசிரியர் சிவ குமார்றெஜினோபன் அனுசியா ஆகிய பெருந்தகைகளுக்கு என்அன் பையும் நன்றியையும் தெரிவிக்க வேண்டியவனாகவுள்ளேன்.

---

# சீர்குலையும் தமிழர் பண்பாடு

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்திற்கு நீச்சலுடையுடனும், நீச்சல் தடாகத்திற்கு சேலையுடனும் செல்ல முடியாது. தக்க இடத்தில் தக்க முறையிலேயே நடந்துகொள்ள வேண்டும். அண்மைக்கால பழக்கவழக்கங்களின் மாற்றங்களில் புலம்பெயர் தேசத்தில் இருந்து வருவோரல் பாதிப்பு ஏற்படுகி றது என்பது கசப்பான உண்மைதான். தனித்துவமான தனி நாட்டுக்காகவே பல்லாயிரம் உயிர்களை எமது இனம் இழந்திருக்கிறது. அந்த தனித்துவம் கலா சாரத்தின் அடிப்படையானது என்பதை புலத்தவராயினும், புலம்பெயர் தேசத்த வராயினும் யாரும் மறந்துவிடக்கூடாது. அதேபோல் புலம்பெயர் தேசத்திலிருந்து தமது சொந்த மண்ணுக்கு வரும் சிலர் தாம் ஏதோ வெளிநாட்டில் பிறந்து வாழ்ந்தவர்கள் எனும் இறுமாப்புடன் கேடுகெட்ட கலாசாரங்களை எம்மிடத் தில் திணிக்கின்றனர். வெள்ளையனே தமிழர் தேசத்தை கண்டவுடன் தமது கலாசாரத்தை மறந்து பட்டு வேட்டியுட னும், தமிழ் பண்பாட்டை வெளிக்காட் டும் சேலையுடனுமே ஆலய தரிசனங் களில் ஈடுபடுவதனை நாம் காண்கின் றோம். ஆனால் நம்மவர்கள் வெளிநாட்டு மோகத்திற்கு மயங்கி நிற்கும் நிலை பெரும் வேதனைக்குரியது.

சிவாஜி திரைப்படத்தில் ஒரு காட்சியில் கலாசாரமான பெண் வேண்டுமென்று ரஜனி கேட்க விவேக் அதற்கு அப்போ யாழ்ப்பாணத்துக்குத்தான் போகவேணும் என்று சொல்லுவார். உலகில் தமிழர் பரந்துபட்டு வாழும் பல இடம் இருக் கிற போதும் யாழ்ப்பாணத்தை அந்த காட்சியில் சொல்லுவதானது உலக பார்வையில் ஈழத்தில் கலாசாரம் எப்படி இருந்தது என்பதை காட்டுகிறது

இளைய சமூகம் ஒன்றை நன்கு உணரவேண்டும். மாற்றம் ஒன்றே நிரந்தரமானது, மாற்றங்கள் நிகழாவிட் டால் உலகத்தோடு ஒட்டி வாழமுடியாது. நல்லதுக்கான மாற்றங்களை உள்வாங் கினால் மட்டுமே நாம் பயனடைய முடியும் இல்லையேல் அழிவே மிஞ்சும். எமது கலாசாரத்தை கடைப்பிடிப்பதோடு, பேணி பாதுகாத்து, அதனை அடுத்த சந்ததிக்கு பாதுகாப்பாக கடத்த வேண் டிய தார்மீக பொறுப்பு உங்களிடம் இருக்கிறது.

கடமையை செய்யத் தவறின் ஈழச் சரித்திரத்தில் வரலாற்றுப் பழியை ஏற்க வேண்டி வரும்.

பழியை ஏற்பதா ? கடமையை செய் வதா? ஒரு மனித இனத்தின் நிலைத்தி ருப்பு என்பது அவ்வினத்தின் மொழியின தும், பண்பாட்டினதும் நிலைத்திருப்பி லேயே தங்கியுள்ளது. மொழி, பண்பாடு வாழும் வரை அந்த இனமும் வாழும். எமது நிலைத்திருப்புக்காக நாம் என்ன செய்ய போகிறோம்? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எங்களூர் பொங்கல்கள்'

## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்



பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்-சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட் புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங் களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.

ஆர்மோனியக்காரர் சுதி மரியான் பளையைச் சேர்ந்தவர் கிடையாது. யாழ்ப்பாணம் பாசையூர் அல்லது கொழும்புத்துறையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

இரண்டு தடவை நான் புலோப்பளை சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் சங்கிலியன் கூத்து பார்த்திருக்கின்றேன். இரண்டாம் தடவை சுதி மரியான் இசை வழங்க வரவில்லை. அது 1984 அல்லது 1985 ஆக இருக்கலாம்.

எப்போதும் எல்லா வகை கூத்து தொடங்கும்போதும் அண்ணாவியார் மேடை முன் தோன்றி பேசுவது வழக்கம். இந்த சங்கிலியன் கூத்திலும் அண்ணாவியார் பேசியது ஞாபகம். அவர் பெயர்தான் ஞாபகம் இல்லை. தாழையடியைச் சேர்ந்தவராக இருக்கலாம்.

அவர் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் முன்னே இருந்த பார்வையாளர்கள்.

''சுதிமரியான்வரவில்லையோ'' என தங்களுக்குள் உரையாடினார்கள்.

இது அந்த அண்ணாவியாருக்கு பேசிக் கொண்டிருக்கும் போதே கேட்டுவிட்டது. உடனே அவர் தனது பேச்சில்

''இங்கே சுதி வரவில்லையோ என்று கேட்கின்றனர். அவருக்கு உடல் நலம் இல்லை அதனால் வரமுடியவில்லை''

என்று கூறி முடித்தார். நான் முன்னர் எழுதிய கூத்தாடும் கூட்டம் எனும் தொடரில் அண்ணாவிமாரின் திறமைகளை வியந்து இருக்கிறேன்.

சுதி எத்தகைய காரணங்களால் வரவில்லை என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பார்வையாளர்களை திருப்திப்படுத்த வேண்டியது அண்ணாவியாரின் கடமை என்பது இதிலிருந்து புரிகின்றது.

அண்ணாவிமார் ஒரு சினிமா இயக்குனரை விட திறமைசாலிகளாக இருந்தார்கள், இருக்கின்றார்கள்.

இரண்டாம் தடவை கூத்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு கூத்தாடி மேடைக்கு வந்தார்.

சங்கிலியன் கூத்தில் உள்ள குறிப்பிடக்கூடிய அம்சம், ஒவ்வொரு பாடல் அடியும் முடியும் போதும் உயரமாக துள்ளி பாடி முடிப்பதாகும். இது பார்வையாளனை விழிப்படையச் செய்யும் உத்தியாக இருக்கலாம். (பந்தம் பிடிப்பது பற்றியும் முன் தொடரில் எழுதியுள்ளேன்.)

மேடைக்கு வந்த கூத்தாடி மேடையில் துள்ளி குதித்து நடித்துக் கொண்டிருந்தார்.

எங்களுக்குப் பக்கத்தில் ஒரு வயது முதிர்ந்த பெரியவர் கூத்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''பார்த்தியளே என்ரை மருமோனும்
துள்ளிக் குதிக்கின்றார்.''

''கூத்தெண்டா நல்லா துள்ளிக் குதிப்பார்.''

ஏன் இவ்வாறு கிண்டல் பண்ணுகிறார் என்று யோசிக்க வேண்டும்.




கூத்தாடிக்கு எல்லாமாக ஒன்பது பிள்ளைகள். ஒவ்வொரு வேளையும் உணவு நேரம் பதினொரு கோப்பைககளில் சாப்பாடு போட வேண்டும். அப்போதெல்லாம் வெளிநாட்டுப் பணம் வரத் தொடங்கவில்லை. உழைத்துத்தான் சாப்பிட வேண்டும். வயல் விதைக்க வேண்டும். தோட்டம் செய்ய வேண்டும். எப்படி உழைத்தாலும் இரவு தாய் தண்ணீரைக் குடித்துவிட்டுத்தான் படுக்க வேண்டும்.

பெரியவர் தொடர்ந்தார்.

''நேற்று ஒரு கிடாய் 300 ரூபாவுக்கு வித்துக் கொடுத்தனான்.

அந்தக் காசை தூக்கி கூத்தாடக் கொடுத்திட்டாள் என்ரை மோள்''

புருசனை வேஷம் கட்டியும்
பார்க்க வேணும் அவளுக்கு''

பெரியவர் வேதனைப்பட்டுக் கொண்டார்.

ஆனால் நான் கண்ட கூத்தில் எல்லாம் கணவன் கூத்தாட காதுத் தோட்டினை அடைவு வைத்தோ, விற்றோ கொடுத்து விட்டு இரவு நல்ல பச்சை அரிசிமாவில் பிட்டும் அவித்து, உருளைக்கிழங்குக் கறியும் வைத்துக் கொண்டு வந்து கூத்தாடும் புருஷனுக்கு கொடுத்து சாப்பிட வைத்து முன் வரிசையில் அமர்ந்து கொண்டு

''என்ரை மனுசன் இந்த முறை நடுக்காத்தான் எல்லே''

''உண்ணானை?''

''பின்னை போன வருஷம் நடுக்காத்தான் தரேலை எண்டு மனுசன் பட்டபாடு''

''அப்படியே''

''ஓ..அதுதான் இந்த முறை நாண்டு கொண்டு நிண்டு நடுக்காத்தான் எடுத்தது.''

''அப்ப கலக்குவார்''

''இருந்து பாருங்கோவன் காதுத்தோடு வித்தல்லே பங்குக் காசு குடுத்தனான்.''

கூத்தாடும் செலவு மிக இலகுவாக கையாளப்படும்.

எத்தனை நடிகரோ அத்தனை பேருக்கும் சமமாக செலவைப் பிரித்து பங்கு போடப்படும். இதனால் யார் தலையிலும் செலவு பொறுக்காது.

இந்த கூட்டு முயற்சி (சின்டிகேட்) நல்ல முறையாகவே கருத வேண்டும்.

இந்த அமைப்பினைக் கொண்டு எம்மவர்கள் கூத்து போன்று இன்னும் நல்ல வேலைகளை செய்திருக்கலாம்.

இடையில் கனகப்பா சொன்ன கதை ஞாபகம் வருகின்றது. கனகப்பா சந்தைக்கு சனிக்கிழமை போனால் சில வேளைகளில் தொங்கலில் (போதையின் உச்ச நிலை ) வருவார். சிரிப்பு பலமாக சந்தோசமாக இருக்கும்.

''என்ன கனகப்பா''

''மயிலு கனகசபை''

முழுப்பெயர் தெளிவாக வரும்.

''ஏன் நேற்று வேறே பெயரோ''

''இல்லை அதுதான்''

''என்ன விசேசம்''

''ஒரு சின்டிகேற் போட்டது கொஞ்சம் கூடியிட்டது''

இந்த சின்டிகேற் A/L இல் எக்கவுண்ஸ் படிக்கும் போது தான் எனக்கு தெளிவாக விளங்கியது.

அதாவது கனகப்பாவும் அவரது 'குடி' சகபாடிகளும் ஒன்று சேர்ந்து பணத்தை தி டி சாராயம் வாங்குவார்கள் பிறகு கொண்டாட்டம் தான்.

கனகப்பா ஒரு நாள் 'சின்டிகேட்' போட்டு சைக்கிளால் விழுந்த கதையும் இருக்கின்றது.

(பொங்கல் இனியும்...)

# மரணமே..... சற்றுப்பொறு...

சற்றுப் பொறு
மரணமே....
உன் உணர்வுக்காய்
எப்போதோ என்னுயிரும்
சபிக்கப்பட்டதை
நானறிவேன்...
ஆனாலும்
உன் மடியிலிருப்பது
மழலைச் சுகம்..
ஏனெனில்
என் தோழமைகள்
அலாதியாய் தூங்குவதை
அடுக்கடுக்காய் பார்த்திருக்கிறேன்
வெற்றிக் களிப்பில்
விழி மூடிக் கிடந்தாலும்
அவர்கள் வீரமரணத்தில்
விழுதாய் நிற்பதை...
விழி நீரால் தொழுதிருக்கிறேன்
மரணமே...
சற்றுப் பொறு
உறங்காத கண்மணிகள்
உன்னிடத்தில் இன்னும்
உயிரோடு தானிருக்கிறார்கள்
நீ
தாயாய் இருப்பதால்....
தாங்கிக் கொள்வாய் என்ற
நம்பிக்கையோடு...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத புயல்




கிறிஸ்கெய்ல். அதிரடியின் மறுபெயர். கரீபியன் தீவுகள் தந்த இன்னொரு கிரிக்கெட் சொத்து. ஆரம்பத்தில் சாதாரண துடுப்பாட்ட வீரராகவே உள்நுழைந்த கெய்ல், போகப் போக அதிரடிக்கு மாறினார். அத்துடன் பந்துவீச்சு, களத்தடுப்பு என்று சகல துறைகளிலும் ஜொலிக்க மேற்கிந்தியத் தீவுகளின் அணி தலைமைப் பொறுப்பு அவரிடம் வந்து சேர்ந்தது.

விளையாட்டில் எவ்வளவுக்கெவ்வளவு கெட்டித் தனம் உண்டோ அவ்வளவுக்கவ்வளவு சர்ச்சைகளும் கெய்லை சுற்றிக் கொண்டே இருந்தன. அதிகளவான நண்பிகள், மதுபான விடுதி விருந்துகள் என்று அவரது இன்னொரு உலகம் கெய்லின் புகழை மங்கச் செய்துகொண்டிருந்தன. என்றாலும் விளையாட்டில் அசைக்க முடியாத வீரராக இருந்ததால் தொடர்ந்தும் அணியில் நீடித்தார். இந்த நிலையில்தான் மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்களுக்கு நிர்வாகம் சம்பளத்தை உரிய முறையில் வழங்காமல் இழுத்தடித்தது. இந்த நேரத்தில் அணித் தலைவராக இருந்த கெய்ல் நிர்வாகத்துக்கு எதிராக போர்க் கொடி தூக்கினார்.

தமக்கு எதிராக போராட்டத்தில் குதித்த வீரர்களை ஒட்டுமொத்தமாக அணியிலிருந்து நீக்கிவிட்டு புதிய வீரர்களை அணிக்குள் உள்வாங்கி அதிர்ச்சி கொடுத்தது மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி நிர்வாகம். எனினும் பின்னர் சில வீரர்கள் நிர்வாகத்துடன் சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டதால் அவர்கள் மீளவும் அணிக்குள் உள்வாங்கப்பட்டனர். ஆனால் தொடர்ந்தும் கெய்ல் அணித் தெரிவில் புறக்கணிக்கப்பட்டார். கெய்லின் கிரிக்கெட் சகாப்தம் முடிந்துவிட்டதாகவே எல்லோரும் நினைத்தனர். ஏனெனில் இதேபோன்று அணி நிர்வாகத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கிய சிம்பாவே அணி வீரர்களான ஒலங்கா, அன்ரி பிளவர் ஆகியோரின் கிரிக்கெட் வாழ்வு அத்துடன் முடிந்திருந்தது. அவர்களுக்கான அணி தெரிவுக் கதவு அதன் பிறகு திறக்கப்படவே இல்லை. அதே கதியே கெய்லுக்கும் என்றே எல்லோரும் நம்பினர்.

இந்த நிலையில்தான் கெய்ல் ஐ.பி.எல். உள்ளிட்ட உள்ளூர் அணிகளுக்கான போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினார். மேற்கிந்திய அணி நிர்வாகத்தின் மீது இருந்த ஆத்திரம் அத்தனையும் பந்துகளின் மீது காட்டினார். விளைவு அவரின் துடுப்பில் பட்ட அனேக பந்துகள் எல்லைக்கோட்டை தாண்டியே வீழ்ந்தன.

20/20 போட்டிகளில் முக்கிய வீரராக கெய்ல் உருவானார். 2011, 2012 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் அதி கூடிய ஓட்டங்களையும் அதி கூடிய சிக்சர்களையும் விளாசிய வீரர் என்ற விருதுகளைத் தொடர்ச்சியாகத் தட்டிச் சென்றார். இது தவிர பங்களாதேஷ் பிரிமியர் லீக், ஆஸ்திரேலிய பிக்பாஷ் தொடர், தென்னாபிரிக்க பிரிமியர் லீக் போட்டிகளிலும் கெய்லின் விஸ்வரூபம் தொடர்ந்தது. இதேவேளை மேற்கிந்தியத்தீவுகள் அணி கத்துக்குட்டி அணிகளிடம் கூட அடிமேல் அடிவாங்கிக் கொண்டிருந்தது. இந்த நிலையில்தான் மீண்டும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு கெய்லை உள்வாங்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. தொடர் தோல்விகளையும் கெய்லின் அதிரடிகளையும் நேரில் கண்ட மேற்கிந்திய நிர்வாகம் பணிந்தது. மீண்டும் மேற்கிந்திய தீவுகள் அணியில் கெய்ல் உள்வாங்கப்பட்டார். அவர் அணியில் சேர்ந்தவுடனேயே வெற்றிகள் குவியத் தொடங்கின. குறிப்பாக உலகக் கிண்ண 20/20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் சம்பியனானது. அதன் பின்னரே தமது அணிக்கு கெய்ல் எவ்வளவு முக்கியமானவர் என்பதை நிர்வாகம் உணர்ந்து கொண்டது.

அதன் பின்னரும் தன்னுடைய விளாசலை கெய்ல் கைவிடவில்லை. இப்போது ஆறாவது ஐ.பி.எல். தொடரில் முப்பது பந்துகளில் சதம் அடித்து அதிவேக சதம் என்ற சாதனையை படைத்துள்ளார். இது தவிர ஐ.பி.எல். தொடரில் அதிக சிக்சர்கள், அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டம், அதிகூடிய தூரம் அடித்த சிக்சர், ஒரு இன்னிங்சில் அதிகூடிய தனிநபர் ஓட்டம் என்று ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார். அவரது விளாசலை பார்க்கும்போது இன்னும் நான்கைந்து வருடங்களுக்கு 'கெய்ல் புயல்' ஓயாது போலவே தெரிகிறது.

---

# தாய் நிலம் 13

–சபா கோபன்



காணி நிலம் வேண்டும்
என் சொந்த
காணி நிலம் வேண்டும்

உயர்காப்பு வலயம்
உள்வாங்கிக் கொண்ட
என் காணி நிலம் வேண்டும்

பட்டைகட்டி துலாமிதித்து
என் பூட்டன்
நிலம் செழிக்க நீர் இறைத்த
அந்த தோட்டத்துக் கிணத்திலே
ஒரு வாளி தண்ணியள்ளி
என் தொண்டை
நனைத்திடல் வேண்டும்
என் காணி நிலம் வேண்டும்

ஆயிரமாய் சப்பாத்துகள்
சுருத்திச் சென்றாலும்
இலட்சங்களாய் சில்லுகள்
உருண்டு திரிந்தாலும்
அழியாது சுவடுகள்
எந்தனது முன்னோரின்
வெறும் கால் சுவடுகள்

சாகாது இன்னும்
பத்திரமாய் அங்கு
உயிர்ப்போடு இருக்கின்றன
அழியாது ஒருநாளும்
வெறும் கால் சுவடுகள்

அங்கு நான் விட்டு வந்த
என் பிஞ்சுப் பாதங்களின்
முற்றாத சுவடுகளை
பழுத்து நான் விழ முன்னர்
பார்த்தாக வேண்டும்
போகவிடு என்னை
என் காணி நிலம் வேண்டும்

என் ஆச்சி அப்புவின்
சிரிப்பும் அழுகையும்
உழைப்பும் வியர்வையும்
துயரும் குதூகலமும்
வாழ்வும் எல்லாமும்
அதிர்வுகளாய் இப்போதும்
அங்குதான் கேட்கிறது

என் பிள்ளைகளின்
பேரர்களின்
சிரிப்பையும் அழுகையையும்
கொஞ்சலையும் மழலையையும்
கொஞ்சம் கொஞ்சமாய் நான்
சேகரித்து வைத்துள்ளேன்
கொண்டு சென்று என் நிலத்தில்
விசிறி விதைக்க வேண்டும்
விடு என்னை போவதற்கு
என் காணி நிலம் வேண்டும்

என் பாட்டனோடும் அப்பனோடும்
எந்தன் சின்னவயது நாள்களோடும்
சேர்ந்திருந்த தேனீக்களின்
வண்ணாத்திப் பூச்சிகளின்
செம்பகங்கள் குருவிகளின்
மண்புழுக்கள் எல்லாத்தினதும்
வாரிசுகள் வந்து
என்னோடும் வாழ வேண்டும்
எல்லோரையும் போகவிடு
என் காணி நிலம் வேண்டும்

கள்ளியும் நெருஞ்சியும்
தொட்டா சுருங்கியும்
கோரையும் அறுகும்
குப்பைமேனியும் மூடி
ஏர் ஏறாத இரும்பாகி
என் மண் கிடந்தாலும்
அதுதான் எனக்கு வேண்டும்
உழைப்பிலும் களைப்பிலும்
உள்ளம் குளிரும்
என் காணி நிலம் வேண்டும்

பொக்குவாய் பூட்டி
என் முகம் பார்த்து
புன்னகைத்ததும்

அம்மம்மாவின் மடியிருந்து
கதைகேட்டதும்

நிலாக்காட்டி என் அம்மா
சோறூட்டியதும்

மாமாக்களோடு நானிருந்து
மாட்டுக்கு
பனையோலை சிழித்ததுவும்

எல்லாமும் நிகழ்ந்த
அந்த முற்றம்
எனக்கு வேண்டும்
என் பிள்ளைக்கு
நிலாக்காட்ட சோறூட்ட
என் பேர்த்திக்கு கதை சொல்ல
அந்த முற்றம் தான்
எனக்கு வேண்டும்
என் காணி நிலம் வேண்டும்

ஆயுதங்கள் நடுவதற்கு
செம்பாட்டு மண்கேட்கும்
முட்டாள் தோழனே
என் மண்ணை
என்னிடம் தா!

பயிர் நடுவேன்
பண்பாடு நடுவேன்
உயிர் நடுவேன்
உண்மையும் உணர்வும்
மனிதமும் நடுவேன்
உறவும் நடுவேன்...

எல்லாம் முளைத்து
நீயும் நானும்
வாழும் தேசம்
பூத்துக் குலுங்கும்
என் மண்ணை
என்னிடம் தா....

அக்கினிக்குஞ்சு வளரும்
என் நெஞ்சுக்கு முன்னே
சுடுகுழல் நீட்டி வெருட்டாதே...

எங்கள் தோட்டத்து வெருளிகளின்
கைகளிலும் கருவியேறும்
விலத்து வழியைவிடு
என் பரம்பரைச் சுடலையிலே
என்னையும் எரியவிடு

விடுமுறையில் ஒருமுறை
ஊருக்குப் போய்
உன் வீட்டுக் கோடியில் நின்று
சிறுநீர் கழித்துப்பார்
என் உணர்வுகள் புரியும்
போகவிடு என்னை

காணி நிலம் வேண்டும்
என் சொந்தக் காணி நிலம் வேண்டும்

உயர்காப்பு வலயம்
உள்வாங்கிக் கொண்ட
என் காணி நிலம்தான்
எனக்கு வேண்டும்
என் காணி நிலம் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்பதரை மணியிருக்கும் . வாசுகியின் பூட்டப்படாத இரும்புக் கேற்றடியில் ஒரு மோட்டார் பைக்கின் உறுமல். சற்று நேரத்துக்கெல்லாம் கேற்றை இடித்துத் தள்ளித் திறந்து கொண்டே ஒரு கரிய நெட்டை உருவம் வீட்டின் முன்னே வந்தது. கதவை அந்த உருவம் பலமாகத் தட்டியது."



- அ.இராசதுரை, கட்டுவன்

# வெளிச்சம்

"இந்த வாசுகியின்ர பிள்ளையளுக்கு அப்பா ஒண்டில்லை. பல பேர்"

குடும்ப அட்டைகள்,அடையாள அட்டைகள் மீளாய்வு செய்த அந்த அமளியில் இப்படி 'ஜீயெஸ் ஜீவானந்தம்' வாய்கிடவாமல் இந்த வாசுகியின்ர உறவினரொருவரிடம் ஒரு 'இன்ரிமேற்றோடு' கதைத்துத் தள்ளி விட்டார். இந்தக் கதை வாசுகியின் காதுக்குள்ளும் தடக்குப்படாமல் நுழைந்து, பெரிய 'ஜீயெஸ்' குண்டாக வெடித்துச் சிதறியது.

''இந்தப் புழுக்கிடங்குக்கு வேலையென்ன? என்ரை பமிலியையும் பிடித்து ஆய்வு செய்யிறதோ..?'' இப்படி வாசுகி பொல்லாத மன வேகத்தோடு மண்வெட்டியை எறிந்து விட்டுத் திரும்பினாள் .அதற்கிடையில் வாசுகியின் முன்னால் புத்தம் புதிய மோட்டார் பைக்கொன்று சடுதியாய் வந்து அற்றென்ஷனில் நின்றது.

பட்டு முடித்துவிட்ட களைக்கும், சரியான வெப்பத்துக்கும் நல்ல ஜில்லென்ற குளு குளு நீர் வீழ்ச்சியில் குளிப்பது போல் அந்த வரவு அமைந்தது. வந்தவன் வாசுகியுடன் சின்ன வயதில் இருந்தே ஒன்றாகப் படித்தவன். முள்ளிவாய்க்காலில் வாசுகியின் கணவர் இறந்த போது அவன்தான் கூடமாட இருந்து அவள் மீண்டும் சுய நிலைக்கு வரும் வரை உதவி செய்தவன். அத்தோடு வாசுகியின் பிள்ளைகள் மீதும் அதிக அன்பு கொண்டவன். சிறு வயதிலேயே கணவனை இழந்துவிட்டதால் வாசுகியின் மீது, ஜீயெஸ் போல நிறையப்பேர் அவதூறுகளை அள்ளிவிடுவதுண்டு.

வாசுகிக்கு கணவர் இறந்த பின்னர் வீடும் , நாலைந்து காணிகளும் தான் எஞ்சின. அதைக் கொண்டுதான் தன்னுடைய இரு பிள்ளைகளையும் ஆளாக்க வேண்டும். காணிகளில் சிறு கட்டடம் ஒன்றை அமைத்து ,கம்பஸ் பெடியளுக்கு வாடகைக்கு விட்டிருந்தாள். மூன்று நேர சாப்பாட்டையும் அவளே குறைந்த விலைக்கு அவர்களுக்கு கொடுத்தாள். அவர்களும் "அன்ரி அன்ரி" என்று அவள் மீதும் ,அவளின் குழந்தைகள் மீதும் அன்பை பொழிய தவறவில்லை. இதெல்லாம் ஊரவரின் கண்களை உறுத்தத் தவறவில்லை. கள்ளம் கபடமற்ற உறவுக்கு கள்ள உறவு என்னும் சாயம் பலமாகவே பூசப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த நண்பனிடம் மனதில் இருந்ததை யெல்லாம் வாசுகி கொட்டித் தீர்த்தாள். அவனும் ஆறுதல் சொல்லிவிட்டு, வாசுகியின் குழந்தைகளோடு கொஞ்ச நேரம் விளையாடி விட்டு வெளியேறினான். வாசுகிக்கு இப்போது தான் மனம் லேசானது போல இருந்தது.

நண்பனின் மோட்டார் பைக் வாசுகியின் வீட்டுக் கேற்றைத் தாண்டும் சமயம் எதிர்த்திசையிலிருந்து ஸ்பீட்டாய் வந்து கொண்டிருந்த 'ஜீயெஸ்ஸின்' புத்தம் புதுசான நீலக்கலர் மோட்டார்பைக் அதனை நெற்றி முட்டாய் விலத்திப் போனது.

மோட்டார் சைக்கிளில் விரையும் தனது நண்பனை ஒரு மாதிரி நக்கல் சிரிப்போடு ஜீயெஸ் தாண்டிச் சென்றது வாசுகிக்கு என்னவோ போலிருந்தது.

'இந்த உதவரங்கெட்ட ஜீயெஸ்சுக்கும் ஒரு ஸ்ரெடியான பொலிசி கிலிசியும் உண்டோ? அவரை அவற்றை அலுவலகத்தில் வைத்து நெற்றி முட்டாய் நாலு சூடானமறுமொழிகள் கேட்டு தொலைத்து விட வேண்டும்' என்று அவளுக்குள் மன அவதி கிளம்பியது. ஆனால் அது முடியாதே எனவே ஜீயெஸ்சோடு நல்ல வாரப்பாடான முன்வீட்டு ரோகினியின் காதில் சொல்லவேண்டியதை சொன்னால் ,அது ஒட்டமெற்றிக்காக ஜீயெஸ்சின் காதில் போய்விடும் எனவே ரோகினியின் வீட்டுக்கு வாசுகி போனாள்.

"இந்த மாதிரியெல்லாம் வாயுளைவில் கதைத்து முடித்துவிட்ட கேவலமான ஜீயெஸ்சுக்கு முன்னால் கடைசி மட்டும் ,.என்ன தலையழிவு தான் வந்தாலும் குடும்ப அட்டை, அடையாள அட்டை ஆய்வுக்குப் போகப் போவதில்லை'' என்று சபதம் போட்டாள் வாசுகி. அத்தோடு ஜீயெஸ்சைப் பற்றி ஒரு அவதூறு புராணத்தையும் பாடினாள் அவள். வாசுகி சொல்வதெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு,

"சீ.. விசரி. பேசிசி. நீயென்னடியப்பா? என்ன லூஸ் கதையெல்லாம் கதைக்க வெளிக்கிட்டிட்டாய்? இந்த ஜீயெஸ்சோடை நீ பைற் பண்ணி நீயென்னடியப்பா செஞ்சு முடிக்கப் போறாய்? மெய்யே, நாளைக்கு இந்த ஆமிமார் திடுகூறாக வந்து செக்கிங் எண்டு சொல்லி, அடையாளஅட்டை, குடும்ப அட்டைகளை காட்டச்சொல்லி வந்து கேட்டால் நீயென்னடியப்பா செய்வாய்? அவங்களோடையும் இந்த ஜீயெஸ்சைப் பற்றி 'லோ' பேசி வெல்லப்போறியோ? என்ன, ஆர் என்ன கதைச்சாலும் நாங்கள் கரெக்ட் எண்டால்ஒரு பிரச்சினையும் இல்லையே" இப்படியெல்லாம் ஜீயெஸ்சுக்காக உள்ளாந்தரமாய் சைட் பண்ணிக் கதைத்தாள் ரோகினி.

ரோகினியை மனதுக்குள் திட்டிய வாறே வெளியே சிரித்துப் பேசிய படியே விடைபெற்றாள்வாசுகி.

திடுகூறாய் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மூன்று எடுப்பான பெடியள் ஆளுக்கொரு பார்சலோடு அவளுடைய கேற்றடியில் வந்து இறங்கினார்கள். முன்பு அவளுடைய ரூமில் வாடகைக்கு இருந்த கம்பஸ் பெடியள்தான். கையில் இருந்த பார்சல் 'பேர்த்டே கிப்ட்' என்பதை அதைச் சுற்றிக்கட்டியிருந்த சிவப்பு வர்ண றிபன் சொல்லாமல் சொல்லியது.

'என்னுடைய மூத்தவளின் பேர்த்டேக்கு இன்னும் ஒரு கிழமை இருக்கே. இவங்கள் இப்பவே பார்சல்லோட வந்துட்டாங்கள். சில வேளை திகதியை மாறி நினைச்சிட்டாங்களோ தெரியேல. ' என்று நினைத்தவாறு வந்த பெடியளை வாய் நிறைய சிரிப்போடு வரவேற்றாள் வாசுகி.வந்தவர்களிடமும் ஜீயெஸ் தன்னைப்பற்றி ஊரெல்லாம் பரப்பி வரும் கதைகளை சொல்லி மனப் பாரத்தை இறக்க வேண்டும்என்று எண்ணிக் கொண்டாள்.சில வேளைகளில் தான் சொன்ன கதையை கேட்டு ஆத்திரத்தில் அவர்கள் ஜீயெஸ்சை போட்டுத் தாக்கியும் விடுவார்களோ என்ற அச்சமும் அவளுக்கிருந்தது. ஏனெனில்,

"அன்ரி, எங்கட அம்மா கூட உங்களை மாதிரி கவனிச்சு சாப்பாடு தந்ததில்லை." என்று அடிக்கடி சொல்வார்கள். கிட்டத் தட்ட தங்களுடைய,இன்னொருதாயாகவே அவளைப் பார்த்தவர்கள். அவளும் அப்படித்தான்.

"வாங்கோடா. கையில் என்ன பார்சல்?" என்று வாசுகி வந்தவர்களிடம் கேட்டாள்.

"அன்ரி! இண்டைக்கு ஜீயெஸ் ஜீவா அங்கிளின்ர கடைசி மகளுக்கு பேர்த்டே. அதுதான் பார்ட்டிக்குப் போறம். " என்று அவள் கனவிலும் நினைத்துப் பார்க்காத விடயத்தைச் சொன்னார்கள். இவர்களுக்கு எப்படி அவனுடன் தொடர்பு? இனி எப்படி ஜீயெஸ் பற்றி எப்படி இவர்களுக்குச் சொல்வது? அவள் சொல்ல வந்ததையெல்லாம் மனதுக்குள்ளேயே பூட்டிக்கொண்டாள்.வந்த பெடியளிடம் பழைய அன்பு காணாமல் போயிருந்தது. வழமையாகவே அவர்களின் அடிபட்டு விளையாடும் வாசுகியின் பிள்ளைகளை கூட பெரிதாக கவனித்ததாக தெரியவில்லை. பார்ட்டிக்குப் போகவேண்டும் என்ற அவசரமே அவர்களிடம் அதிகமாக தென்பட்டது.

அவர்களிடம் எல்லாவற்றையும் சொல்லி அழலாம் என்ற எண்ணத்தையும், தன்னையும் சேர்த்து திட்டிக் கொட்டிக் கொண்டே மனதுக்குள் நொருங்கிப் போனாள் வாசுகி.

இரவு .

நல்ல அமாவாசை இருட்டு. அத்தோடு நீண்ட நேர மின்வெட்டும் சேர்ந்து இருளுடன் டூயற் பாடிக் கொண்டிருந்தது.

ஒன்பதரை மணியிருக்கும் . வாசுகியின் பூட்டப்படாத இரும்புக் கேற்றடியில் ஒரு மோட்டார் பைக்கின் உறுமல். சற்று நேரத்துக்கெல்லாம் கேற்றை இடித்துத் தள்ளித் திறந்து கொண்டே ஒரு கரிய நெட்டை உருவம் வீட்டின் முன்னே வந்தது. கதவை அந்த உருவம் பலமாகத் தட்டியது.

"ஆர் இந்த நேரம்? உந்தச் சத்தத்தில பிள்ளையளும் எழும்பப் போகுது" என்று வாய்க்குள் முணு முணுத்தவாறே கதவைத் திறந்தாள்.

வாசலில் நின்றவரைக் கண்டதும் அவளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"நான் தான் ஜீயெஸ் ஜீவா..." என்று வெறி கலந்த குரலில் தன்னை இருளில் இருந்து அறிமுகப்படுத்திக் கொண்டார் ஜீயெஸ்.

"இந்த இரவு நேரம் இஞ்ச என்ன அலுவல் உங்களுக்கு ? " என்று முகத்தில் அடிப்பதை போல் கேட்டாள் வாசுகி.

அதற்கு ஜீயெஸ் "ஆமி மேலிடத்தில் இருந்து ஓடர் வந்திருக்கு. இன்னும் மீளாய்வு செய்யாத ஆக்களின்ர குடும்ப அட்டை , அடையாள அட்டை எல்லாத்தையும் அவை அவையின்ர வீடுகளுக்கு இரவிலையாவது போய் ஆய்வு செய்யச் சொல்லி ஓடர். அதுதான் வந்தனான்." வெறியிலும் தான் வந்ததுக்கு சாட்டு ஒன்றை சொன்னார் ஜீயெஸ். அவர் முழுப்பூசணிக்காயையல்ல, முழு உலகத்தையுமே சோற்றுக்குள் புதைப்பதை உணர்ந்து கொண்டாள்.

ஜீயெஸ் வெறியோடு உள்ளே நுழைய முற்பட்டார். கண்களில் வேறொரு வெறி. வாசுகியின் கைகளை தொட முனைந்தார்.

"நான் ஒபிஸ்ல சொன்ன கதையை பெரிசா எடுக்காதேயும்" என்று நாய்க்குட்டி போல குழையத் தொடங்கினார்.

"தனிய இருந்து எப்படி பிள்ளையளை கரை சேர்க்கப் போறீர்? நீர் ஓமெண்டால் கடைசி வரை ஒரு குறையும் இல்லாமல் வைச்சிருப்பன்.'' என்று இன்னும் வார்த்தைகளை அள்ளிவிட்டார். 'வைச்சிருப்பன்' என்ற சொல்லை கொஞ்சம் அழுத்தமாகவே சொன்னார். வாசுகி எப்படியும் மடிந்துவிடுவாள் என்பது அவர் கணக்கு.

"வெளியில போடா " என சொல்லிக்கொண்டு ஜீயெஸ்சை தள்ளிவிட்டாள். படீரென்று கதவை அடித்துச் சாத்தினாள். ஜீயெஸ் வெளியே மல்லாக்காக விழுந்தார். அந்த நேரம் பார்த்து மின்சாரமும் வந்திருந்தது. எங்கும் வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் ஜீயெஸ்சின் சாயம் வெளுக்கத் தொடங்கியிருந்தது. தள்ளாடியபடி மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்கத் தொடங்கினார். வாசுகி பிள்ளைகளை அணைத்துக்கொண்டாள் . இப்போது அவள் மனம் பாரம் குறைந்து நிம்மதி அடைந்திருந்தது. தூரத்தே நாய்களின் குரைப்பொலியும் அவற்றிடம் கடிவாங்கி அலறும் ஜீயெஸ்சின் குரலொலியும் அவளின் காதுகளில் விழுந்தன. இதழ்களில் மெல்லிய புன்னகை விரிய அப்படியே உறங்கிப் போனாள். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன- இந்திய எல்லையில் ஏற்பட்டுள்ள புகைச்சல்

## அமைதியாகத் தீருமா? அடிதடியில் முடியுமா?

■ ரெங்கன்

"இந்த எல்லை விவகாரம் பெரும் பிரச்சினையாக மாறக் கூடாது என்றே இந்த இரு நாடுகளதும் நட்பு நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கருதுவார்கள்.

சீனாவுக்கும்- இந்தியாவுக்குமிடையில் காஷ்மீர் எல்லைப்பகுதியில் மீண்டும் ஒரு தடவை முறுகல் நிலை உருவாகக் கூடிய சூழ் நிலைகள் தென்படுகின்றன.

ஏற்கனவே இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்ட எல்லை மோதலானது இரு தரப்புகளுக்கும் இடையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தமை உலகப் பிரசித்தம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இரு நாடுகளுமே இராணுவ ரீதியில் இன்று போல் முன்னேற்றம் கண்டிருக்கவில்லை. இன்று சீனாவிடம் மட்டுமல்ல இந்தியாவிடமும் அணு ஆயுதங்கள் உண்டு. தரைப் பகுதிகளில் மட்டுமன்றி கடற்பகுதிகளிலும் இரு நாடுகளும் போட்டியிட்டு முன்னேறிவருகின்றன.

பொருளாதார மட்டத்திலும் இரு நாடுகளும் முன்னேறி வருகின்றன. நில அளவிலும் மனித வளத்திலும் இரு நாடுகளுமே பெரியவைதான். பொதுவில் சொல்லப்போனால் தென்னாசியாவில் வேகமாக வளர்ந்தவரும் இந்த நாடுகள் பெரிய அளவில் இராணுவப் பலப்பரீட்சையெதிலும் இறங்குவதெனால் அது பற்றி பல தடவைகளிலும் ஆலோசித்து பின்பே செய்ய வேண்டியிருக்கும். எல்லைப் பிரச்சினைக்காக அபிவிருத்தியையும் ஆள் பலத்தையும் இழக்கும் நிலைக்குப் போக முடியாது. எனவே எல்லைப் பிரச்சினையை வளரவிடாமல் தீர்த்துக் கொள்வது இரு நாடுகளுக்குமே நல்லது என்பதை விட தென்னாஸிய நாடுகள் பலவும் அதனையே விரும்பக் கூடும் என்பதே சரியாகவிருக்கும்.

### குற்றச்சாட்டும் மறுப்பும்

காஷ்மீர் எல்லையில் லடாக் பகுதியில் சீன இராணுவம் சுமார் 10 கி.மீற்றர் தூரம் ஊடுருவல் செய்திருப்பதாக இந்தியத் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதேசமயம் சீனா அதனை மறுத்துவருகின்றது.

இமாசலப் பகுதியில் தொடக்கத்தில் பிரச்சினையில் இருந்து வரும் எல்லைப் பகுதியில் சீன இராணுவ அணியொன்று ஊடுருவி கூடாரங்கள் அமைத்திருப்பதாக இந்திய செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் இந்திய எல்லைக்குள் ஊடுருவியுள்ள சீனப்படைகளை விரட்டியடிப்பதற்கு தாக்குதலில் இறங்க வேண்டும் என்று இந்திய இராணுவ ஆய்வாளர்கள் இந்திய அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக ஒரு செய்தி கூறியது.

ஆனால் எல்லைப் பிரச்சினையில் மிகுந்த நிதானத்துடனேயே நடந்துகொள்ள வேண்டும் என இந்திய உயர் அதிகாரிகள் கருதுகின்றனர். நாட்டின் பாதுகாப்பை விட்டுக் கொடுக்க முடியாது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்கள் அந்தோனி பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். பேச்சுக்கள் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### குர்ஷித் சீனா செல்கிறார்

இந்த சூழ்நிலையில் மே 9 ஆம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் சீனாவுக்கு செல்லவிருப்பதாக அறிவித்துள்ளார். குர்ஷித் சீனாவுடனான எல்லைப்பிரச்சினை குறித்து பேசப் போகிறாரா அல்லது மே 20 ஆம் திகதியளவில் சீனப் பிரதம மந்திரி லீ கெசியாங் இந்தியாவுக்கு வரவிருப்பது தொடர்பாகப் பேசப் போகிறாரா என்பது தெரியவில்லை. எதுவானாலும் இந்த இரு அண்டை நாடுகளுக்குமிடையில் எல்லைப்பிரச்சினையொன்று உச்சமடைந்துள்ள நிலையில் குர்ஷித்தின் பயணம் நிகழவிருக்கிறது. சீனப் பிரதமர் பதவி ஏற்றதின் பின்னர் லீ மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் என்பதால் அவரது இந்தியப் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று இரு நாடுகளுமே விரும்புவது சாத்தியம். எனவே இந்த எல்லை விவகாரம் பெரும் பிரச்சினையாக மாறக் கூடாது என்றே இந்த இருநாடுகளதும் நட்பு நீடிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கருதுவார்கள்.

லடாக் பகுதியில் சீனா நடத்தியிருக்கும் இந்த ஊடுருவலானது இந்தியாவை புதிய எல்லை ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள முன்வரும்படி வற்புறுத்துவதாக இருக்கலாம். அல்லது எல்லைப் பகுதியில் இந்தியா தனது இராணுவப் பலத்தை அதிகரித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் இருக்கலாம் என்று டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை கருத்து வெளியிட்டிருக்கிறது.

தனது படைகளை நீக்கிக் கொள்வதனால் இந்தியா எல்லையில் அமைத்துள்ள இராணுவ நிலைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று சீனா கூறியிருப்பதாக முன்னர் வந்த செய்திகள் கூறியிருந்தன.





### பொஸ்டன் தாக்குதல் புதிய தகவல்கள்

அமெரிக்காவில் பொஸ்டனில் நடைபெற்ற பயங்கர குண்டுத் தாக்குதல் தொடர்பாக தற்போது காவலில் இருக்கும் ஷோக்கர் சார்னேவ் தனது சகோதரன் தான் அதற்குத் தலைமை வகித்திருந்ததாகப் புலனாய்வாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். எந்த ஒரு சர்வதேச பயங்கரவாத இயக்கமும் அதன் பின்னணியில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் சம்பந்தப்பட்டவர்களாக இருந்துள்ள சகோதரர்கள் இருவரும் தாங்களாகவே புனித போர் புரிவதற்கான தீவிரவாதிகளாக மாறிக் கொண்டவர்கள் என்று கருதுவதற்கு இடமிருப்பதாக அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் கூறியதாக தெரிய வந்துள்ளது. ஷோக்கர் சர்னேவ் காயமுற்று இப்போது பொஸ்டன் [illegible] வாரம் கொல்லப்பட்ட தனது சகோதரனான டாமர்லன் (26) இஸ்லாத்தைக் காப்பாற்றுவதற்காக பாதுகாப்பில் ஈடுபட விரும்பியதாகக் கூறினார்.

மூன்றுபேர் கொல்லப்பட்டு 100 பேர் வரை காயமடைய காரணமாயிருந்த குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக 19 வயதான சார்னேவ் மீது கொலை குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தொடரப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்த இரு சகோதரர்களின் தந்தை ரஷ்யாவில் இருக்கிறார். தமது பிள்ளைகள் படிப்பதற்காக அமெரிக்கா சென்றார்கள் என்றும் அவர் ஒன்றும் அறியாத நிரபராதிகள் என்றும் அவர் கூறியுள்ளார். அதிகாரிகள் தொலைக்காட்சியில் காட்டுவதைத் தான் பார்க்கிறேன். காயமடைந்துள்ள இளைய மகனைப் போய்ப் பார்ப்பதற்கு பொஸ்டன் போக விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது மகன்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அமெரிக்க புலனாய்வாளர்களால் புனையப்பட்டவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### கடவுள் துகள்களுக்குப் புதிய பெயர்

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த குழுவொன்று பொஸ்டன் மரதன் ஓட்டத்தின் போது நடந்த குண்டுவெடிப்பின் சந்தேகநபர்களின் பெற்றாரை பேட்டி காண்பதற்காக அவர்கள் வாழும் ரஷ்யாவின் டாகோஸ்ஸ் பகுதிக்கு சென்றுள்ளது. அந்தப் பகுதியில்தான் ஜெஸ்தான் என்ற இடத்தில் சந்தேக நபர்களின் பெற்றார் இப்போது வாழ்ந்து வருகிறார்கள். அது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதி என்று கூறப்படுகிறது.

ஹிக்ஸ்பொசன் என்று கடவுள் தூதர்கள் அழைக்கப்படுவதற்குப் பதிலாக புதிய பெயர் ஒன்றை நிர்ணயிக்க விஞ்ஞானிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

கடவுள் துகள்களை (God Particle) கண்டுபிடித்தவரான பீட்டர் ஹிக்ஸ் என்பவரின் பெயரால் அது இவ்வளவு காலமும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இந்த ஆராய்ச்சியில் வேறு பலரும் ஈடுபட்டிருந்தமையால் அவர்களுக்கும் இதன் பெருமையில் பங்களிக்கும் விதத்தில் பெயர் அமைய வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலாளராகவிருந்த ஹிக்ஸ் 1964 ஆம் ஆண்டு ஒரு ஆய்வுப் பத்திரத்தில் கடவுள் துகள்கள் இருப்பதற்கான கருத்தை வெளியிட்டிருந்தார். ஆனால் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆறு பேர்களில் ஒருவரே இவர் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்தப் பெரும் புகழில் ஏனையவர்களுக்கும் பங்களிக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் வாதம்.

ஹிக்ஸ் ஆய்வுப் பத்திரிகை வெளிவருவதற்கு முன்பே பெல்ஜிய பௌதிகவாளர்கள் ரொபேர்ட் பிரவுட் மற்றும் பிராங்கொயிஸ் எங்லேட் என்பவர்களின் பத்திரிகைகள் வெளி வந்திருந்தன.

எனவே BEH துகள்கள் என்று அதை அழைக்கலாம் என்றார்கள் விஞ்ஞானிகள். இந்த விடயம் பௌதிக ஆய்வாளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

### முஷாரஃப்புக்கு பிணை மறுப்பு

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கொலை வழக்குத் தொடர்பாக முன்னாள் இராணுவ ஆட்சியாளர்கள் பர்வேஸ் முஷாரப்புக்கு வழங்கப்பட்டிருந்த பிணையை பாகிஸ்தான் நீதிமன்றம் நீடிப்பதற்கு மறுத்துவிட்டது.

ஏற்கனவே 2007 ஆம் ஆண்டு முஸாரப் பதவியிலிருந்தபோது அவசர காலத்தைப் பிரகடனம் செய்து நீதிவான்கள் பலரை பதவியிலிருந்து நீக்கியது தொடர்பான வழக்கில் அவர் இரண்டு வார கால வீட்டுக் காவலில் இருந்து வருகிறார்.

முஷாரப்பின் பிணை மனு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டு விட்டதை பத்திரிகையாளர்களிடம் விளக்கிய அரச தரப்பு வழக்கறிஞர், அரசின் புலனாய்வாளர்கள் இனி அவரைக் கைது செய்வார்கள் என்றும் தெரிவித்தன.

பெனாஸிர் பூட்டோவைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியதாக முஷாரப் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். 2007 ஆம் ஆண்டு பெனாஸிர் பூட்டோ துப்பாக்கி சூட்டினாலும் தற்கொலைக் குண்டு தாக்குதலினாலும் கொலை செய்யப்பட்டார்.

பூட்டோவின்கொலைதொடர்பாக எவருமே குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்படவோ சிறையில் அடைக்கப்படவோ இல்லை. அந்த மரணத்துக்கு பாகிஸ்தான் தலிபான் தலைவர் பெய்துல்லா மெஹ்சுட் தான் பொறுப்பு என்று முஷாரப்பின் அரசு கூறி வந்துள்ளது. ஓகஸ்டில் நடந்த அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலால் கொல்லப்பட்டார். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணி தூக்கிகளும் கணினிப் பே

செந்தூரி



மண்ணாசை பொல்லாதது! கௌரவர்களை அவர்களின் சகோதரர்களைக் கொண்டே கொல்லச் செய்து, கலைஞர் கருணாநிதிக்கு ''சகோதர யுத்தம்'' என்ற சொற்பதத்தை அறிமுகம் செய்து வைத்த பொல்லாப் பேராசை . கலிங்கத்தின் முடிவில் அசோகனை, போதி தர்மத்துக்கு திருப்பியது. நெப்போலியனின் வரலாற்றுத் தோல்வியை ''வாட்டர்லூ'' என்று அகராதிகள் ஏற்றுக் கொள்ளக் காரணமானது. நுணுக்கத் திட்டமிடலாளனாக உலக ஏடுகளில் பெயர் பெற்றிருக்க வேண்டிய அடோல்ப் ஹிட்லரை சர்வாதிகாரியாக்கி , காறி உமிழச் செய்தது. சர்வதேச உதாரணங்களை எல்லாம் பொடிப்பொடியாக்கும் வண்ணம், இன்றளவு வரைக்கும் கந்தையா பிள்ளைகளையும், எண்ணற்ற பாக்கியநாதன்களையும், காலங்களை வென்ற சிவசோதிகளையும், அந்தோனிமுத்துகளையும் நீதிமன்ற வாங்குகளில் அழுந்தி இழுபடச் செய்கின்றது. யாழ்ப்பாணத்தவர்களின் வரலாற்றுப் பிசுக்கில் 'வேலி'களுக்கென்று நிரந்தரமானதொரு அழுக்குக் கறுப்பு இன்னமும் ஒட்டியேயிருக்கின்றது. 'நாவூறு' பட விடாத மச்சமென்று எம்மை நாமே ஆசுவாசப்படுத்தினாலும் கூட, வேலிகளைப் பற்றிய தகராறுகளும், கலைபாடுகளும்- 'மண்ணாசையின் முதற்பொறியை எம்முன் வீழ்த்தியமைக்கான சான்றுகள் 'எல்லை கதிகாலுக்கு எண்ணெய் ஊற்றுதல்', 'ஆளில்லாக் காணிக்குள் தவணைக்கு அரையடி அரக்குதல்', 'புதுக் கதிகால்களை வெளிப்புறத்தால் இடுதல்', 'எல்லைப்புற கல்லை இல்லையென்றாக்குதல்', 'பங்குக் கிணத்துக்கு வரும் பாதையை மறித்தல்', 'வழி வாய்க்கால் பங்கில் கேளாமலே குறுக்கு மறிப்பிடுதல்' போன்ற உப்பரிகைகளில் ஏறி கெக்கட்டமிட்டுச் சிரித்து தன்னை அவ்வப்போது இனங்காட்டி விடுகின்றது எம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் 'மண் மேல் ஆசை'. வேடிக்கையென்னவென்றால் , சித்தப்பன், பெரியப்பன், தாய் மாமன் நிலங்களை 'பாலிருக்கச் சட்டி களவாடும்' பாணியில் பாதி பாதியாக்கிய எம்மிரு இமைகளின் நடுவில் தான்,

சரி பாதிக்கு மேற்பட்ட கரையோரங்களை உள்ளடக்கிச் சிவப்பு மையினால் எல்லையிடப்பட்ட தனித் தேசமொன்றுக்கான கனவு இன்னமும் தூங்காது விழித்திருக்கின்றது. சுய விமர்சன விவாதங்களின் போது, மறுவாதமில்லாமல் கடந்து போகின்ற ''தமிழீழ நினைவின்'' மீதான ஆத்மார்த்தமான பற்றுதல் என்ற ஒன்று மட்டுமே எம்மவர்களின் 'தனி மன அசிங்கங்களை' நைலோன் திரையிட்டு மறைத்து வந்திருக்கின்றது. கொஞ்சம் கண்ணூன்றிப் பார்த்தால் மாற்றான் கரு விழிகளுக்கும் காட்டிக் கொடுத்து விடுகின்றது 'முரளி' களைப் போல்??

இனவழிப்பின் வெற்றிப் பெருமிதத்தோடு கைகளை உயரே தூக்கிப் பிடித்து வெளியிடப்பட்ட ஆயிரம் ரூபாத்தாளின் பின்புறம் திருப்பினால், ஆயுதம் தரித்தவர்களின் பின்னணியில் தெரியும் 'குடும்பிமலை'- தொப்பிகல வென்று நாம வியாக்கியானம் தரித்ததில் தொடங்கின. எமதின்றைய அவலங்கள், கிழக்கு மாகாணத்தின் பாரம்பரியங்களையும், பல் பரிமாணமுள்ள கர்ண பரம்பரைக் கதைகளையும் தன்னுள் புதைத்துக் கொண்ட இந்த எச்சக்குன்று, எம்மால் இழக்கப்பட்ட - எம்மிடமிருந்து அடித்துப்பிடுங்கப்பட்ட காலடி மண் திரட்டுக்களின் கும்பி. 'மணலாறு' வெலிஓயா ஆன போது கொந்தளிக்கத் தவறிய எம்மவர்களின் அசிரத்தை இன்றைய நாள் வரைக்கும் எமக்கு வலியாக தந்துவிட்டுப் போயிருக்கும் 'நிலப்பிடுங்கல்கள்' ஏராளம். தனியார் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தும் போது பதறுகின்ற நெஞ்சங்கள், புறம்போகும் நிலங்களில் படையினர் நிரந்தரமாகும் போது அமைதியாகவே கடந்துவிடுகின்றன. வடமராட்சிக்கு செல்லும் வழியில் வல்லை முச்சந்தியினருகில் நீரேரியோரமாக நின்றிருந்த சுவுக்கங்காட்டில் குளிரூட்டி வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் நிரந்தர இராணுவக் குடியிருப்புகள் கண்ணில் படாத குருடர்கள் எம்மில் எத்தனை பேர்? யாழ்ப்பாணத் தமிழர்களிடம் சிங்கள ரத்தம் தான் ஓடுகின்றது.' என்று படைத்தளபதி எகத்தாளம் பேசும் வரை 'இரத்த தானத்தை' ஆரோக்கிய குறைபாட்டுக்கானதென்று நம்பிக்கை வளர்த்து வைத்திருக்கும் பேதைகள் எம்மில் எத்தனை பேர்? திருநெல்வேலிச் சந்தையில் கத்தரிக்காய் மூடையை கிலோ இருபது ரூபா அற்ப பணத்துக்கு அநியாய வியாபாரம் செய்து விட்டுத் திரும்பும் குடியானவனின் வயிற்றில் அடித்தது, பலாலியிலிருந்து கனரக வாகனங்களில் வரும்மரக்கறிகள்தான் என்பதை கேளாமலே கடந்து போகின்ற செவிடர்கள் எத்தனை பேர்? இரணைமடு காலம் தப்பி வரண்ட போதும் வன்னியின் பரம்பரை விவசாயிகள் சுய பயிர்ச்செய்கையை கைவிட்டு வயற்கூலிகளாக உருமாறிய போதும் தேவைக்கு மேலதிகமாக தரித்து நின்று காடுழுபவர்களாக மாறி நிற்கின்ற ஆமிக்காரர்களை எதிர்த்து எங்கேயும் பேச முடியாமல் குனிந்தே செல்கின்ற ஊமைகள் எத்தனைபேர்?

இன்றைக்கு இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்கின்ற கண்ணுக்குத் தெரியாத போரின் அங்கங்களே இவை! மேற்குலகில் வாழுகின்ற புலம் பெயர் ஈழத்தமிழர்களின் செயற்பாடுகளால் பலம் பெற்று வருகின்ற அங்கீகாரக் கோரிக்கைகளுக்கு எதிர்த் தாக்குதலாக ஆளுமினம் நிராயுத பாணிகளான ஈழத் தமிழ் வாசிகளின் மேல் ஏவி விட்டுள்ள அத்துமீறல்களை கோடிட்டுக் காட்டுகின்றனர் அரசியல் அவதானிகள். 'இராணுவ மயப்படுத்தப்பட்ட மக்கள்' என்ற பாதுகாப்புச் செயலாளரின் இன்றைய செயலாக்கம் பேரினவாதிகளின் நீண்டநாள் அபிலாஷைகளில் ஒன்று! இலங்கை முழுவதும் மாணவர் போராட்டங்களினால் எழுச்சி பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில், மக்களுக்குள் மக்களாக ஒளித்திருந்த கிளர்ச்சியாளர்களை இனங்கண்டு தண்டிப்பதற்கான தேவையுடன் இராணுவப் பிரசன்னத்தை அறிமுகப்படுத்த படாதபாடு பட்டனர் அன்றைய ஆட்சியாளர்கள். இன்றைய பலவேடதாரிகளும், முன்னாள் புரட்சிக்காரருமான 'விமுத்தி பெரமுன' இளைஞர்களின் புதிய எண்ணக் கருகளுக்கு சிங்கள மக்களிடத்தே இருந்த வரவேற்பும் ஓரளவு நிலைக்கக்கூடிய அபிமானமும் அன்றைய நிலையில் 'இராணுவ மயப்படத்தப்பட்ட மக்கள்' என்ற ஆசையை நிறைவேற்றவிடாமல் தடுத்து விட்டன. ஆட்சி இயந்திரத்தை எதிர்க்கப் புறப்படுகின்ற மக்கள் என்றைக்குமே பட்டு வேட்டிக்கு 'வெல்வெட்' சால்வை கேட்டுப் போராட வருபவர்கள் அல்ல. தமக்கான ஆகக் குறைந்த உரிமை மறுக்கப்படுகின்ற போதே வீதிக்கு இறங்குபவர்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்டாலும் கூட தீர்த்து வைக்கும் மனோநிலையில் அரசியல் வாதிகள் இருப்பதில்லை. காரணம்- மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதால் வேலையில்லாத நிலைக்கு வெட்டிப் பொம்மைகளாக தாங்கள் மாற்றப்படுவோம் என்பதனால்! முடித்து வைக்கப்பட்ட முப்பதாண்டு காலப் போரின் பிறகு அடிமைகளாக்கப்பட்ட இனம் ஒன்றின் மீது தமது 62 ஆண்டுக் கனவான 'இராணுவ மயமாக்கலை' எந்தவித எதிர்ப்புமின்றி சமப்பிரயோகம் செய்து திருப்தி கண்டுள்ளனர் இன்றைய ஆட்சியாளர்கள்

வெகு அண்மையில் உலக அரங்குகளில் கூட, இராணுவ வெற்றிகள் சாத்தியப்பட்ட கண்ணீர் தேசங்களில் தேசிய மக்களிடையே தமது இராணுவ மயமாக்கல் என்ற கொள்கையில் வல்லாதிக்க தேசங்களால் முற்று [illegible] முடியவில்லை. [illegible] ஈராக்கின் மக்களோடு மக்களாக கலந்திருக்காத போதிலும் ஈராக்கின் வீழ்ச்சியின் பின்னரான அடுத்தடுத்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் 'ஈராக்கிலிருக்கும் அமெரிக்கப் படைகளை திருப்பியழைத்தல்' எனும் வாதமும் அதற்கான நியாயப்படுத்தல்களும் அமெரிக்க வாக்காளர்களின் மனிதாபிமானத்தை வென்றெடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டமை ஊன்றி அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. தாடி வளர்த்தவர்களையும் 'பர்தா' அணிந்த பெண்களையும் பயம் கலந்த வெறுப்புடன் பார்க்கத் தொடங்கிய அமெரிக்கா தன் மீதான பொருளாதாரத் தாக்குதல்களின் ரணங்களோடு நின்ற போதும், அதே இஸ்லாமிய மக்கள் மீதான அமெரிக்க இராணுவத்தின் அடக்கு முறைகளை விமர்சித்த அமெரிக்க வாசிகள் 'மாற்றம்' ஒன்றை விரும்பி ஒபாமாவுக்கு வாக்களித்ததன் பிற்புலத்தில் 'இராணுவ வெளியேற்றம்' என்ற உத்தரவாதமும் பங்களித்திருந்தது.

ஆனால், தமது தேசத்தினுள் தமது மக்கள் என்று கூறிக்கொள்கின்ற தனித்தேசிய இனமொன்றின் மீது ஏவிவிடப்படுகின்ற இராணுவ அடக்கு முறைகளை 'பயங்கரவாதத்துக்கு பின்னான யுத்தம்' என்று நியாயப்படுத்துவதில் சிங்கள அரசியல்வாதிகளும் ஆளுமினமும் கொண்டுள்ள பிடிப்பு சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தப்படாமலே கடந்து போகச் செய்யப்படுகின்ற தமிழர்களைப் பற்றிய வெருட்டல்களில் ஒன்று. தமிழர்களைக் கண்காணிக்காமல் விட்டால் தமிழர்களை சிவில் நிர்வாகத்தோடு விட்டால் தமிழர்களிடத்தில் இராணுவத்தினரை சரிபாதியாக கலக்காமல்விட்டால் மீண்டும் காலி முகத்திடலில் கிளைமோர் வெடிக்கும். சூரிய வெவ மைதானத்துக்கு குண்டு வைப்பார்கள். மத்தல சர்வதேச விமான நிலையத்திற்குள்ளும் நெருப்போடு புகுவார்கள் போன்ற மட்டமான யுத்த பீதியில் அடிவயிறு கலங்குமளவுக்கு அரசியல் ஞானமுள்ள யதார்த்த புரிதல்களைக் கொண்ட பெரும்பான்மை மக்களையும்அவர்களை அண்டிப்பிழைக்கும் நடிப்புச் சுதேசிகளையும் காண நான்காயிரம் கண் படைத்திலன் அந்த நான்முகனே? இலங்கை வாழ் தமிழர்களே மறந்து போகத் துணிந்தாலும், விடாமல் '' நீங்கள் சிங்களவர்களை எதிர்த்துப் போராடப் பிறந்தவர்கள்'' என்ற நினைவூட்டலை தமது வாழ்வின் அன்றாட கருமங்களில் ஒன்றாக கையிலெடுத்து விட்ட எம் சகோதர (?) மக்களை எண்ணும் போதெல்லாம் கண்ணில் 'கிளிசரின்' வைத்துக் கொள்ளுகின்றான் ஈழத் தமிழன். முதல் மழைத் துளி மண்ணில் விழ முன்னரே, முட்டை கொண்டு திட்டை தேடும் எறும்பு முதலாக, நாக்கைக் கிளையாக்கி வெளிநீட்டிக் காத்திருக்கும் வாய்க்கால் தவளையாகட்டும், டிஸ்கவரி சனலில், தனியே வந்த சிங்கத்தை கூட்டமாகத் திருப்பி விரட்டுகின்ற காட்டெருமை தானாகட்டும், ''போராடாத இனம் வாழ்வதில்லை'' என்று அங்குலத்துக்கு அங்குலம் அசரீரிகளை தன்னுள் ஒளித்தே சுழல்கின்றது பூமி. வாழ்வுரிமைக்காக போராட வேண்டிய தேவையை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராளிகளும்

> தனித்தேசிய இனமொன்றின் மீது ஏவிவிடப்படுகின்ற இராணுவ அடக்கு முறைகளை 'பயங்கரவாதத்துக்கு பின்னான யுத்தம்' என்று நியாயப் படுத்தப்படுகிறது.

ஒற்றக் கணமேனும் ஓய்ந்து சாய்ந்து விடாத உழைப்பை, உறங்கும் பொழுதிலும் திறந்தே கிடக்கின்ற ஒரு கண்ணில் தூங்காத கனவை பெருமையோடு சுமக்கும் பாக்கியத்தை எமக்களித்த எதிரிகளும்- எமது நன்றிக்குரியவர்களே!

''வலுவுள்ள வாழுமினம்'' என்ற சவாலை தினம் தினம் நிரூபித்த பின்னர்தான் ஓய்வெடுக்கச் செல்கின்ற உயிர்க் கூட்டமொன்றாக, ஈழத்தமிழனும் இருப்பதை விட வேறென்ன வேண்டும் தோழர்களே?

காணிச் சுவீகரிப்பு அறிவித்தலில் கையெழுத்திடுகின்ற இளைப்பாறிய மூத்த அரச அதிகாரியின் தூரத்து முறைப் பேர்த்தியொருத்தியின், சீதனக் காணியிலும் கம்பி வேலிக்கான கொங்கிறீட் தூண் நடப்பட்டிருக்கலாம்?

இன்று வரைக்கும் '' மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி'' கோஷத்தை அழிக்காமலே வைத்திருக்கின்ற தோழர்களின் பெரியப்பாவின் நன்கொடை ஆதனத்திற்கும், 'ஹத்துருசிங்ஹ' வின் பெயரில் உறுதி முடிக்கப்பட்டிருக்கலாம்.

ஆளுநர் அந்தப்புரத்தின் இறுதிக் கதவு வரை அங்கீகாரம் பெற்றோரின், கவனத்தை ஈர்க்க முடியாமல் இறுக்கி மூடப்பட்ட கோரிக்கைக் கடிதங்களும், கண்ணீர் கதைகளும் நேற்றைய குப்பையாக கசக்கி வீசப்படலாம்? கொளுத்தப்பட்ட நான்கு குடிசைகளில், ஏதோ ஒன்றில் பசியோடு உறங்கிப் போன பாலகனின் அடிவயிற்றிலிருந்து பொறியாகித் தீயாகிப் பரவும் போராட்ட நெருப்புக்கு வழிகோலாமல் வாளா விருப்பது அவர்களுக்கும் எங்களுக்குமான வித்தியாசத்தையே சொந்தமாக்குகின்றது!

குறித்த பிரதேச மக்களின் பிரச்சினை என்ற பொருட்கோடலோடு கடந்து போகின்ற விடயங்கள் அல்ல இவை. இன்றைக்கு மயிலிட்டியிலும், முள்ளிவளையிலும் தண்ணீரூற்றிலும் தொடக்கி வைக்கப்பட்டிருக்கின்ற இதே அடக்குமுறை தான், 30 வருடங்களுக்கு முந்திய பிரபாகரனின் தோற்றத்துக்கான விதை என்ற பயம் அடக்கியாள்வோனுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்றால் எஞ்சியிருக்கின்ற ஒட்டுமொத்த ஈழத்தமிழனும் வீதிக்கு இறங்கியாக வேண்டும்.

தெல்லிப்பழையில் தரப்படாத காணிக்காக செட்டித் தெருவில் வசிக்கும் பொறியியலாளரையும் போராடச் செய்யும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் அவசரப் பொறுப்பு, தேசியம் சுமக்கும் சகல உணர்வாளர்களினதும் உடனடிக் கடமை! சிரியாவில் மண்டையுடைந்த சிறுவனை புலிட்சர் விருது பெற்ற புகைப்படத்தில் பார்த்து 'ச்சூ' கொட்டுபவனாகவும் கூடங்குளத்தில் கழுத்தளவு தண்ணீரில் இறங்கி நின்று கோஷமிடுகின்ற அலையின் மக்களைப் பார்த்து அனுதாபிப்பவனாகவும், 'இயல்பு வாழ்க்கையை பாதிக்காத போராட்டங்களில்' ஈடுபடவே விரும்புகின்ற சமகால மக்கள் கூட்டத்தை, இன்றைய வடபுலம் உட்பட்ட தமிழ்த்தேசியம் சம்பாதித்திருப்பது காலக்கொடுமைகளில் ஒன்று;

